www.Padasalai.Net www.CBSEtips.in

புதிய பதிப்பு

# பெங்குயின்

புதிய வடிவில் சிறந்த வழிகாட்டி

# தமிழ் அமுது

# 11

அரசு பொதுத் தேர்வு,
அரசு மாதிரித் தேர்வு
மற்றும்
PTA வினாக்களுக்கான
விடைகள்
இணைக்கப்பட்டுள்ளன

இலக்கு 100/100



இணைப்பு
வினா வங்கி

## பெங்குயின் பப்ளிகேஷன்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in

# பெங்குயின்

# தமிழ் அமுது

# 11

"புதிய பாடத்திட்டத்தின் படி தயாரிக்கப்பட்டுள்ளது"

இணைப்பு: வினா வங்கி

பெங்குயின் பப்ளிகேஷன்ஸ்
ஸ்ரீவில்லிபுத்தூர்

விலை
ரூ.346/-

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# முன்னுரை

கடவுளின் ஆசிர்வாதம் இருந்தால் எல்லாம் சாத்தியமே

Dr.A.P.J. அப்துல் கலாம்.

மதிப்பிற்குரிய தாளாளர், தலைமையாசிரியர், தலைமையாசிரியை, முதல்வர் மற்றும் அன்பிற்கினிய தமிழாசிரியப் பெருமக்களே!

நாங்கள் 11 ஆம் வகுப்பிற்கான (பெங்குயின்) தமிழ் அமுது, புதிய பாடத்திட்டத்தின் படி புதிய பதிப்பாக வெளியிடுவதில் மிகவும் பெருமைப்படுகிறோம்.

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமன்று. எதிர்காலவாழ்விற்கும் அடித்தளம். உங்கள் கைகளில் தவழும் பெங்குயின் தமிழ் அமுது உங்கள் மனதிற்கு இதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த தமிழ் அமுதில், பாடநூலில் உள்ள வினா மட்டுமில்லாமல் கூடுதலாக சிலவினாக்களும் அரசுத்தேர்வில் எதிர்பார்க்கப்படும் வினாக்களும் அனுபவமிக்க ஆசிரியர்களால் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. இதைப் பயன்படுத்துவதால் தேர்விற்கு மட்டுமின்றி வாழ்விலும் போட்டித் தேர்விற்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

எளிய இனிய மொழிநடை, கருத்துகளின் கோர்வையான அழகு,தமிழறிவை வளர்க்கும் சிந்தனைத் துளிகள். கற்பவை கற்றபின் பகுதியும் மனதில் அணிவகுக்கும். இவையெல்லாம் உள்ளடக்கிய எளிய தெளிவான பெங்குயின் தமிழ் அமுதை நன்கு வாசியுங்கள்..... நினைவில் நிலைநிறுத்துங்கள். அரசுப்பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்களை அள்ளிக்குவியுங்கள்.

எங்களுக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

இப்படிக்கு
பதிப்பகத்தார்.

# TO ORDERS

## SCHOOLS and TEACHERS

FOR ORDERS CONTACT 8925612359 8643007972 7010414574 8248737898

## STUDENTS

Books can be obtained through VPP

# PAYMENT METHOD

## DIRECT DEPOSIT

| | | |
|---|---|---|
| A/C Name | : | PENGUIN PUBLICATIONS |
| Our A/c No. | : | 328150050800129 |
| Bank Name | : | TAMIL NADU MERCANTILE BANK |
| IFSC | : | TMBL0000328 |
| Bank Brach | : | SRIVILLIPUTTUR. |

| | | |
|---|---|---|
| A/c Name | : | PENGUIN PUBLICATIONS |
| Our A/c No. | : | 39212649923 |
| Bank Name | : | STATE BANK OF INDIA |
| IFSC | : | SBIN0000921 |
| Bank Brach | : | SRIVILLIPUTTUR. |

**After Deposit, please call this no. 8925612359**

## MOBILE PAYMENTS

G Pay

8925612359

PENGUIN PUBLICATIONS

By Any Payment APP

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'PENGUIN PUBLICATIONS'** payable at **Srivilliputtur**

www.Padasalai.Net

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை / இயல் | பாடத்தலைப்புகள் | ப.எண் |
|---|---|---|---|
| மனப்பாடப்பகுதி | | | 1 |
| 1. | மொழி | யுகத்தின் பாடல்* | 7 |
| | **என்னுயிர் என்பேன்** | பேச்சுமொழியும் கவிதை மொழியும் | 11 |
| | | நன்னூல் பாயிரம்* | 17 |
| | | ஆறாம் திணை | 21 |
| | | மொழி முதல், இறுதி எழுத்துகள் | 23 |
| 2. | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல் | இயற்கை வேளாண்மை | 34 |
| | **மாமழை போற்றுதும்** | ஏதிலிக்குருவிகள் | 40 |
| | | காவியம்* | 43 |
| | | திருமலை முருகன் பள்ளு | 45 |
| | | ஐங்குறுநூறு | 50 |
| | | யானை டாக்டர் | 55 |
| | | புணர்ச்சி விதிகள் | 58 |
| 3. | பண்பாடு | மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு | 74 |
| | **பீடு பெற நில்** | காவடிச்சிந்து | 79 |
| | | குறுந்தொகை* | 84 |
| | | புறநானூறு* | 88 |
| | | வாடிவாசல் | 93 |
| | | பகுபத உறுப்புகள் | 96 |
| | | திருக்குறள்* | 110 |
| 4. | கல்வி | தமிழகக் கல்வி வரலாறு | 123 |
| | **கேடில் விழுச்செல்வம்** | பிள்ளைக்கூடம் | 132 |
| | | நற்றிணை | 134 |
| | | தொல்காப்பியம் - சிறப்புப் பாயிர உரை விளக்கப் பாடல் | 140 |
| | | இதழாளர் பாரதி | 143 |
| | | படைப்பாக்க உத்திகள் | 145 |
| 5. | நாகரிகம், தொழில், வணிகம் | ஆனந்தரங்கர் நாட்குறிப்பு | 160 |
| | **நாளெல்லாம் வினைசெய்** | சீறாப்புராணம் | 168 |
| | | அகநானூறு | 175 |
| | | பிம்பம் | 181 |
| | | பா இயற்றப் பழகலாம் | 183 |
| | | திருக்குறள்* | 198 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612339 www.CBSEtips.in


| இயல் | பொருண்மை / இயல் | பாடத்தலைப்புகள் | ப.எண் |
|---|---|---|---|
| 6. | கலை, அழகியல், புதுமைகள் | காலத்தை வென்ற கலை | 208 |
| | **என்னுயிர் என்பேன்** | ஆத்மாநாம் கவிதைகள் | 215 |
| | | குற்றாலக் குறவஞ்சி | 218 |
| | | திருச்சாழல் | 222 |
| | | இசைத்தமிழர் இருவர் | 227 |
| | | கலைச்சொல்லாக்கம் | 230 |
| 7. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | காற்றில் கலந்த பேரோசை | 249 |
| | **வையத் தலைமை கொள்** | புரட்சிக்கவி* | 254 |
| | | பதிற்றுப்பத்து | 263 |
| | | சிந்தனைப் பட்டிமன்றம் | 269 |
| | | ஆக்கப்பெயர்கள் | 271 |
| 8. | மனிதம், ஆளுமை | தாகூரின் கடிதங்கள் | 286 |
| | **யாரையும் மதித்து வாழ்** | ஒவ்வொரு புல்லையும் | 293 |
| | | தொலைந்து போனவர்கள்* | 295 |
| | | மனோன்மணீயம் | 298 |
| | | செவ்வி | 305 |
| | | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் | 307 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



# மனப்பாடப் பகுதி

## இயல் : 1

### யுகத்தின் பாடல்

1. ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

**- சு. வில்வரத்தினம்**

### நன்னூல் - பாயிரம்

2. ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே - நூற்பா - 47
காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே - நூற்பா - 48

**- பவணந்தி முனிவர்**

## இயல் : 2

### காவியம்

ஆக - 2022

3. சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

**- பிரமிள்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## இயல் : 3

### குறுந்தொகை

மார்ச் - 2023

4. அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே. (146)

**- வெள்ளி வீதியார்**

பா: நேரிசை ஆசிரியப்பா

பா விளக்கம்: ஈற்றயலடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் பெற்று வந்துள்ளதால் இப்பாடல், நேரிசை ஆசிரியப்பா ஆகும்.

---

### புறநானூறு

அ.மா.தே. 23 | செப் - 2020 | மார்ச் - 2019

5. உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. (182)

**- கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**

பா: நேரிசை ஆசிரியப்பா

பா விளக்கம்: ஈற்றயலடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் பெற்று வந்துள்ளதால் இப்பாடல், நேரிசை ஆசிரியப்பா ஆகும்.

---

6.

### திருக்குறள்

**அடக்கமுடைமை**

அ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

ஆ) யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



இ) தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

**ஒப்புரவறிதல்**

அ) தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.

ஆ) மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

**புகழ்**

அ) தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

ஆ) வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

**நிலையாமை**

அ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

**துறவு**

அ) யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

ஆ) பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

**வலியறிதல்**

அ) வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் **மார்ச் - 2023** **அ.மா.தே. 23** **மார்ச் - 2020**
துணைவலியும் தூக்கிச் செயல்.

ஆ) அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

இ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். **ஜூன் - 2019**

**காலமறிதல்**

அ) ஞாலம் கருதினும் கைகூடும் காலம் **ஆக - 2022**
கருதி இடத்தால் செயின்.

**-திருவள்ளுவர்**

பா: குறள் வெண்பா

பா விளக்கம்: வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, முதலடியில் நான்கு சீர்களும், இரண்டாமடியில் மூன்று சீர்களும் பெற்று ஈரடியில் அமைந்துள்ளதால் குறள் வெண்பா ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## இயல் : 5

7. **திருக்குறள்**

**குறிப்பறிதல்**

அ) குறிப்பில் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

**பகைத்திறம் தெளிதல்**

அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

ஆ) இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. **செப் - 2021** **மார்ச் - 2019**

**மருந்து**

அ) மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். **செப் - 2020** **அ.மா.தே. 23**

ஆ) நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். **அ.மா.தே. 23** **மார்ச் - 2020**

**இரவச்சம்**

அ) இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான். **மே - 2022**

**- திருவள்ளுவர்**

பா: குறள் வெண்பா

பா விளக்கம்: வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, முதலடியில் நான்கு சீர்களும், இரண்டாமடியில் மூன்று சீர்களும் பெற்று ஈரடியில் அமைந்துள்ளதால் குறள் வெண்பா ஆகும்.

---

## இயல் : 7

**புரட்சிக்கவி**

**ஜூன் - 2019** **செப் - 2021** **மே - 2022**

8. சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப் படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின்தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

**- பாரதிதாசன்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



பா: எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பா விளக்கம்:

- அடிதோறும் எட்டு சீர்களையும், பல ஈரசைச் சீர்களையும் பெற்று வந்துள்ளது.
- அகவலோசை பெற்று வந்துள்ளது. எனவே, இப்பாடல் எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆகும்.

## இயல் : 8

9. **தொலைந்து போனவர்கள்**

அ) உடைஅணிந்தேன் எனச் சொல்லுகிறாய் - வெறும்
உடலுக் கணிவது உடையல்ல
விடையைக் கண்டேன் என்றுரைத்தாய் - ஒரு
வினாவாய் நீயே நிற்கின்றாய்.

ஆ) தின்றேன் என்பாய் அணுஅணுவாய் - உனைத்
தின்னும் பசிகளுக் கிரையாவாய்
வென்றேன் என்பர் மனிதரெல்லாம் - பெறும்
வெற்றியிலே தான் தோற்கின்றார்.

இ) நான் என்பாய் அது நீயில்லை - வெறும் **மார்ச் - 2020**
நாடக வசனம் பேசுகிறாய்
ஏன்? என்பாய் இது கேள்வியில்லை - அந்த
ஏன் என்னும் ஒளியில் உனைத் தேடு.

**- அப்துல் ரகுமான்**

பா: சிந்து

பா விளக்கம்: அளவொத்த இரண்டடிகளையும் ஒரெதுகையையும் பெற்று வரும் பாடல் சிந்துப்பா ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



# இயல் 1 என்னுயிர் என்பேன்



**கற்றல் நோக்கங்கள்:**

- ❖ பேச்சுமொழிக்கும் கவிதைமொழிக்கும் உள்ள வேறுபட்ட தன்மைகளைப் பல்வேறு படைப்பாளர்களின் கருத்துகள்வழிப் புரிந்து கொள்ளுதல்
- ❖ மொழியின் இலக்கிய இலக்கண வளங்களை அறிதல்
- ❖ நூலின்கண் பாயிரம் பெறும் இடத்தையும் அதன் இன்றியமையாமையையும் அறிதல்
- ❖ புலம்பெயர் வாழ்க்கைச் சூழல்களால் தமிழ்மொழி உலகெங்கும் பரவியுள்ளதைத் தெரிந்து கொள்ளுதல்
- ❖ மொழி முதல், இறுதி எழுத்துகள் எவை என்பதை அறிந்து பிறமொழிக் கலப்பின்றிப் பேசவும் எழுதவும் செய்தல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



## பாடப்பகுதிகள்

- ❖ பேச்சுமொழியும் கவிதைமொழியும் - **இந்திரன்**
- ❖ யுகத்தின் பாடல் - **சு. வில்வரத்தினம்**
- ❖ நன்னூல் - பாயிரம் - **பவணந்தி முனிவர்**
- ❖ ஆறாம் திணை - **அ. முத்துலிங்கம்**
- ❖ மொழி முதல், இறுதி எழுத்துகள்

# கவிதைப்பேழை

## இயல் 1

## யுகத்தின் பாடல்

21VLE9

## நுழையும் முன்

❖ மொழி, மனித இனத்தின் ஆதி அடையாளம். அது, பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உருவானது. ஓர் இனத்தின் மையப்புள்ளியாக விளங்குவதும் மொழியே. அது, நம் இருப்பின் அடையாளம். நம் தாய்மொழியாம், தமிழ் மொழியின் வேர், சங்கத்தில் தொடங்கி, இன்றையகாலம் வரையும் இடர்பல களைந்து, உயர்தனிச் செம்மொழியாய்ச் செழித்தோங்கி இருக்கிறது.

## தெரியுமா?

❖ புதுக்கவிதை - விளக்கம்

❖ மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர். படிப்போரின் ஆழ்மனதில் புதுக்கவிதை ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது. இது படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத்தன்மை கொண்டது. எளியவர்களுக்கு தம் உணர்ச்சிகளைக் கவிதை வாயிலாக வெளிப்படுத்தும் வாய்ப்பைத் தந்தது புதுக்கவிதை எனலாம்.

## நூல்வெளி

❖ கவிஞர் சு. வில்வரத்தினம், யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத் தீவில் பிறந்தவர். இவருடைய கவிதைகள் மொத்தமாக, உயிர்த்தெழும் காலத்துக்காக என்ற தலைப்பில் 2001இல் தொகுக்கப்பட்டன. இவர் கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்டவர். வில்வரத்தினத்தின் இரண்டு கவிதைகளிலிருந்து தேர்ந்தெடுத்த பகுதிகள் பாடப்பகுதியில் இடம்பெறுகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

1. **"கபாடபுரங்களைக் காவு கொண்ட பின்னும் காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" அடிமோனையைத் தெரிவு செய்க.**

அ) கபாடபுரங்களை - காவு கொண்ட

ஆ) காலத்தால் - கனிமங்கள்

இ) கபாடபுரங்களை - காலத்தால்

ஈ) காலத்தால் - சாகாத

**விடை: (இ) கபாடபுரங்களை- காலத்தால்**

### குறுவினாக்கள்

1. **என் அம்மை, ஒற்றியெடுத்த**
**நெற்றிமண் அழகே!**
**வழிவழி நினதடி தொழுதவர்,**
**உழுதவர், விதைத்தவர்,**
**வியர்த்தவர்க்கெல்லாம்**
**நிறைமணி தந்தவளே! - இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.**

தொழுதவர், உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர்.

2. **இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.** மார்ச் - 2023 ஆக - 2022

"தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம் கூடில்லாத பறவை" என்று இனம், மொழி குறித்த தமது பார்வையைக் குறிப்பிடுகிறார் இரசூல் கம்சதோவ்.

### சிறுவினாக்கள்

1. **சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?** மார்ச் - 2023

- ❖ காற்றிலேறி, அது செல்லும் திசையெங்கும் சென்று அலைகடல், நெருப்பாறு, மலை முகடுகளையெல்லாம் கடந்து எட்டுத் திசையெங்கும் சென்று பரவுகின்ற தமிழ்ப்பாடலின் சிறப்பைப் பாடத்தான் வேண்டும்.
- ❖ முதல், இடைத் தமிழ்ச்சங்கங்கள் அமைந்த லெமூரியா கண்டத்தில் உள்ள கபாடபுரமே கடல்கோளால் அழிந்த பின்பும், இக்காலம் வரை தமது தொன்மை வளம் குன்றாத வலிமை மிக்க தமிழ் மொழியைப் பாடத்தான் வேண்டும் என்கிறார் ஆசிரியர் சு. வில்வரத்தினம்.

2. **"என்னுயிர் தமிழ் மொழி என்பேன்" என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.**

- ❖ உலகின் மிகவும் தொன்மை வாய்ந்த மொழிகளில் ஒன்று தமிழ்.
- ❖ உலக மொழிகளில் பலவற்றில் எழுத்துக்கும் அவர் சொல்லுக்கு மட்டுமே இலக்கணம் கூறுகிறது. ஆனால்,"பொருள்" இலக்கணம் என்ற ஒன்றை இலக்கணமாக எடுத்துரைத்தது தமிழ்மொழிதான்.
- ❖ தமிழின் சிறப்புகளில் மகுடமாக அமைவது "ழகரம்".
- ❖ இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுடன் நான்காவதாக அறிவியல் தமிழும் இணைந்துவிட்டது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



- உலகின் முதல் மாந்தன் பேசிய மொழியும் "தமிழே" என்று கூறுவர்.
- திருக்குறள், உலகில் பெரும்பாலான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
- பிற நாட்டவர், பிற மொழியினர் என்று யாவரையும் தன்பால் ஈர்ப்பதில் முன்நின்ற மொழியாகத் தமிழ்மொழி விளங்குகிறது.

"சாகும்போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் - எந்தன்
சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்"

- க. சச்சிதானந்தன்.

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடங்களை நிரப்புக

1. மனித இனத்தின் ஆதி அடையாளம் _________ **விடை: மொழி**
2. ஓர் இனத்தின் மையப் புள்ளியாக விளங்குவது _________ **விடை: மொழி**
3. எழுதத்தான் வேண்டும் எழுகின்ற யுகத்தினோர் பாடசாலை -இவ்வடிகளில் அமைந்திருக்கும் நயங்கள் _______ **விடை: அடி எதுகை - அடி மோனை**
4. வில்வரத்தினம் பிறந்த இடம் _________ **விடை: புங்குடுத்தீவு**
5. விரல்முனையைத் தீயிலே தோய்த்து _________ சுவரெலாம் எழுத வேண்டும். **விடை: திசைகளின்**
6. கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்ட கவிஞர் _________ **விடை: சு.வில்வரத்தினம்**

### குறு வினாக்கள்

**1. கவிஞர் சு.வில்வரத்தினம் பற்றிச் சிறு குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | கவிஞர் சு. வில்வரத்தினம் |
| பிறந்த இடம் | : | யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத் தீவு. |
| கவிதை | : | "உயிர்த்தெழும் காலத்துக்காக" |
| தொகுக்கப்பட்ட காலம் | : | 2001 ஆம் ஆண்டு |
| காலம் | : | 1950 முதல் 2006 வரை |
| சிறப்பு | : | இலங்கைத் தமிழர், கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்டவர். |

**2. புதுக்கவிதை என்பது யாது?**

மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**3. நிறைமணியைத் தந்தவள் யார்? யார் யார்க்கெல்லாம் தந்தாள்?**

- நிறைமணியைத் தந்தவள் தமிழன்னை
- தமிழ் அன்னையின் திருவடி மண்ணை, நெற்றியில் இட்டுக்கொண்டு வழிவழியாகத் தமிழுக்குத் தொண்டாற்றி, அவள் திருவடியைத் தொழுதவர், உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர்க்கெல்லாம் நிறைமணியைத் தந்தாள்.

**4. தமிழ்ப்பாடல்கள் எவற்றையெல்லாம் கடந்து செல்வதாகக் கவிஞர் சு.வில்வரத்தினம் குறிப்பிடுகிறார்?**

தமிழ்ப் பாடல்கள் காற்றிலேறி, அது செல்லும் திசை எங்கும் சென்று அலைகின்ற கடலையும் நெருப்பாற்றையும் மலைமுகடுகளையும் கடந்து செல்வதாகக் கவிஞர் சு.வில்வரத்தினம் குறிப்பிடுகிறார்.

**5. கடல்கோளால் கொள்ளப்பட்ட பகுதி எது?**

முதல், இடைத் தமிழ்ச் சங்கங்கள் அமைந்த லெமூரியா கண்டத்திலுள்ள கபாடபுரமே கடல்கோளால் கொள்ளப்பட்ட பகுதி ஆகும்.

## சிறு வினாக்கள்

**1. பல்லாண்டு யாருக்குப் பாட வேண்டும்?**

- தமிழன்னையின் திருவடி மண்ணை நெற்றியில் இட்டுக் கொள்ளும் திலகம் அவளது புகழ் மணம் பரப்பி அழகு தரும்.
- பிறமொழி நாடாது வழி வழியாகத் தமிழன்னையின் திருவடியை வணங்கியவர்களுக்கும், நிலத்தினை உழுதவர் போன்று தமிழ்மொழியைச் சீர்செய்து பண்படுத்தியவர்களுக்கும் விளைநிலத்தில் நல் வித்தினை விதைத்தவர் போன்று தமிழ் மொழியில் நன்னெறிகளைப் பரப்பியவர்களுக்கும் களைகளை நீக்கி, பயிர் வளர உழைத்து வியர்த்தவர் போன்று தமிழ் மொழியில் இடர்பல களைந்து உயர்தனிச் செம்மொழியாய் செழித்தோங்கி வளர அரும்பாடுபட்டவர்களுக்கும் நிறைமணி போன்ற நல் விளைச்சலான தமிழ் ஞானத்தினை அருளிய தமிழ் அன்னையைக் கவிஞர் சு.வில்வரத்தினம் பல்லாண்டு வாழ வேண்டும் என்று பாடுகிறார்.

**2. புதுக்கவிதை குறித்து விளக்கம் தருக.**

- மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர்.
- படிப்போரின் ஆழ்மனதில் புதுக்கவிதை ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது.
- இது படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத்தன்மை கொண்டது.

## இலக்கணக்குறிப்பு

| | |
|---|---|
| வழிவழி, தீட்டித்தீட்டி | - அடுக்குத் தொடர்கள் |
| நிறைமணி, கனைகடல் | - வினைத்தொகை |
| சாகாத | - பெயரெச்சம் |
| விரல்முனை | - ஆறாம் வேற்றுமைத் தொகை |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## உறுப்பிலக்கணம்

**தீட்டி = தீட்டு + இ**

❖ தீட்டு - பகுதி
❖ இ - வினையெச்ச விகுதி

**எழுகின்ற = எழு + கின்று + அ**

❖ எழு - பகுதி
❖ கின்று - நிகழ்கால இடைநிலை
❖ அ - பெயரெச்ச விகுதி

## புணர்ச்சி விதி

1. **ஒற்றியெடுத்த = ஒற்றி + எடுத்த**
❖ "இ ஈ ஐ வழி யவ்வும்" என்ற விதிப்படி 'ஒற்றி + ய் + எடுத்த' என்றானது.
❖ "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி "ஒற்றியெடுத்த" எனப் புணர்ந்தது.

2. **காற்றிலேறி = காற்றில் + ஏறி**
❖ "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி "காற்றிலேறி" எனப் புணர்ந்தது.

3. **பல்லாண்டு = பல + ஆண்டு**
❖ "பல சில எனும் இவைமுன் பிறவரின் அகரம் ஏகலும்" என்ற விதிப்படி "பல் + ஆண்டு" என்றானது.
❖ "தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்" என்ற விதிப்படி "பல்ல் + ஆண்டு" என்றானது.
❖ "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி "பல்லாண்டு" எனப் புணர்ந்தது.

உரைநடை உலகம்

இயல் 1

# பேச்சுமொழியும் கவிதைமொழியும்

– இந்திரன்

21LQCL

## நுழையும் முன்

❖ கலைகளின் உச்சம் கவிதை என்பர். அக்கவிதையினை, இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும் அதுவே மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்றும் கூறினார் மகாகவி பாரதி. கவிதை எவ்வாறு நிகழ்கிறது; எழுத்துமொழியைக் கடந்து பேச்சுமொழி எவ்வாறு கவிதைக்கு நெருக்கமாக இருக்கிறது என்பவை பற்றிப் பேசுகிறது இக்கட்டுரை.

## தெரிந்து தெளிவோம்

❖ ஒவ்வொரு மொழியிலும் தோன்றும் கவித்துவ வெளிப்பாடுகளை ஒன்றாக வைத்து நோக்கும்பொழுது கவிதைகள் கேட்போரால் / வாசகர்களால் உள்வாங்கப்பட்டு ரசிக்கப்பெறும் முறையில், காலத்துக்குக் காலம் அழுத்த வேறுபாடுகள் ஏற்படுவது வழக்கம்.
❖ கவிதை என்பது யாது; அது எவற்றைப் பற்றிப் பேசுதல் வேண்டும்; எப்பொழுது எந்த நிலையில் ஒரு கவிதையாக்கம் கவர்ச்சிகரமான கவிதையாக அமையும் என்பன பற்றி, அவற்றின் ஆக்கத்தில்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



ஈடுபடுவோருடைய கருத்து நிலைப்பாடுகள் கவிதை, கவிதையெனக் கொள்ளப்படுவதற்கான எடுத்துக்கூறல் முறைமைகள் ஆகியன யாவும் ஒருங்கு சேர்கின்றபொழுது தான் மேலே கூறிய கவித்துவ உணர்வுச் செவ்வியலிலே மாற்றம் தெரிய வரும்.

- தமிழின் கவிதையியல் நூலில் கா. சிவத்தம்பி

## நூல் வெளி

- இராசேந்திரன் என்னும் இயற்பெயர் கொண்ட இந்திரன் சிறந்த கலைவிமர்சகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், ஓவியர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர். ஒரிய மொழிக் கவிஞர் மனோரமா பிஸ்வாஸின் "பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்" என்னும் இவரின் மொழிபெயர்ப்பு நூலுக்காக, 2011 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமியின் விருது பெற்றுள்ளார். முப்பட்டை நகரம், சாம்பர் வார்த்தைகள் உள்ளிட்ட கவிதைத் தொகுப்புகளும் தமிழ் அழகியல், நவீன ஓவியம் உள்ளிட்ட கட்டுரை நூல்களையும் படைத்துள்ளார். வெளிச்சம், நுண்கலை ஆகிய இதழ்களை நடத்தியுள்ளார்.

**பாடப்பகுதிக்கான கவிதை மொழிபெயர்ப்புகள்**

- வால்ட் விட்மன் - ஆங்கிலத்திலிருந்து தமிழில் : சங்கர் ஜெயராமன்
- மல்லார்மே - பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் : வெ. ஸ்ரீராம்
- பாப்லோ நெரூடா - ஆங்கிலத்திலிருந்து தமிழில் : ஆ. இரா. வேங்கடாசலபதி

# பாடநூல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**1. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.** மே - 2022

அ) முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்

ஆ) பவணந்திமுனிவர்- நன்னூல்

இ) சு.வில்வரத்தினம் - ஆறாம் திணை

ஈ) இந்திரன் - பேச்சு மொழியும் எழுத்து மொழியும்

i) அ, ஆ ii) அ, ஈ iii) ஆ, ஈ iv) அ, இ **விடை: iii) ஆ, ஈ**

**2. ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிற போது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைகிறது, இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.**

அ) மொழி என்பது திட, திரவ நிலையில் இருக்கும்.

ஆ) பேச்சுமொழி, எழுத்து மொழியைத் திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.

இ) எழுத்து மொழியை விடப் பேச்சுமொழி எளிமையானது.

ஈ) பேச்சு மொழியைக் காட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.

**விடை: இ) எழுத்து மொழியை விடப் பேச்சுமொழி எளிமையானது.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## குறு வினாக்கள்

**1. பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வழிபாட்டுச் சக்தி மிக்கது ஏன்?**

எழுத்துமொழி, பேச்சு மொழிக்குத் திரும்பும்போது வெளிப்பாட்டுச் சக்தி அதிகம் கொண்டதாக மாறி விடுகிறது. எழுத்துமொழி உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதில்லை. எனவே, எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி, உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கதாக உள்ளது.

## சிறுவினா

1. **கூற்று:** குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று; நினைவுகூரத் தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

**கவிதை:** கூண்டு திறந்தது சிறகடிக்கவா? இல்லை! சீட்டெடுக்க. கூற்றில் குறியீடு எனக் குறிப்பிடப்படுவது கவிதையில் எப்பொருளாக வந்துள்ளது?

- ❖ சிறகிருந்தும் பறப்பதை மறந்த கிளி
- ❖ எஜமானின் விரல் அசைவுக்குச் சீட்டு எடுக்கும் கிளி
- ❖ சீட்டெடுக்க மட்டும் வெளியே வருவதற்கு அனுமதி
- ❖ யாரோ ஒருவனின் சுகத்திற்கு தன் சுதந்திரத்தைப் பறிகொடுக்கும் வாயில்லா கிளியின் அடிமை வாழ்வு.

## நெடுவினா

**1. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.**

அ.மா.தே. 23 | ஜூன் - 2019 | மார்ச் - 2020 | மே - 2022

**முன்னுரை:**

"பேசுவது போல் எழுதுவதுதான் உத்தமம் அதுவே

மானுடத்துக்கு எழுத்தாளர்கள் செய்யும் கடமை" என்றான் பாரதி. அவர் கூற்றுப்படி, எழுத்து மொழியைக் கடந்து, பேச்சு மொழி எவ்வாறு நம்மிடம் நெருக்கமாக இருக்கிறது என்பதைப் பற்றிப் பின்வருமாறு காணலாம்.

**பேச்சு மொழி:**

பேச்சுமொழி என்பது, திரவ நிலையில் இருந்து நம் விருப்பத்திற்குக் கையாளவும், உணர்வுகளை வெளிப்படுத்தவும், பிறரை உணரச் செய்யவும் துணை புரிகிறது.

எழுத்தாகப் பதிவு செய்யப்படும் மொழி, உறைந்துபோன பனிக்கட்டி போன்று திடநிலை பெற்று விடுகிறது. ஆகவே, கையாள எளிதாக இருப்பதில்லை.

எழுத்து மொழியை விடவும் பேச்சு மொழிக்கு ஆற்றல் அதிகம் உள்ளது. எழுத்து மொழியில் பேச்சைக் கேட்க எதிராளி என ஒருவரும் இருப்பதில்லை. பேச்சு மொழி அப்படியன்று; எழுத்து மொழியை விடவும் பேச்சு மொழிக்கு உணர்ச்சியை வெளிப்படுத்தும் ஆற்றல் மிகுதி.

முகத்திலிருக்கும் வாய், உடம்பிலிருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது.

பேச்சு என்பது தன்னைத் திறந்துகொள்கிற, மொழியில் நீந்துவது போன்றதாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**எழுத்து மொழி:**

உறைந்த பனிக்கட்டி போன்று திடநிலை அடைந்து விடும் எழுத்துமொழி, விருப்பம் போல் கையாள முடியாது.

எழுத்துமொழி, நேரடிப் பயன்பாட்டிற்கு உதவாததால் வேற்றுமொழி போலாகி விடுகிறது.

பேச்சுமொழி நடையே ஒரு கவிஞனை நிகழ்காலத்தவனா, இறந்த காலத்தவனா என நிர்ணயம் செய்யும் ஆற்றல் உடையது.

பேச்சுமொழியில் ஒரு கவிதையைப் படைக்கின்றபோது, அது உடம்பின்மேல் தோல்போல் உணர்வுடன் இயங்குகிறது.

**முடிவுரை:**

எழுத்துமொழியில் அதே சொற்கள் அழகுடையதானாலும், உணர்ச்சி இல்லாத ஆடைபோல் போர்த்திக் கொள்ளவே உதவுகிறது.

பேச்சுமொழியை உடனே தாகம்போக்கும் நீர் என்றும், எழுத்துமொழி உறைந்த பனிக்கட்டியானாலும் என்றேனும் ஒருநாள் பயன் தரும் எனவும் நான் உணர்கிறேன்.

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடத்தை நிரப்புக

1. "பேசுவது போல் எழுதுவது தான் உத்தமம்" என்று கூறியவர் _________ **விடை: மகாகவி பாரதி**
2. உணர்ச்சிக்கு மிக அருகில் இருப்பது _________ **விடை: பேச்சு மொழி**
3. தனக்குத்தானே பேசிக் கொள்கிற பேச்சு _________ **விடை: எழுத்து மொழி**
4. இந்திரனின் இயற்பெயர் _________ **விடை: இராஜேந்திரன்**
5. "வால்ட் விட்மன்" _________ நாட்டைச் சேர்ந்தவர். **விடை: அமெரிக்கா**
6. "தமிழின் கவிதையியல்" நூலின் ஆசிரியர் _________ **விடை: கா. சிவத்தம்பி**
7. 2011 ஆம் ஆண்டு "சாகித்திய அகாதெமி"யின் விருது பெற்ற நூல் _________ **விடை: பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்**
8. குறியீட்டுக் கவிதையை உருவாக்கியவர் _________ **விடை: ஸ்டெஃபான் மல்லார்மே**
9. இந்திரன் நடத்திய இதழ்கள் _________ **விடை: வெளிச்சம், நுண்கலை**
10. கலைகளின் உச்சம் _________ **விடை: கவிதை**
11. புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் _________ **விடை: வால்ட் விட்மண்**
12. சிலி நாட்டில் பிறந்த இலத்தீன் அமெரிக்காவின் மிகச்சிறந்த கவிஞர் _________ **விடை: பாப்லோ நெரூடா**
13. பிரான்சு நாட்டைச் சேர்ந்த கவிஞர் _________ **விடை: மல்லார்மே**
14. ஆற்றூர் ரவிவர்மா _________ மொழிக் கவிஞர் **விடை: மலையாளம்**
15. உணர்ச்சிக்கு மிக அருகில் இருப்பது _________ **விடை: பேச்சு மொழி**
16. வால்ட் விட்மணின் உலகப் புகழ்பெற்ற நூல் _________ ஜூன் - 2019 **விடை: புல்லின் இதழ்கள்**
17. சாம்பல் வார்த்தைகள், முப்படை நகரம் உள்ளிட்ட கவிதை நூல்களைப் படைத்தவர் _________



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**விடை: இந்திரன்**

18. "பகலின் பெயர்கள் அனைத்தையும் இரவின் நீர் அழைக்கிறது" என்று கவிதை பாடியவர் ________

**விடை: பாப்லோ நெருடா**

## குறுவினாக்கள்

**1. இந்திரனின் பிற நூல்கள் யாவை?**

- முப்படை நகரம்
- சாம்பல் வார்த்தைகள்
- தமிழ் அழகியல்
- நவீன ஓவியம்

**2. உத்தமம், கடமை என மகாகவி பாரதி குறிப்பிடுவன யாவை?**

கவிதையினை இயன்றவரை பேசுவதுபோல் எழுதுவதுதான் உத்தமம் என்றும், மானுடத்துக்கு அதுவே எழுத்தாளர்கள் செய்யும் கடமை என்றும் மகாகவி பாரதி கூறுகிறார்.

**3. "நான்" எவ்வாறு உதயமானேன்?**

- மொழி எனது உலகத்தை ஒவ்வொரு பொருளுக்கும் பெயர்களுடன் கட்டி எழுப்பியது. இதன் பிறகு "நான்" என்ற ஒன்று பிறந்தது.
- எனது உலகம் என்பது மொழியினால் கட்டமைக்கப்பட்ட பிறகு, அந்த உலகத்திலிருந்து பிரிந்து "நான்" உதயமானேன்.

**4. மொழி பிறந்த உடன் எவ்வெவையெல்லாம் தனித்துவம் பெற்றதாக எர்னஸ்ட் காசிரர் கூறுகிறார்?**

மொழி என்ற ஒன்று பிறந்தவுடன் "உலகம்" என்பதும் "நான்" என்பதும் தனித்தனியாகப் பிரிந்து தங்களைத் தனித்துவமாக நிலைநிறுத்திக் கொள்கின்றன என்கிறார் எர்னஸ்ட் காசிரர்.

**5. எழுத்துமொழி, பேச்சுமொழி ஆகியவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**

| எழுத்துமொழி | பேச்சு மொழி |
|---|---|
| ❖ தனக்குத்தானே பேசிக் கொள்வது. | ❖ பேச்சு மொழி பிறரிடம் நேரடியாகப் பேசுவது. |
| ❖ எழுத்து மொழியைக் கேட்க எதிராளி இல்லை. | ❖ பேச்சு மொழியைக் கேட்க எதிராளி உண்டு. |
| ❖ எழுத்துமொழி எழுதுவதை மட்டும்தான் செய்கிறது. | ❖ பேச்சுமொழி பேசும்போது முகம், வாய், உடம்பு, உணர்ச்சி வெளிப்பாடு தெரிகிறது . |
| ❖ எழுத்து மொழியில் சொற்கள் கவிதையின் உணர்வை உணர்ச்சியற்ற ஆடைபோல் போர்த்திவிடுகின்றன. | ❖ அதிக உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி வாய்ந்தது. பேச்சு என்பது மொழியில் நீரிசை ஆகும். |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**6. "வால்ட் விட்மண்" குறித்து எழுதுக.**

"வால்ட் விட்மண்", அமெரிக்காவைச் சேர்ந்தவர்; ஆங்கிலக் கவிஞர்; இதழாளர்; கட்டுரையாளர்; "புதுக்கவிதை" இயக்கத்தைத் தோற்றுவித்தவர். இவர் படைத்த "புல்லின் இதழ்கள்" உலகப் புகழ்பெற்ற நூல் ஆகும்.

**7. குறியீட்டுக் கவிதை என்பது யாது?**

குறியீட்டுக் கவிதை என்பது பொருளைப் பதிவு செய்வதன்று. நினைவுகூரத் தக்க தருணங்களைப் பதிவு செய்வதாகும்.

**8. கவிஞனின் கடமை யாது?**

ஒரு கவிதையைப் படைப்பதற்கு, எத்தகைய மொழியை நாம் பயன்படுத்துகின்றோமோ அதன் குணாம்சங்களையும், பேச்சு வழக்குகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியது கவிஞனின் கடமையாகிறது.

## சிறுவினா

**1. இந்திரன் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | இராசேந்திரன் |
| சிறப்பு | : | கலை விமர்சகர், கவிஞர், ஓவியர் |
| விருது | : | "பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்" - சாகித்தியவிருது |
| கவிதை நூல் | : | முப்பட்டை நூல், சாம்பல் வார்த்தைகள் |
| கட்டுரை நூல் | : | தமிழ் அழகியல், நவீன ஓவியம் |
| இதழ் | : | வெளிச்சம், நுண்கலை |

**2. ஒரு பொருளின் மீது அதிகாரத்தை உருவாக்கியது எது? எவ்வாறு?**

- ❖ மொழி வழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன் அந்தப் பொருளின் மீது எனக்கொரு அதிகாரம் வந்து விடுவதை உணர்கிறேன்.
- ❖ வேலையில் மூழ்கிய அம்மா, நான் அழைத்ததைக் கவனியாத போது திடீரென்று அவளது பெயரைச் சொல்லி அழைத்திருக்கிறேன்.
- ❖ அப்போது, அம்மா திடுக்கிட்டுத் திரும்பி என்னிடம் வந்திருக்கிறார்.
- ❖ அப்போதுதான், என்னுடைய மொழி, பெயர்களிட்டு அழைத்தவுடன் அவற்றின்மீது ஒரு அதிகாரத்தை உருவாக்கிக் கொடுத்ததை நான் உணர்ந்தேன்.

**3. "பாப்லோ நெரூடா" கவிதையால் பெறப்படும் செய்தி யாது?**

- ❖ "திங்கள், செவ்வாய்க் கிழமைகளுடனும் ஆண்டு முழுவதுடன் வாரமும் சிக்கிக் கொண்டு உள்ளன. உமது களைத்துப்போன கத்தரிக்கோலால் காலத்தை வெட்டித் துண்டுபோட முடியாது.
- ❖ பகலின் பெயர்கள் அனைத்தையும் இரவின் நீர் அழைக்கிறது. இரவில் உறங்கும்போது என்ன பெயர் சொல்லி அழைக்கின்றனர்? அல்லது, என்னவென்று அழைப்பதில்லை?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
FOR ORDERS CONTACT : 8925612359
www.CBSEtips.in



- கண்மூடித் தூங்கும்போது நான் நானாக இல்லை என்றால், விழித்து எழுந்தபின் நான் யார்? என்பது, கவிஞர் பாப்லோ நெரூடாவின் கவிதையால் பெறப்படும் செய்தியாகும்.

**4. கவிதை என்பது எது? விளக்குக.**

- கவிதை என்பது ஒரு பொருள் அன்று. அது மொழிக்குள் உலகையும், உலகிற்குள் மொழியையும் முழுவதுமாக நுழைத்து விடுவதற்காக முயலும் ஒரு படைப்புச் செயல்பாடு ஆகும்.
- கவிதை என்பதே மொழிதான். கவிதைக்குள் உலவும் மொழியின் தர்க்கம் கவிதைக்கான உலகத்தைக் கட்டியெழுப்புகிறது. எனவே, எத்தகைய மொழியை நாம் பயன்படுத்துகின்றோமோ அதன் குணாம்சங்களையும் பேச்சு வழக்குகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியது கவிஞனின் கடமையாகிறது.

## கவிதைப்பேழை

இயல் 1

## நன்னூல் – பாயிரம்

2KS54

### நுழையும் முன்

- நூலைப் புரிந்துகொள்ளவும் அதன் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும் பாயிரம் உதவுகிறது. தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் இத்தகைய அமைப்பினைக் காணலாம். தொல்காப்பியத்தையும் அதன் உரைகளையும் பின்பற்றி எழுதப்பட்ட நூலான நன்னூலில் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் ஆகியன குறித்து விளக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஏழு நூற்பாக்களை நம் பாடப்பகுதியில் பார்ப்போம்.

### நூல்வெளி

- நன்னூல், தொல்காப்பியத்தை முதல்நூலாகக் கொண்ட வழிநூல் ஆகும். இது, பொ.ஆ. 13ஆம் நூற்றாண்டில் பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூலாகும். இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. எழுத்ததிகாரம் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என 5 பகுதிகளாகவும் சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என 5 பகுதிகளாகவும் அமைந்துள்ளன.
- சீயகங்கன் என்ற சிற்றரசர் கேட்டுக்கொண்டதால் பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார் எனப் பாயிரம் குறிப்பிடுகிறது.
- ஈரோடு மாவட்டம், மேட்டுப்புதூர் என்ற ஊரில் எட்டாம் தீர்த்தங்கரரான சந்திரப்பிரபாவின் கோவில் உள்ளது. இங்கே பவணந்தியாரின் உருவச் சிற்பம் இன்றும் உள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



# பாடநூல் வினாக்கள்

## பலவுள் தெரிக.

**1. பாயிரம் இல்லது _________ அன்றே.** மார்ச் - 2023

அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை **விடை: ஆ) பனுவல்**

## குறு வினா

**1. "பாயிரம்" பற்றி நீ அறியும் கருத்து யாது?** அ.மா.தே. 23 செப் - 2020 மார்ச் - 2019

- ❖ நூலைப் புரிந்துகொள்ளவும் அதன் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும் பாயிரம் உதவுகிறது.
- ❖ அது பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் என இரு வகைப்படும்.

## சிறுவினா

**1. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?** செப் - 2020 அ.மா.தே. 23

- ❖ முகவுரை - நூலுக்கு முன் சொல்லப்படுவது.
- ❖ நூலாசிரியர் பெயர், நூல் வந்த வழி, நூலின் பெயர், நூல் வகை, நூல் வழங்கும் நிலப்பரப்பு ஆகியன பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும்.
- ❖ யாப்பு வகை, நூலில் கூறப்படும் கருத்து, நூலைக் கேட்போர், நூலைக் கற்பதால் பெறும் பயன் ஆகியன பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும்.
- ❖ நூல் இயற்றப்பட்ட காலம், அரங்கேற்றிய சபை, இயற்றப்படக் காரணம் முதலானவை குறிப்பிடப்பட்டிருக்கும்.

## நெடுவினா

**1. நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.**

**முன்னுரை:**

நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பு, அந்நூல் வழங்கும் கருத்து வளம் ஆகிய இவ்விரண்டினையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றிப் பேசுவது பாயிரம் ஆகும். பாயிரம் இரண்டு வகைப்படும். அவை பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் ஆகும்.

**பொதுப்பாயிரம்:**

எல்லா நூல்களின் முன்பும் பொதுவாக உரைக்கப்படுவது பொதுப்பாயிரம் ஆகும். நூலின் இயல்பு, ஆசிரியர் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை என்னும் ஐந்தையும் கூறுவது பொதுப்பாயிரம் ஆகும்.

**சிறப்புப் பாயிரம்:**

தனிப்பட்ட சில நூல்களுக்கு மட்டும் சிறப்பாகக் குறிப்பிடப்படுவது சிறப்புப் பாயிரம் எனப்படும். நூலாசிரியர் பெயர், நூல் பின்பற்றிய வழி, நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு, நூலின் பெயர், தொகை, வகை, விரி என்பனவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு, நூலில் குறிப்பிடப்படும் கருத்து, நூலைக்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



கற்பதனால் பெறுகின்ற பயன், நூலைக் கேட்போர் ஆகிய எட்டு செய்திகளையும் செம்மையாகவும் தெளிவாகவும் தெரிவிப்பது சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் ஆகும்.

**முடிவுரை:**

நூல்களின் சிறப்பைப் பற்றியும், அவற்றைத் தொகுத்து வைக்கும் முறை பற்றியும் நன்னூலின் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக நாம் அறிய முடிகிறது.

## இலக்கணக்குறிப்பு

காட்டல், கோடல் - தொழிற்பெயர்கள்
ஐந்தும் - முற்றும்மை
கேட்போர் - வினையாலணையும் பெயர்
மாநகர் - உரிச்சொற்றொடர்

## உறுப்பிலக்கணம்

**வைத்தார் - வை + த் + த் + ஆர்**

- வை - பகுதி
- த் - சந்தி
- த் - இறந்த கால இடைநிலை
- ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி.

## புணர்ச்சி விதி

1) **அணிந்துரை = அணிந்து + உரை**

- உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - அணிந்த் + உரை
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - அணிந்துரை

2) **பொதுச்சிறப்பு = பொது + சிறப்பு**

- இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும் - பொதுச்சிறப்பு.

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடத்தை நிரப்புக

1. பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூல் ________ **விடை: நன்னூல்**
2. எழுத்ததிகாரத்தில் அமைந்துள்ள பகுதிகள் ________ **விடை: ஐந்து**
3. எட்டாம் தீர்த்தங்கரர் ________ **விடை: சந்திரப்பிரபா**
4. எல்லா வகை நூல்களுக்கும் அழகு தருவதாகப் பெருமையுடன் வைக்கப்படுவது ________ **விடை: அணிந்துரை**
5. பவணந்தி முனிவர் ________ சமயத்தவர். **விடை: சமண**
6. சந்திரப்பிரபாவின் கோவில் அமைந்துள்ள ஊர் ________ **விடை: மேட்டுப்புதூர்**
7. பாயிரம் ________ வகைப்படும். **விடை: இரண்டு**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



8. நன்னூலின் முதல் நூலாக விளங்குவது ________ **விடை: தொல்காப்பியம்**

9. நன்னூல் ஒரு ________ **விடை: வழி நூல்**

10. நன்னூலில் உள்ள அதிகாரங்கள் ________ **விடை: எழுத்து - சொல்**

11. "ஆடமைத்தோள்" இதில் "அமை" என்னும் சொல் தரும் பொருள் ________ **விடை: மூங்கில்**

12. பவணந்தியாரின் ஊர் ________ **விடை: சனகாபுரம்**

13. நன்னூலுக்கு உரை எழுதியவர் ________ **விடை: விசாகப் பெருமாளையர்**

14. நன்னூலின் ஆசிரியர் ________ அ.மா.தே. 23 செப் - 2020 **விடை: பவணந்தி முனிவர்**

15. நன்னூல் விளக்கும் இலக்கண வகைகளின் எண்ணிக்கை ________ **விடை: இரண்டு**

16. நூலுக்கு முகத்தைப் போன்று இருப்பதால் ________ எனப்பட்டது. **விடை: முகவுரை**

17. எல்லாவகை நூல்களுக்கும் அழகு சேர்ப்பது ________ **விடை: அணிந்துரை**

18. மாடங்களுக்கு அழகு தருவது ________ **விடை: ஓவியங்கள்**

## குறுவினாக்கள்

**1. பாயிரத்திற்குரிய பெயர்கள் எத்தனை வகைப்படும்?**

பாயிரத்திற்குரிய பெயர்கள் ஏழு வகைப்படும். அவை, முகவுரை, பதிகம், அணிந்துரை, புனைந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை ஆகியனவாகும்.

**2. பொதுப்பாயிரம் என்றால் என்ன?**

பொதுப்பாயிரம் நூலின் இயல்பு, ஆசிரியர் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை என்னும் ஐந்தையும் கூறுவதாகும்.

**3. சிறப்புப் பாயிரத்தின் இலக்கணம் யாது?**

சிறப்பு பாயிரத்தில் நூலாசிரியர் பெயர், நூல் வழங்கும் நிலம், இயைபு, நூலைக் கேட்டவர்க்கு உரியவர், நூல் வந்த வழி, நூலின் பெயர், நூல் கூறும் பொருள், கேட்போர் பெறும் பயன் ஆகிய எட்டும் சிறப்புப்பாயிரம் பற்றிக் கூறும் இலக்கணம் ஆகும்.

**4. பாவணந்தி முனிவர்-குறிப்புத் தருக.**

- "நன்னூல்" என்னும் தமிழ் இலக்கண நூலை இயற்றியவர் பவணந்தி முனிவர்.
- தம்மை ஆதரித்த சிற்றரசன் சீயங்கனின் வேண்டுதலால், இந்நூலைப் பாடியதாகப் பாயிரம் கூறுகிறது.
- எட்டாம் தீர்த்தங்கரரான சந்திரப்பிரபாவுக்கு ஈரோடு மாவட்டம் மேட்டுப்புதூரில் அமைந்துள்ள கோவிலில் பவணந்தியாரின் கற்சிற்பம் உள்ளது.

**5. எது சிறந்த நூலாக மதிக்கப்படாது?**

ஆயிரம் முகத்தைப் பெற்றிருந்தாலும், பல்வேறு துறைசார்ந்த செய்திகளை விரிவாகப் பெற்றிருந்தாலும், அந்த நூலுக்குப் பாயிரம் இல்லையென்றால், அது சிறந்த நூலாக மதிக்கப்படாது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



## சிறுவினாக்கள்

**1. நன்னூல் - பற்றிச் சிறுகுறிப்பு வரைக.**

- நன்மை + நூல் - நன்மையாகிய நூல்.
- இது தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்ட வழி நூலாகும்.
- கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூலாகும்.
- இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.
- எழுத்ததிகாரத்தில் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப்புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுப் புணரியல் என ஐந்து பகுதிகளாகும்.
- சொல்லதிகாரத்தில் பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என ஐந்து பகுதிகளாகவும் அமைந்துள்ளன.

---

**விரிவானம்**

**இயல் 1**

# ஆறாம் திணை

**அ. முத்துலிங்கம்**

## நுழையும் முன்

- காலந்தோறும் நிலையான வாழ்விடங்களைத் தேடிப் புலம்பெயர்ந்தபடியே இருந்த நாடோடி இனம், நிலவுடைமைச் சமூகமாக மாறப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆயின. மண்ணிலிருந்து பயிர்களைப் பிடுங்கியெறிவதுபோல, தாய்மண்ணிலிருந்து மனிதவுயிர்களைப் பெயர்த்து எறியும் போக்கு காலந்தோறும் நடந்துவரும் பேரவலமாகும். தங்களுடைய தாய்நாட்டிலிருந்து வெளியேறியவர்களும் வெளியேற்றப் பட்டவர்களும் எதிர்கொள்ளும் அவலங்களை ஆறாம்திணை ஆறாத வடுவாகப் பதிவு செய்கிறது.

## நூல்வெளி

- எழுத்தாளர் அ. முத்துலிங்கம், இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள கொக்குவில் கிராமத்தில் பிறந்தவர். பணி தொடர்பாகப் பல நாடுகளுக்குப் பயணித்திருக்கும் இவர் தற்போது கனடாவில் வசித்து வருகிறார். அக்கா, மகாராஜாவின் ரயில்வண்டி, திகடசக்கரம் உள்ளிட்ட பல சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டிருக்கின்றார். வம்சவிருத்தி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1996ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் முதல் பரிசினைப் பெற்றவர். வடக்கு வீதி என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1999 இல் இலங்கை அரசின் சாகித்தியப் பரிசையும் பெற்றிருக்கின்றார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## பாடநூல் வினாக்கள்

### நெடுவினா

**1. தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப் பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது.** செப் - 2020 அ.மா.தே. 23

**முன்னுரை:**

எழுத்தாளர் அ.முத்துலிங்கம் இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்துக்கு அருகில் உள்ள கொக்குவில் கிராமத்தில் பிறந்தவர் ஆவார். மக்கள் காலந்தோறும் நிலையான இடங்களைத் தேடிப் புலம்பெயர்ந்தபடியே இருத்தல், ஒரு காலக்கட்டத்தில் நிலவுடைமைச் சமூகமாக மாறியது. அச்சமூகம் போர், சீற்றம் போன்ற காரணத்தால் தாய் மண்ணிலிருந்து பிடுங்கி எறியப்பட்டது. அவ்வகையில் சிங்களர்களின் தாக்குதலால் எறியப்பட்ட தமிழ்ச்சமூகத்தின் அவல நிலையை எடுத்துக்காட்டுகிறார். அதாவது நம் தமிழ்ச்சமூக நிலையைப் பற்றி பின்வருமாறு காணலாம்.

**புலம் பெயர் நிகழ்வு:**

நாங்கள் இலங்கையில் உள்ள மவுண்லவினியாவில் இருந்தபோது 1958 ஆம் ஆண்டு ஓர் இரவு கலவரம் நிகழ்ந்தது. அந்த இரவு முழுவதும் எங்கள் வீட்டுச் சொந்தக்காரர் எங்களைப் பாதுகாத்தார். கலவரம் முடிந்ததும் எங்களையும் இன்னும் சில தமிழ்க் குடும்பங்களையும் அகதிகள் முகாமிற்கு அழைத்துச் சென்றனர். அப்போது "டேனியல் டிஃபோ" எழுதிய "ராபின்சன் குரூஷோ" என்ற ஒரேயொரு புத்தகத்தைக் கையில் எடுத்துச் சென்றேன். முகாமில் ஒரு தொண்டு நிறுவனம் இலவசமாகக் கொடுத்த உடையில் எனக்குப் பெரிதான இரவு ஆடையின் மேல்சட்டை மட்டுமே அகப்பட்டது. மறியல் கைதிகள் போல வரிசையில் தட்டை ஏந்தி உணவுக்காக நின்றோம். "இனிமேல் இப்படி ஒரு கணம் உன் வாழ்க்கையில் வராமல் பார்த்துக் கொள்" என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

**உயிர் வாழும் திறமை:**

முப்பது வயதுடைய புலம் பெயர்ந்த தமிழ் இளைஞர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் இலங்கையிலும், பாங்காக்கிலும் சிறையில் இருந்திருக்கிறார். கெடுவை மீறித் தங்கியதற்காக, சிங்கப்பூரிலும், அமெரிக்காவிலும் தண்டனை பெற்றிருக்கிறார். சிறைவாசம் முடிந்து கடைசியாக, கனடாவுக்கு வந்து சேர்ந்தார். என் திறமை நான் இன்று வரைக்கும் உயிர் வாழ்வது என்று நேர்முகத் தேர்வில் கூறியுள்ளார்.

**புலம் பெயர் இலக்கியம்:**

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மனிதன் புலம்பெயர்ந்தபடியே இருக்கிறான். சங்க இலக்கியம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து நிலங்களைப் பற்றிப் பேசும் பல பாடல்கள் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வதைப் "பொருள் வயிற்பிரிவு" என்று குறிப்பிடுவதைச் சுட்டிக் காட்டுகிறார்.

**உலக அரங்கில் தமிழ்:**

தமிழர்கள் எட்டுக்கோடிப் பேர் உலகம் முழுவதும் இருக்கிறார்கள். கனடாவில் மட்டும் மூன்று லட்சம் தமிழர்கள் வாழ்கின்றனர். பிரிட்டிஷ் ராஜ்யத்தை "சூரியன் மறையாத நாடு" என்றனர். ஆனால், இப்போதோ "சூரியன் மறையாத தமிழ்ப்புலம்" என்கின்றனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**பனியும் பனிசார்ந்த நிலமும்:**

நூல்களை எரித்து அந்த இனத்தையே அழிப்பதுபோல் தமிழர்களை அழிக்க முடியாது. கனடாவில், தமிழர்களுக்குச் சொந்தமான "வன்னி வீதி" என்பது ஈழத்தமிழரின் புலம் பெயர் வரலாற்றைத் தமிழர்களுக்கு சொந்தமான நினைவுபடுத்தியபடியே இன்றும் இருக்கிறது. புலம்பெயர்ந்த பத்துலட்சம் மக்கள் சென்றடைந்தது பனிப்பிரதேசங்களுக்குத்தான். பனியும் பனிசார்ந்த நிலத்தையும் பற்றிய ஆறாம் திணைப் பாடல்கள் சங்க இலக்கியத்தில் இல்லை.

**முடிவுரை:**

கிராமத்தில் சரியாகக் காலை ஆறு மணிக்குச் சத்தமிடும் "ஆறுமணிக்குருவி" உண்டு. இதற்கு எல்லையே கிடையாது. இமயமலைக்குப் பறந்துபோய் மீண்டும் திரும்பும் தன்மை உடையது. ஈழத்திலிருந்து வரும் புலம்பெயர்ந்தவர்களும் இந்த "ஆறுமணிக்குருவி" போல அவர்களுக்கும் எல்லையே கிடையாது. அவர்கள் உலகம் ஆறாம் திணையாக விளங்கும் பனியும் பனிசார்ந்த நிலமுமாய் இருக்கும் பனிப்பிரதேச நாடுகளில்தான் என்று ஆசிரியர் அ.முத்துலிங்கம் கூறுகிறார்.

---

**இனிக்கும் இலக்கணம்**

இயல் 1

## மொழி முதல், இறுதி எழுத்துகள்

### பாடநூல் வினாக்கள்

**பலவுள் தெரிக**

1. **மொழிமுதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.**

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்கனம்

இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம் **விடை: அ) அன்னம், கிண்ணம்**

---

**குறுவினா**

1. **உயிர் எழுத்து, பன்னிரண்டு, திருக்குறள், நாலடியார் - இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?** ஆக - 2022

- உயிரெழுத்து - மெய்யீறு (உயிர் + எழுத்து)
- பன்னிரண்டு - உயிரீறு (பத்து + இரண்டு)
- திருக்குறள் - உயிரீறு (திரு + குறள்)
- நாலடியார் - உயிரீறு (நான்கு + அடியார்)



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## சிறுவினா

**1. மொழிமுதல், இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.**

**மொழிமுதல் எழுத்துக்கள்- 22:**

❖ உயிரெழுத்து- 12, மெய்யெழுத்து -10, உயிரெழுத்துகள் 12 ம் சொல்லின் முதலில் வரும்.

❖ **சான்று:** அம்மா, ஆடு, இலை, ஈட்டி, உரல், ஊஞ்சல், எறும்பு, ஏணி, ஐவர், ஒட்டகம், ஓடம், ஔவை.

❖ மெய்களில் க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ என்னும் பத்தும் சொல்லின் முதலில் வரும்.

❖ **சான்று:** கப்பல், ஙனம், சக்கரம், ஞமலி, தண்ணீர், நண்பன், பந்து, மருத்துவம், யவர், வரம். ஆய்த எழுத்து சொல்லின் முதலில் வராது.

**மொழிஇறுதி எழுத்துகள் - 24:**

உயிர் எழுத்து- 12,

மெய் எழுத்து-10,

குற்றியலுகரம்-1.

உயிரெழுத்துகள் 12ம் சொல்லின் இறுதியில் வரும்.

❖ **சான்று:** சில (அ), நிலா (ஆ), நரி (இ), தீ (ஈ), மிளகு (உ), பூ (ஊ), சே (ஏஎ), எங்கே (ஏ), மழை (ஐ), நொ (ஒ), மலரோ (ஓ), கௌ (ஔ).

❖ மெய்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொன்றும் சொல்லின் இறுதியில் வரும்.

❖ **சான்று:** மெல்லின மெய்: உறிஞ், பெண், வெரிந், அறம், மான்.

இடையினமெய்: பொய், பால், தெவ், பாழ், வாள்.

---

## கூடுதல் வினாக்கள்

### குறுவினாக்கள்

**1. புணர்ச்சி என்றால் என்ன?**

நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் புணருவது புணர்ச்சி எனப்படும்.

**சான்று:** தமிழ் + அரசி = தமிழரசி

---

**2. உயிர்முதல், மெய்முதல் -விளக்குக.**

❖ வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால், அது உயிர்முதல் எனப்படும்.

❖ வருமொழியின் முதல் எழுத்து மெய்யாக இருந்தால், அது மெய்முதல் எனப்படும்.

---

**3. இலக்கணவகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

❖ இலக்கணவகைச் சொற்கள் நான்கு வகைப்படும்.

❖ அவை, பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.

---

**4. இடைச்சொற்களும் உரிச்சொற்களும் எவ்வாறு வரும்?**

❖ தனித்து வராது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



❖ பெயர்ச்சொல்லையும் வினைச் சொல்லையும் சார்ந்தே வரும்.

**5. குற்றியலுகர எழுத்துகள் யாவை?**

வல்லின மெய்களின் மீது ஊர்ந்து வரும் உகர எழுத்துகள் குற்றியலுகர எழுத்துக்கள் எனப்படும். அவை, கு, சு, டு, து, பு, று ஆகும்.

## இலக்கணத் தேர்ச்சிகள்

**1. தவறான இணையைத் தேர்வு செய்க.** அ.மா.தே. 23 | ஜூன் - 2019 | மார்ச் - 2020 | மே - 2022

அ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர் ஆ) கடல் + அலை - உயிர் + மெய்

இ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர் ஈ) மண் + வளம் - மெய் + மெய்

**விடை: ஆ) கடல் + அலை - உயிர் + மெய்**

**2. கீழ்க்காணும் குறிப்புகளில் பொதிந்துள்ள மேடைப்பேச்சில் சிறந்து விளங்கிய தமிழறிஞர்களின் பெயர்களைக் கண்டறிக.**

அ) சென்னை மாகாணத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்த முதல்வர் (3)

ஆ) தொழிலாளர்களின் தந்தை என்று அழைக்கப்படுபவர் (10)

இ) உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே என்று பாடியவர் (6)

ஈ) பொதுவுடைமைக்கொள்கையின் முன்னோடிகளுள் ஒருவர் (2)

**விடை: (அ) அண்ணா, (ஆ) கலியாணசுந்தரனார், (இ) பாரதிதாசன், (ஈ) ஜீவா**

**3. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.** ஆக - 2022

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும். ஜூன் - 2019

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது. ஜூன் - 2019 | மே - 2022

இ) காலத்துக்கேத்த மாரிப் புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தனும். ஜூன் - 2019

ஈ) ஒவ்வொருத்தரும் பேசிக்கிட்டிருக்கும்போது எல்லாத்தையும் கவனமாப் பதிய வைக்கனும்.

உ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும். ஜூன் - 2019

**விடை:**

**அ) விடியற்காலையில் எழுந்து படித்தால் ஒரு தெளிவு கிடைக்கும்.**

**ஆ) முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வராமல் போகாது.**

**இ) காலத்திற்கேற்ற மாதிரி புதிது புதிதாக மொழி வடிவத்தில் மாற்றம் வேண்டும்**

**ஈ) ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருக்கும் போது எல்லாவற்றையும் கவனமாகப் பதிய வைக்க வேண்டும்.**

**உ) தேர்வெழுதுவதற்கு விரைவாகச் செல்லுங்கள்,தாமதமாகப் போனால் பதற்றமாகி விடும்.**

**4. வினாக்கள்**

**அ) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?**

❖ மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் 22 ஆகும். உயிர் எழுத்துக்கள் 12 மெய்யெழுத்துகளில் க், ங், ச், ஞ், த், ந், ப், ம், ய், வ் என்னும் 10 மெய்யெழுத்துகள் ஆகும்.

**ஆ) மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? எடுத்துக்காட்டுத் தருக.**

❖ மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் 24 ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



❖ உயிர் எழுத்துகள் 12.

❖ மெய் எழுத்துகளில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய 11 எழுத்துகளும் மொழி இறுதிக் குற்றியலுகர எழுத்து ஒன்றும் மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் ஆகும்.

**இ) உயிரீறு, மெய்யீறு - விளக்குக.** அ.மா.தே. 23 | மார்ச் - 2023 | மார்ச் - 2020

**உயிரீறு:**

நிலை மொழியின் இறுதி எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் இறுதியில் நிற்கும் வடிவம் உயிர் என்பதால் அது "உயிரீறு" எனப்படும்.

எ.கா - மணி (ண் + இ = ணி) + மாலை = மணிமாலை

**மெய்யீறு:**

நிலை மொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் அது "மெய்யீறு" எனப்படும்

எ.கா: பொன் + வண்டு = பொன்வண்டு

**ஈ) உயிர்முதல், மெய்ம்முதல் - எடுத்துக்காட்டுடன் விவரிக்க.** மே - 2022

**உயிர்முதல்:**

வருமொழியின் முதல் எழுத்து உயிர் எழுத்தாக இருந்தால் அது "உயிர்முதல்" எனப்படும்.

எ.கா: வாழை + இலை = வாழையிலை

**மெய்ம்முதல்:**

வருமொழியின் முதல் எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் முதலில் நிற்கும் வடிவம் மெய் என்பதால் அது "மெய்ம்முதல்" எனப்படும்.

எ.கா: தமிழ் + நிலம் (நி = ந் + இ) = தமிழ் நிலம்

**உ) குரங்குக்குட்டி - புணர்ச்சியை விளக்குக.**

❖ குரங்குக்குட்டி= குரங்கு + குட்டி

❖ "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்" என்ற விதிப்படி, "க்" என்னும் வல்லினமெய் மிகுந்து "குரங்குக்குட்டி" எனப் புணர்ந்தது.

---

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

1. **தமிழிலக்கிய வரலாற்றில் புலமைக் கதிரவன் - இத்தொடரில் புலமைக் கதிரவன் என்பதற்கு இலக்கணக்குறிப்புத் தருக.**

   புலமைக் கதிரவன் - உருவகம்

2. **மேற்கண்ட பத்தியில் இடம்பெற்றுள்ள உவமை, உருவகத் தொடர்களைக் கண்டறிக.**

   ❖ உவமை-தேனுண்ணும் வண்டு போல

   ❖ உருவகம்-வாராது வந்துதித்த புலமைக்கதிரவன்.

3. **மீனாட்சி சுந்தரனார் தலபுராணங்கள் பாடுவதில் சிறந்தவர் - விடைக்கேற்ற வினாவை அமைக்க.**

   தல புராணங்கள் பாடுவதில் சிறந்தவர் யார்?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



(அல்லது )

மீனாட்சி சுந்தரனார் எப்புராணங்கள் பாடுவதில் சிறந்தவர்?

**4. பத்தியில் மொழிமுதல் எழுத்துகளைக் கொண்டு அமைந்த சொற்களுள் எவையெவை வடமொழிச் சொற்கள் எனச் சுட்டுக.**

மகாவித்துவான், தலபுராணம், தேசிகர், யமகம்.

**5. விளங்கினார் - பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**

விளங்கினார் = விளங்கு + இன் + ஆர்

விளங்கு - பகுதி

இன் - இறந்தகால இடைநிலை

ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

## தமிழாக்கம் தருக

**1. The Pen is mightier than the Sword.** ஜூன் - 2019

வாள் முனையை விட வலிமையானது பேனா முனை.

**2. Winners don't do different things, they do things differently.** மே - 2022

வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்களைச் செய்யாமல், செயல்களை வித்தியாசமாகச் செய்கிறார்கள்.

**3. A picture is worth a thousand words.** ஜூன் - 2019 மே - 2022

ஆயிரம் சொற்களைவிட ஓர் ஓவியம் மதிப்பு வாய்ந்தது.

**4. Work while you work and play while you play.** மார்ச் - 2019

பருவத்தே பயிர் செய்

(அல்லது)

உழைக்க வேண்டிய நேரத்தில் உழை விளையாட வேண்டிய நேரத்தில் விளையாட்டு.

**5. Knowledge rules the world.**

அறிவே உலகை ஆளும்.

## பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாடகை | - குடிக்கூலி | மாதம் | - திங்கள் | போலீஸ் | - காவலர் |
| நிச்சயம் | - உறுதி | உத்திரவாதம் | - உறுதி | சந்தோசம் | - மகிழ்ச்சி |
| சம்பளம் | - ஊதியம் | ஞாபகம் | - நினைவு | வருடம் | - ஆண்டு |
| தேசம் | - நாடு | வித்தியாசம் | - வேறுபாடு | உற்சாகம் | - பூரிப்பு |
| விசா | - நுழைவு இசைவு | பாஸ்போர்ட் | - கடவுச்சீட்டு | கம்பெனி | - நிறுவனம் |
| பத்திரிக்கை | - நாளிதழ் | கோரிக்கை | - வேண்டுகோள் | யுகம் | - ஊழி (பல நூறு ஆண்டுகாலம்) |
| ராச்சியம் | - அரசு, நாடு | சரித்திரம் | - வரலாறு | சொந்தம் | - உறவு |
| சமீபம் | - அருகில் | தருணம் | - பொழுது, உரிய வேளை | | |
| முக்கியத்துவம் | - முதன்மை, இன்றியமையாமை | | | | |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**கீழ்க்காணும் நிகழ்ச்சிநிரலினைப் படித்துச் செய்திக் கட்டுரையாக மாற்றுக. அச்செய்தியை நாளிதழில் வெளியிட வேண்டி முதன்மை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**நிகழ்ச்சி நிரல்**

**"அரியன கேள் புதியன செய்" (திங்கள் கூடுகை)**

| நேரம்: 2.30 பிற்பகல் | இடம் : அ.மே.நி.பள்ளி |
|---|---|
| 2.30 | தமிழ்த்தாய் வாழ்த்து |
| 2.35 | வரவேற்புரை - மாணவர் இலக்கியச் செல்வன் |
| 2.40 | தலைமையுரை - திரு. எழிலன், தலைமை ஆசிரியர் |
| 2.50 | சிறப்புரை - கவிஞர் வாணி |
| **"புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை"** | |
| 3.45 | நன்றியுரை - மாணவர் ஏஞ்சலின் |
| 4.00 | நாட்டுப்பண் |

**செய்திக் கட்டுரை**

திருச்சி, ஜனவரி 10, திருநெல்வேலி அரசு மேல்நிலைப் பள்ளியில் "அரியன கேள் புதியன செய்" என்னும் திங்கள் கூடுகை நடைபெற்றது. பிற்பகல் 2.30 மணிக்குத் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது, மாணவர் இலக்கியச் செல்வன் வரவேற்புரை ஆற்றினார். பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு, எழிலன் தலைமையுரையாற்றினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற கவிஞர் வாணி "புலம்பெயர் தமிழரின் வாழ்க்கை" என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். மாணவர் ஏஞ்சலின் நன்றியுரை நவில, நாட்டுப்பண்ணுடன் திங்கள் கூடுகை இனிதே நிறைவுற்றது.

**முதன்மை ஆசிரியருக்குக் கடிதம்**

**அனுப்புநர்**

மாணவர் இலக்கிய மன்றத் தலைவர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
கோ. புதூர்,
மதுரை -4.

**பெறுநர்**

முதன்மை ஆசிரியர்,
தினமலர் நாளிதழ்,
மதுரை -1.

ஐயா,

**பொருள்:** எம் பள்ளியின் திங்கள் கூடுகை நிகழ்வை உங்களுடைய "தினமலர்" நாளிதழில் வெளியிட வேண்டுவது தொடர்பாக.

.....



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



வணக்கம். எம்பள்ளியில் 10.04.23 அன்று திங்கள் கூடுகை நடைபெற்றது. இக்கூடுகை பற்றிய செய்தியினைத் தங்கள் நாளிதழில் வெளியிட்டு உதவுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி,

இப்படிக்கு,
இரா. பாண்டியன்,
தலைமையாசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
கோ. புதூர்,
மதுரை -4.

இடம்: மதுரை

நாள்: 10.04.23

**உறைமேல் முகவரி:**

பெறுநர்
முதன்மை ஆசிரியர்,
தினமலர் நாளிதழ்,
மதுரை -1.

---

## பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. "தமிழ்கெழு கூடல்" என்றவிடத்திலும் "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்', பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன "தமிழ் இவை பத்துமே", மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

('பண்பாட்டு அசைவுகள்' - தொ. பரமசிவன்)

அ.மா.தே. 23 | மார்ச் - 2020 | மே - 2022

1. **தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?**

   தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் இனிமை, நீர்மை, பண்பாடு, அகப்பொருள், பல்கலைப்புலமை, கலைப் புலமை, அழகு, மென்மை, பாட்டு ஆகியனவாகும்.

2. **பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.**

   அதூஉம் - இன்னிசையளபெடை

   தழீஇய - சொல்லிசையளபெடை

3. **தமிழ் என்றவுடன் உங்கள் மனத்தில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.**

   தமிழ் என்றவுடன் என் மனதில் உலகின் முதல் மொழியும் இனிமையும் வாய்ந்த மொழியும் ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?**

திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் தமிழ் மாலை என்பதாகும்.

**5. பத்தியின் மையக்கருத்திற்கேற்ப ஒரு தலைப்பிடுக.**

தமிழ்.

## மொழியோடு விளையாடு

### 1. எண்ணங்களை எழுத்தாக்குக

**விடை:**



குழாயிலிருந்து விழும் ஒரு துளி நீர்க்காக
தவமாய் தவம் கிடக்கிறது
இந்தச் சிறிய பறவை. நீரோடையில் காக்கைகளும்
குருவிகளும் குளியல்போட்டு
உடல் சிலிர்க்குகின்றன.
மனிதன் வாழத்தன்வளங்களை
எல்லாம் அள்ளிக் கொடுத்து
இயற்கையே நமக்கு அரணாக இருந்தது
தற்பொழுது மனிதன் வாழத்
தன்னைச் சுற்றியுள்ள இயற்கை எல்லாம்
மனிதன் அழித்து விட்டான்
ஒவ்வொரு திணைகளும் தன் நிலையிலிருந்து திரிந்து
பாலைவனமாக காட்சியளிக்கின்றது
ஒரு துளி நீருக்காக மனிதனும்
ஒரு நாள் இவ்வாறு அலைவான்
என்று எச்சரிக்கைமணி அடிப்பதாக
அமைந்துள்ளது இப்படம்.

**2. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**

மார்ச் - 2023

(எ.கா) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

அ) மயிர் ஓர் அழகான பறவை.

ஆ) பயிர் வளரத் தண்ணீர் வேண்டும்.

**i) பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி**

அ) ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்.

ஆ) கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.

**ii) நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை**

மார்ச் - 2020

அ.மா.தே. 23

அ) தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



ஆ) மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்.

**iii) பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.**

அ) நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது.

ஆ) பிறர் செய்த உதவியை மறக்கக்கூடாது.

**iv) நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?** ஜூன் - 2019

அ) நேற்று வந்த பையன் யார் தெரியுமா?

ஆ) பக்கத்தில் இருக்கவில்லை ஏன்?

**v) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.** ஆக - 2022

அ) கோசல நாடு ஒரு சிறந்த நாடு.

ஆ) மக்கள் மகிழ்ச்சியாய் வாழ்ந்து வந்தனர்.

---

**3. வேர்ச் சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்றுக.**

அ) வா ஆ) பேசு இ) தா ஈ) ஓடு உ) பாடு

**அ) (எ.கா) வா - வேர்ச்சொல்** மார்ச் - 2023

- ❖ அருணா வீட்டுக்கு வந்தாள். (வினைமுற்று)
- ❖ அங்கு வந்த பேருந்தில் அனைவரும் ஏறினர். (பெயரெச்சம்)
- ❖ கருணாகரன் மேடையில் வந்து நின்றார். (வினையெச்சம்)
- ❖ என்னைப் பார்க்க வந்தவர் என் தந்தையின் நண்பர். (வினையாலணையும் பெயர்)

**ஆ) பேசு - வேர்ச்சொல்**

- ❖ பாலா மேடையில் நன்றாகப் பேசினான் - வினைமுற்று
- ❖ இனிமையாகப் பேசிய பாலாவை அனைவரும் பாராட்டினர் - பெயரெச்சம்
- ❖ பேச்சாளர் குறித்த நேரத்தில் பேசி முடித்தார் - வினையெச்சம்
- ❖ பேசுபவர் அவ்வப்போது நகைச்சுவை கலந்து பேச வேண்டும் - வினையாலணையும் பெயர்.

**இ) தா - வேர்ச்சொல்**

- ❖ பாலா எனக்குப் புத்தகம் தந்தான் - வினைமுற்று
- ❖ புத்தகம் தந்த நண்பனைப் பாராட்டினான் - பெயரெச்சம்
- ❖ ஏழைக்கு உணவினைத் தந்து உதவினர் - வினையெச்சம்
- ❖ பாலாவுக்கு புத்தகம் தந்தவர் இனியனின் ஆசிரியர் - வினையாலணையும் பெயர்.

**ஈ) ஓடு - வேர்ச்சொல்**

- ❖ பாலா ஓடினான் - வினைமுற்று
- ❖ பாலா தெருவில் ஓடிய குழந்தையைப் பிடித்தான் - பெயரெச்சம்
- ❖ பாலா சிறுவனை ஓடிச் சென்று தூக்கினார் - வினையெச்சம்
- ❖ பணப்பையுடன் ஓடியவன் பிடிபட்டான் - வினையாலணையும் பெயர்.

**உ) பாடு - வேர்ச்சொல்**

- ❖ சுமதி பாடல் பாடினாள் - வினைமுற்று



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



- மேடையில் பாடிய சிறுமியை அனைவரும் பாராட்டினர் - பெயரெச்சம்
- மீண்டும் ஒரு முறை பாடிக் காட்டினான் - வினையெச்சம்
- இறை வணக்கப்பாடல் பாடியவள் சுமதி - வினையாலணையும் பெயர்.

## நிற்க அதற்குத் தக

| கோபம் வரும்போது | உடலில் நிகழும் மாற்றங்கள் | மனதில் நிகழும் மாற்றங்கள் | நான் செய்ய வேண்டியது |
|---|---|---|---|
| கோபத்தை உடனடியாக வெளிப்படுத்துவது | முகம் இயல்பு நிலையிலிருந்து மாறுதல் | பதற்றம் | கோபத்தைக் கட்டுப்படுத்திப் பொறுமையுடன் செயல்படுவேன் |
| உள்ளேயே ஒளித்துக் கொள்வது | கை கால் நடுக்கம் | தடுமாற்றம் | |
| அமைதியாவது | வியர்வை பெருகுதல் | தவறான முடிவெடுத்தல் | |
| எதிர்மறையாகக் காட்டுவது | தலை வலித்தல் | பொறுமை இழத்தல் | |

## கலைச்சொல் அறிவோம்

மே - 2022

| | |
|---|---|
| Aesthetics | - அழகியல் |
| Journalist | - இதழாளர் |
| Art Critic | - கலை விமர்சகர் |
| Book Review | - புத்தக மதிப்புரை |
| Migration | - புலம்பெயர்தல் |
| Philosopher | - மெய்யியலாளர் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



# இயல் 2

# மாமழை போற்றுதும்



**கற்றல் நோக்கங்கள்:**

- ❖ இயற்கை வேளாண்மை, நீர் மேலாண்மை ஆகியவற்றின் இன்றியமையாமை உணர்ந்து தம் சமூகப் பங்களிப்பை நல்குதல்
- ❖ இயற்கைச் சமநிலை தவறுதலால் விளையும் இழப்பு, சூழல் சீர்கேடு குறித்து அறிந்து விழிப்புணர்வு பெறுதல்
- ❖ உரையாடல், பள்ளு, குறும் புதினம் ஆகிய வடிவங்களின் வழி கருத்துகளைப் படித்துப் பொருளுணர்தல்
- ❖ மொழியைத் தவறின்றிக் கையாளவும் தமிழ்ச்சொற்களிலிருந்து பிறமொழிச் சொற்களைப் பிரித்தறியவும் திறன் பெறுதல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## பாடப்பகுதிகள்

- ❖ இயற்கை வேளாண்மை
- ❖ ஏதிலிக்குருவிகள் - **அழகிய பெரியவன்**
- ❖ காவியம் - **பிரமிள்**
- ❖ திருமலை முருகன் பள்ளு - **பெரியவன் கவிராயர்**
- ❖ ஐங்குறுநூறு - **பேயனார்**
- ❖ யானை டாக்டர் - **ஜெயமோகன்**
- ❖ மெய்ம்மயக்கம்

**உரைநடை உலகம்**

இயல் 2

# இயற்கை வேளாண்மை

J62EY

## நுழையும் முன்

❖ மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மை. அதனால்தான் ‘உழவு உலகிற்கு அச்சாணி’ என்று வள்ளுவரும் ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’ என்று பாரதியாரும் போற்றுகின்றனர். இயற்கையிலிருந்து விலகி மண்ணுக்கும் மண்ணில் வாழும் உயிர்களுக்கும் ஊறு விளைவிக்கின்ற நிலை மாறவும் இயற்கை வேளாண்மை புதுப்பொலிவு பெறவும் வலியுறுத்துகிறது இவ்வுரையாடல்.

## தெரியுமா?

❖ பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரித்து விற்பதன் மூலம் அதிக வருவாய் கிடைக்கும். இவ்வாறு ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவதை மதிப்புக் கூட்டுப்பொருள் என அழைக்கின்றனர். **ஜூன் - 2019**

❖ “இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய். அதேநேரம் எளிதில் சிதைந்துவிடும் வகையில் மென்மையானதும்கூட. நிலத்தின் வளத்தை அக்கறையுடன் நன்முறையில் பராமரித்தால், பதிலுக்கு அதுவும் மனிதத் தேவைகளை நல்ல முறையில் நிறைவு செய்யும். விவசாயத்தின் வசந்தகாலமாக இயற்கை வேளாண்மை எல்லாக் காலத்திலும் திகழும்”

**- மசானபுஃபுகோகா**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. மண்ணுக்கு வளம் சேர்ப்பன _________** மார்ச் - 2023

அ) மண்புழு ஆ) ஊடுபயிர்

இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும் **விடை: ஈ) இவை மூன்றும்**

**2. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை _________**

**அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்**

அ) அ - மட்டும் சரி ஆ) ஆ - மட்டும் சரி

இ) இரண்டும் சரி ஈ) அ - தவறு, ஆ- சரி **விடை: அ) அ - மட்டும் சரி**

**3. பிழையான தொடரைக் கண்டறிக.**

அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.

ஆ) ஏதிலிக் குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.

இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.

ஈ) யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறியமுடியும்.

**விடை: இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.**

### குறுவினா

**1. தமிழ்நாட்டின் மாநில மரம் சிறு குறிப்பு வரைக.** மார்ச் - 2023

- ❖ தமிழ்நாட்டின் மாநில மரம் பனைமரம்.
- ❖ இது ஏழைகளின் கற்பக விருட்சம்.
- ❖ சிறந்த காற்றுத் தடுப்பான்.
- ❖ நிலத்தடி நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமித்து வைக்கும் தன்மை உடையது.
- ❖ பனை மரத்திலிருந்து பதநீர், நுங்கு, பனங்கிழங்கு முதலான பயனுள்ள பொருட்கள் கிடைக்கின்றன.
- ❖ பதநீரைக் கொண்டு கருப்பட்டி, கற்கண்டு ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

### சிறுவினா

**1. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.** மார்ச் - 2020

மார்ச் - 2023 அ.மா.தே. 23 ஜூன் - 2019

- ❖ வேதி கலப்பில்லாத பூச்சிக்கொல்லி சாத்தியமே!*
- ❖ நம் முன்னோர்கள் பூச்சிக்கொல்லி மருந்தைப் பயன்படுத்தவில்லை. விளைச்சல் கூட வேண்டும் என நினைத்து ஏராளமான உரங்களைப் போட்டால் நாளாக நாளாக மண் நஞ்சாகிப்போய் விளைச்சலும் குறைந்து விடும்.
- ❖ வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை எல்லாவற்றையும் நன்றாக இடித்து கோமியத்தில் ஊற வைத்து அதைத் தெளித்தால் போதும், பூச்சிகள் நீங்கிவிடும். பயிர்களுக்கும் பாதுகாப்பு தரும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



❖ நிலத்தில் உள்ள மண்புழு போன்ற சிறிய உயிர்கள் அழிவது தடுக்கப்படுகிறது. மண்ணில் உள்ள நுண்ணுயிர்ப் பெருக்கத்தினால், மண்ணும் தன் வளத்தை இழக்காமல் வலுப்பெறுகின்றது. எனவே, வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்கு சாத்தியமே என்று நான் கருதுகிறேன்.

## நெடுவினா

**1. "சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே" என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.** மார்ச் - 2023

அன்பானவர்களே! வணக்கம்.

"சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்று கூறுகிறார் வள்ளுவர். மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளாண்மையே. எனவே, மண்ணுக்கும் மண்ணில் வாழும் உயிர்களுக்கும் ஊறுவிளைவிக்கின்ற நிலை மாற இயற்கை வேளாண்மை புதுப்பொலிவு பெற வேண்டும் என்ற என் கருத்தை முன்வைக்கின்றேன்.

அறுவடை முடிந்து பிறகு வைக்கோலைச் சமமாகப் பரப்பி மடியச் செய்து மறுபருவம் வந்தவுடன் நிலத்தில் நீரைத் தேக்கி உழ வேண்டும்.

நிலத்தில் வைக்கோலைப் பரப்புவது, உரச்செடிகளை வளர்ப்பது, நிலத்திலிருந்து கிடைக்கும் குப்பைகூளம், செடி சொத்தைகளை நிலத்திற்குக் கொடுப்பது என்ற செயல்கள் நெற்பயிரும் மாரிக்காலப் பயிரும் வளர்வதற்கான வளத்தைப் பூமிக்கு அளிக்கின்றன.

விவசாயி விளை நிலத்தில் ஒரே மாதிரியான பயிர் சாகுபடி செய்யாமல் பயிர்களை மாற்றி மாற்றி சுழற்சி முறையில் செய்தல் வேண்டும்.

ஒரே மாதிரியான பயிர் செய்வதால் நிலம் தன் வளத்தினை இழக்கிறது. இதனால் தான் சுழற்சி முறையில் செய்தல் வேண்டும். நிலமும் வளம் பெறும். பயிர்களும் நன்கு விளையும்.

இயற்கை வேளாண்மையில் ஊடுபயிர் சாகுபடி செய்வதன் மூலம் விளைச்சல் அதிகம் கிடைக்கும். களைகளின் எண்ணிக்கை குறையும். பெருமளவில் பூச்சிகளின் பாதிப்பைக் குறைக்கலாம். ஆடு மாடுகளின் சாணக் கழிவு, இலைதழைகளின் மக்கு ஆகியவற்றை மீண்டும் விவசாயத்தில் உரமாகப் பயன்படுத்த வேண்டும். வேம்பு, கற்றாழை, புங்கன், கோமியம் ஆகியவற்றைக் கொண்டு, வேதிப்பொருள் கலவாத பூச்சி விரட்டிகளைத் தயாரித்துப் பயன்படுத்த வேண்டும். இதனால் மீண்டும் மண் வளம்பெறும்.

நம் நாட்டு மரங்களை வளர்த்தால், காற்றுத் தூய்மை அடையும் மழை பெருகும். இயற்கைமுறை விவசாயத்தை மீட்டெடுத்தால், மனிதர்களாகிய நாமும் வாழலாம் நமக்கு நன்மை செய்யும் பூச்சி, பறவை இனங்களும் வாழும். இயற்கை, தன் பழமை மாறாது நமக்குப் பாதுகாப்பு அளிக்கும்.

நெல்லுக்கு நண்டோட
கரும்புக்கு ஏரோட
வாழைக்கு வண்டியோட
சென்னைக்கு தேரோட



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



என்ற வகையில் இடைவெளி விட்டு பயிர் செய்து இயற்கை வேளாண்மையைக் காப்போம்! இயற்கை விவசாயம் செய்வோம்! விவசாயிகளை வாழ வைப்போம்! நஞ்சற்ற பயிர் செய்வோம்! நாளும் நன்றாய் வாழ்வோம்!

நன்றி! வணக்கம்.

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடங்களை நிரப்புக

1. "ஒற்றை வைக்கோல் புரட்சி" என்னும் நூலின் ஆசிரியர் ________ **விடை: மசானபு ஃபுகோகா**
2. புஞ்சை நிலத்திற்கு இடும் சாம்பல் என்பது ________ **விடை: கால்நடைச் சாணத்தை எரித்தது**
3. கூற்று 1: பனைமரம் ஏழைகளோட கற்பக விருட்சம் என்று சொல்லலாம்.
   கூற்று 2: பனை மரத்திலிருந்து மதிப்புக் கூட்டுப்பொருள்களும் உருவாக்கலாம். இவை இரண்டும் சரியா? தவறா? **விடை: இரண்டு கூற்றும் சரி**
4. இயற்கை வேளாண்மையால் புகழ்பெற்றவர் ________ **விடை: நம்மாழ்வார்**
5. தமிழ்நாட்டின் மாநில மரம் ________ **விடை: பனை**
6. வைக்கோல் பற்றிய மிகச் சிறந்த ஆய்வை நிகழ்த்தியவர் ________ **விடை: மசானபு ஃபுகோகா**
7. உளுந்தின் வேர் முடிச்சுகளில் இருப்பது ________ **விடை: நைட்ரஜன்**
8. "இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய்" என்று கூறியவர் ________ **விடை: மசானபு ஃபுகோகா**
9. "உழவு உலகிற்கு அச்சாணி" என்று கூறியவர் ________ **விடை: வள்ளுவர்**
10. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாடியவர் ________ **விடை: பாரதியார்**
11. ஏழைகளின் கற்பக விருட்சம் ________ **விடை: பனைமரம்**
12. நெல்லுக்கு ஊடுபயிராகப் போடப்படுவது ________ **விடை: உளுந்து**
13. பனையிலிருந்து கிடைக்கும் நேரடிப் பொருள் ________ **விடை: நுங்கு, பதநீர்**
14. நன்செய் நிலத்திற்கு இட வேண்டிய உரம் ________ **விடை: தொழு உரம்**
15. பனைமரம் எத்தனை ஆண்டுகளில் பலன் தரும் ________ **விடை: 11 ஆண்டுகள்**

### குறு வினாக்கள்

**1. "தொழு உரம்" என்பது யாது?**

மாட்டுச் சாணத்தையும், கோமியத்தையும், வைகோலோடு சேர்த்து மக்கச் செய்து உருவாக்குவது, தொழு உரம் ஆகும். இது நன்செய் நிலத்திற்கு மட்டும் இடவேண்டிய உரமாகும்.

**2. "இயற்கை வேளாண்மை" குறித்து மசானபு ஃபுகோகா கூறியுள்ள செய்தி யாது?**

இயற்கை, எளிதில் சிதைந்து விடும் மென்மைத்தன்மை உடையது. நிலவளத்தை நன்முறையில் பராமரித்தல், மனிதனின் தேவைகளை அது நிறைவு செய்யும். இயற்கை வேளாண்மை, எல்லாக் காலத்திலும் விவசாயத்தின் வசந்தகாலமாகத் திகழும் என மசானபு ஃபுகோகா கூறியுள்ளார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**3. ஊடுபயிர் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.**

நிலத்தில் விளைவிக்கப்படும் பயிர்களுக்கு இடையே வேறொரு பயிரையும் விளைவிப்பது ஊடுபயிராகும். சான்று: நெல்லுக்கு ஊடாக உளுந்து விளைவிக்கப்படும்.

**4. பனையிலிருந்து கிடைக்கும் மதிப்புக்கூட்டுப் பொருள்கள் யாவை?**

கருப்பட்டி, பனங்கற்கண்டு ஆகியவை மதிப்புக்கூட்டுப் பொருள்களாகும்.

**5. பனைமரம் எவ்வாறு பயிரிடப்படுகிறது?**

ஒரு பனங்கொட்டையை மூன்றடிக்கு மூன்றடித் தள்ளி மற்றொரு பனங் கொட்டையை நடவேண்டும். இவ்வாறு இடைவெளி விட்டு நட்டால் அது 11 ஆண்டுகளில் பலன் தரும்.

**6. பனை தரும் பயன்கள் யாவை?**

- ❖ பனைமரம் சிறந்த காற்றுத் தடுப்பான்.
- ❖ நிலத்தடி நீர்மட்டம் பாதுகாக்கும்.
- ❖ கருப்பட்டி, பனங்கற்கண்டு, உணவுப் பொருள் கிடைக்கிறது.

**7. சாகுபடி எவ்வாறு செய்ய வேண்டும்?**

- ❖ அறுவடைக்குப் பின்னர் நிலத்தை ஆறப் போட வேண்டும்.
- ❖ சரியான கால இடைவெளியில் மாறி மாறிப் பயிரிட வேண்டும்.

**8. இயற்கை வேளாண்மை மீண்டும் புதுப்பொலிவு பெற வலியுறுத்தப்படுவது ஏன்?**

- ❖ இயற்கையிலிருந்து விலகி மண்ணுக்கும், மண்ணில் வாழும் உயிர்களுக்கும் ஊறு விளைவிக்கின்ற நிலை மாறுவதற்காக இயற்கை வேளாண்மை மீண்டும் புதுப்பொலிவு பெற வலியுறுத்தப்படுகிறது.

**9. ஐந்து விவசாய மந்திரங்கள் யாவை?** அ.மா.தே. 23 | மார்ச் - 2019 | செப் - 2020

**ஐந்து விவசாய மந்திரங்கள்:**

- ❖ உழப்படாத நிலம்
- ❖ இரசாயன உரம் இல்லாத உற்பத்தி
- ❖ பூச்சிக்கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு
- ❖ தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி
- ❖ ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல். ஆகிய, ஐந்து விவசாய மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர் மசானபு ஃபுகோகா ஆவார்.

**10. நிலத்தில் நஞ்சை நீக்க நாம் என்ன செய்ய வேண்டும்?**

- ❖ வைக்கோலை மடக்கி உழுவதோடு மட்டுமல்லாமல் பருவம் வந்தவுடன் நீரைத் தேக்கி உழுதல் வேண்டும்
- ❖ உழும் பொழுது தொழு உரம் இடவேண்டும். எனினும் ஒரே ஆண்டில் நிலத்தின் நஞ்சு நீங்காது. இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகும்.

**11. பூச்சிக்கொல்லியால் ஏற்படும் தீய விளைவுகள் யாவை?**

- ❖ பூச்சிக்கொல்லி பூச்சியைக் கொள்வதோடு அல்லாமல், விளைகின்ற பயிர்க்குள்ளேயும் ஊடுருவுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



- அதைச் சாப்பிடுகின்ற மக்களுக்கு நிறைய நோய்கள் வரும்.
- புற்றுநோய், வயிற்றுப்புண், மலட்டுத்தன்மை போன்ற பல தீய விளைவுகளை ஏற்படுத்தும்.

**12. இயற்கையான பூச்சிக்கொல்லியால் விளையும் நன்மைகள் யாவை?**

- பயிர்களை அழிக்கும் பூச்சிகள் குறையும்.
- மண்புழு போன்ற சின்ன உயிர்கள் வளர்கின்றன.
- மண்ணில் உள்ள நுண்ணுயிர்ப் பெருக்கத்தினால் மண்ணும் தன்னுடைய வளத்தை இழக்காமல் வலுப்பெறுகின்றன.

**13. இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பயன் யாது?**

- நிலத்தில் உள்ள நுண்ணுயிர் பெருக்கம் குறையாமல் மண் சத்து வீணாகாமல் நிலமும் தன்னிடம் உள்ள வளங்களை மீண்டும் மீண்டும் பெறுகிறது இயற்கையான உரம் மருந்து ஆகியவற்றைப் பயன்படுத்துவது நம் சுற்றுச் சூழலைக் காப்பதற்கான வழியாகவும் திகழ்கிறது.

## சிறு வினாக்கள்

**1. வைக்கோலின் மகத்துவம் பற்றி விளக்குக.**

வைக்கோல் மென்மையானது. இலேசானது .இந்த வைகோலைச் சமமாகப் பரப்பி, மடியச் செய்து மறுபருவம் வந்தவுடன் நிலத்தில் நீரைத் தேக்கி உழ வேண்டும். இதுவே, நிலத்தைச் சரி செய்வதற்கான முதல் வழியாகும்.

நிலத்தில் வைகோலைப் பரப்புவது, உயிர்ச்செடிகளை வளர்ப்பது, நிலத்திலிருந்து கிடைக்கும் குப்பை, செடி, செத்தைகளை நிலத்திற்கே கொடுப்பது இச்செய்கைகள் நெற்பயிரும், மாரிக்காலப் பயிரும் வளர்வதற்கான வளத்தைப் பூமிக்கு அளிக்கின்றனர். இவை அனைத்தும் வைக்கோலின் மகத்துவமாகும்.

**2. இயற்கை வேளாண்மை எல்லாக் காலத்திலும் திகழ நாம் செய்ய வேண்டுமென யாவை?**

- இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய். அதே நேரத்தில் எளிதில் சிதைந்து விடும் வகையில் மென்மையானதும் கூட.
- நிலத்தின் வளத்தை அக்கறையுடன் நன்முறையில் பராமரித்தால், பதிலுக்கு அதுவும் மனிதத் தேவைகளை நல்ல முறையில் நிறைவு செய்யும். அப்போது விவசாயத்தின் வசந்தகாலமாக இயற்கை வேளாண்மை எல்லாக் காலத்திலும் திகழும் என்று வைக்கோல் பற்றி மிகச் சிறந்த ஆய்வைச் செய்த ஜப்பான் அறிஞரான மசானபு ஃபுகோகா கூறியுள்ளார்.

**3. இயற்கை வேளாண்மை மறு மலர்ச்சிக்கு வித்தகட்டவர் யார்? அவர் உலகிற்குச் சொன்னது என்ன?**

- இயற்கை வேளாண்மை மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் ஜப்பான் நாட்டு அறிஞரான மசானபு ஃபுகோகா ஆவார்.
- மசானபு ஃபுகோகா 35 ஆண்டுகளுக்கு முன்னரே வைக்கோல் பற்றிச் சிறந்த ஆய்வைச் செய்தவர். தம் ஆய்வை "ஒற்றை வைக்கோல் புரட்சி" என்னும் நூலாக எழுதினார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



❖ இதன் வாயிலாகக சிறப்பான விவசாயம் செய்வதற்கு உழப்படாத நிலம், இரசாயன உரம் இல்லாத உற்பத்தி பூச்சிக்கொல்லி, தெளிக்காத பயிர்ப் பாதுகாப்பு தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி ஒட்டு விதை இல்லாமல் உயிர் விளைச்சல் என்னும் ஐந்து மந்திரங்களை உலகிற்கு வழங்கினார்.

## கவிதைப்பேழை

இயல் 2

# ஏதிலிக்குருவிகள்

2SLM8

### நுழையும் முன்

❖ உயிர்களின் இருப்பை இயற்கைச்சூழலே முடிவு செய்கிறது. இயற்கைக்கும் மனிதர்க்கும் தொப்புள்கொடி மழைத்துளி. மண்ணில் முதல்துளி விழுகையில் உயிர்கள் மலர்கின்றன. சூழலியல் மாற்றத்தால் நிகழ்ந்துகொண்டிருக்கும் அவலத்தைக் காட்சிப்படுத்துகிறது இக்கவிதை.

### தெரியுமா?

❖ மார்ச் 20 - உலகச் சிட்டுக்குருவிகள் நாள்.

### நூல்வெளி

❖ வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டைச் சேர்ந்த அழகிய பெரியவனின் இயற்பெயர் அரவிந்தன். புதினம், சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற படைப்புத் தளங்களில் இயங்குபவர். தகப்பன் கொடி புதினத்திற்காக 2003 ஆம் ஆண்டில் தமிழக அரசின் விருது பெற்றவர். அரசுப் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். குறடு, நெரிக்கட்டு உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளும் உனக்கும் எனக்குமான சொல், அரூப நஞ்சு ஆகிய கவிதைத் தொகுப்புகளும் மீள்கோணம், பெருகும் வேட்கை உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் இவரின் படைப்புகள்.

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. "வான் பொய்த்தது"- என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள் ________**

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

**விடை: ஆ) மழை பெய்யவில்லை**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## குறுவினா

1. **ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?** மே - 2022
   - மனிதனை அண்டி, ஒண்டி வாழ்ந்த குருவிகள் மரங்களில், கிளைகளில் அமர்ந்து பாடி ஒலி எழுப்பிய காலம் ஒன்று உண்டு.
   - மரங்கள் வெட்டப்பட்டன.
   - வான் மழை பொய்த்தது.
   - இன்று மண் வளம் குன்றியது.
   - மரங்கள் இல்லை அண்டி வாழும் குருவிகள் இல்லை.
   - அவை இருப்பிடம் இழந்து, வாழ வழியின்றி ஏதிலியாய் எங்கோ மறைந்து போயின.

## சிறுவினா

1. **காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?** ஆக - 2022
   - காற்றில் ஆடும் புல்வீடுகள் "தூக்கணாங்குருவிக் கூடுகள்"
   - குருவிகளையும் கூடுகளையும் காண முடியவில்லை.
   - முன்பெல்லாம் அடைமழைக் காலத்தில் ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடும்.
   - கரைகளில் நெடிய மரங்கள் காணப்படும்.
   - மரங்களில் பறவைகளின் ஒலிகள் கேட்டுக்கொண்டே இருக்கும்.
   - வழிநெடுகிலும் தூக்கணாங்குருவிக் கூடுகள். கூடுகளில் குருவிகள் இல்லாத காரணத்தால் காற்றில் அசையும் வீடுகளென வருணிக்கிறார்.

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடங்களை நிரப்புக

1. அழகிய பெரியவன் இயற்பெயர் ________ **விடை: அரவிந்தன்**
2. அழகிய பெரியவன் தமிழக அரசு விருது பெற்ற நூல் ________ **விடை: தகப்பன் கொடி**
3. இயற்கைக்கும் மனிதர்க்கும் தொப்புள் கொடி போன்றது ________ **விடை: மழைத்துளி**
4. நீர் புரளும் ஆற்றின் கரையெல்லாம் ________ **விடை: நெடுமரங்கள்**
5. மூங்கில் கிளையில் அமர்ந்து பாடுபவை ________ **விடை: சிட்டுகள்**
6. மரங்கள் வெட்டுண்டதால் ________ பொய்த்தது. **விடை: வான்**
7. மரங்கள் வெட்டுண்டதால் ________ மறுகியது. **விடை: மண்**
8. உலக சிட்டுக் குருவிகள் நாள் ________ ஆக - 2022 **விடை: மார்ச் -20**
9. புல் வீடுகளைக் கட்டியவை ________ **விடை: தூக்கணாங்குருவிகள்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## குறு வினாக்கள்

**1. போகும் வழியெல்லாம் எவற்றின் குரல்கள் கேட்கும் என ஆசிரியர் கூறுகிறார்?**

❖ நீர் புரண்டோடும் ஆற்றின் கரைப்பகுதிகளெல்லாம் நீண்ட மரங்கள் இருக்கும்.

❖ நாம் போகும் வழியெல்லாம் அம்மரங்களில் அமர்ந்து எழுப்புகின்ற பறவைகளின் குரல்களைக் கேட்டுக் கொண்டே செல்லலாம் என்கிறார் ஆசிரியர்.

**2. "ஏதிலிக் குருவிகள்" காட்சிப்படுத்தும் அவலம் யாது?**

❖ இயற்கைச் சூழலே உயிர்களின் இருப்பை முடிவு செய்கிறது.

❖ இயற்கைக்கும் மனிதர்களுக்குமான தொப்புள் கொடி மழைத்துளிகள்.

❖ முதல்துளி விழுகையில், உயிர்கள் மலர்கின்றன.

## சிறு வினாக்கள்

**1. அழகிய பெரியவன் - குறிப்புத் தருக.**

| | |
|---|---|
| இயற்பெயர் | : அரவிந்தன் |
| புனைப்பெயர் | : அழகிய பெரியவன் |
| ஊர் | : வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு |
| பணி | : அரசுப்பள்ளி ஆசிரியர் |
| சிறப்புகள் | : நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை போன்ற படைப்புத் தளங்களில் இயங்குபவர். "தகப்பன் கொடி" என்னும் புதினத்திற்காக 2003 ஆம் ஆண்டில் தமிழக அரசின் விருது பெற்றவர். |
| எழுதிய நூல்கள் | : குறடு, நெரிக்கட்டு, உனக்கும் எனக்குமான சொல், அரூப நஞ்சு. |

**2. மண்ணின் மார்பு சுரந்த காலமது எவ்வாறு இருந்ததாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்?**

❖ ஊரில் முன்பெல்லாம் அடைமழை என்றால் ஆற்றில் நீர் புரளும் கரைகளில் நின்ற நெடுமரங்களில் பறவைகள் குரல் எழுப்பும். இன்று குருவிகளையும் கூடுகளையும் பார்க்க இயலவில்லை.

❖ கரையினூடே போகும் வழிகள் எல்லாம் இசைக்கின்ற பறவைகளின் குரல்களைக் கேட்டுக் கொண்டே செல்லலாம்.

❖ நடந்து போகும் வழியில் தூக்கணாங்குருவிகளின் கூடுகள், புல் வீடுகளாய்க் காற்றில் ஆடும்.

❖ மூங்கில் கிளைகளில் அமர்ந்து இருக்கும் சிட்டுகள், ஆற்றில் சுழித்து ஓடும் நீரின் ஓசையுடன் சேர்ந்து பாடிக் கொண்டிருக்கும்.

❖ மண்ணின் மார்பு சுரந்து உயிர்களை ஊட்டி வளர்த்த காலம் அது. இன்றோ, மரங்கள் வெட்டுண்டன; வானமோ பொய்த்தது; மண்வளம் குன்றி விட்டது. குருவிகள் வாழ வழியின்றி அகதிகளாய் எங்கோ போய் விட்டன என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

## இலக்கணக்குறிப்பு

| | |
|---|---|
| நெடுமரங்கள் | - பண்புத்தொகை |
| மழைக்காலம் | - இருபெயரொட்டுப் பண்புத்தொகை |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



புல் வீடுகள் - உருவகம்
மண்ணின் மார்பு - ஆறாம் வேற்றுமைத் தொகை

## உறுப்பிலக்கணம்

**பார்க்க = பார் + க் + க் + அ**

- ❖ பார் - பகுதி
- ❖ க் - சந்தி
- ❖ க் - எதிர்கால இடைநிலை
- ❖ அ - வினையெச்ச விகுதி.

**சுரந்த = சுர + த்(ந்) + த் + அ**

- ❖ சுர - பகுதி
- ❖ த் - சந்தி
- ❖ "த்" - "ந்" ஆனது விகாரம்
- ❖ த் - இறந்தகால இடைநிலை
- ❖ அ - பெயரெச்ச விகுதி.

## புணர்ச்சி விதி

**1. மழைக்காலம் = மழை + காலம்**

- ❖ "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்" என்ற விதிப்படி "மழைக்காலம்" எனப் புணர்ந்தது.

**2. கரையெல்லாம் = கரை + எல்லாம்**

- ❖ "இ ஈ ஐ வழி யவ்வும்" என்ற விதிப்படி "கரை + ய் + எல்லாம்" என்றானது.
- ❖ "உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி "கரையெல்லாம்" எனப் புணர்ந்தது.

**3. நெடுமரம் = நெடுமை + மரம்**

- ❖ "ஈறுபோதல்" என்ற விதிப்படி நிலைமொழியின் ஈற்றில் உள்ள "மை" கெட்டு "நெடுமரம்" எனப் புணர்ந்தது.

# கவிதைப்பேழை

இயல் 2

## காவியம்

9Z3UH

## நுழையும் முன்

- ❖ இறகுகளின் தொகுதியைச் சிறகு என்பர். சிறகிலிருந்து பிரிந்த இறகு, நிலத்துக்கும் வானுக்கும் இடைப்பட்ட பகுதியில் நிகழும் காற்றின் தீராத தழுவல்களால் மண்ணில் வீழாது தன் வாழ்வை எழுதுகிறது. வாழ்வு என்பது காவியத்துக்கான பொதுவான பாடுபொருள்.

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## நூல் வெளி

- பிரமிள் என்ற பெயரில் எழுதிய சிவராமலிங்கம், இலங்கையில் பிறந்தவர். இவர் பானுசந்திரன், அரூப் சிவராம், தருமு சிவராம் போன்ற பல புனைபெயர்களில் எழுதியவர். புதுக்கவிதை, விமர்சனம், சிறுகதை, நாடகம், மொழியாக்கம் என விரிந்த தளத்தில் இயங்கியவர். ஓவியம், சிற்பம் ஆகியவற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய கவிதைகள் முழுமையாகப் பிரமிள் கவிதைகள் என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. **லங்காபுரி ராஜா** உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளும் **நக்ஷத்திரவாசி** என்னும் நாடகமும் **வெயிலும் நிழலும்** உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.

## பாடநூல் வினாக்கள்

### குறு வினா

**1. காற்றின் தீராத பக்கங்களில், எது எதனை எழுதிச் சென்றது?**

காற்றின் தீராத பக்கங்களின், சிறகிருந்து பிரிந்த இறகு ஒன்று, நிலத்துக்கும் வானுக்கும் இடைப்பட்ட பகுதியில், நிகழும் காற்றின் தீராத தழுவல்களால் மண்ணில் வீழாது, ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் செல்கிறது.

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடத்தை நிரப்புக

1. பிரமிள் என்ற புனைப்பெயர் கொண்டவர் __________ **விடை: சிவராமலிங்கம்**
2. பிரமிள், ஈடுபாடு கொண்டிருந்தது __________ **விடை: ஓவியம், சிற்பம்**

### குறுவினாக்கள்

**1. சிவராமலிங்கத்தின் புனைப் பெயர்களை எழுதுக.**

- பிரமிள்
- அரூப் சிவராம்
- பானுசந்திரன்
- தருமு சிவராம்.

**2. சிவராமலிங்கம் இயங்கிய துறைகள் யாவை?**

- புதுக்கவிதை
- சிறுகதை
- நாடகம்
- விமர்சனம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



## இலக்கணகுறிப்பு

பிரிந்த, தீராத - பெயரெச்சம்

எழுதி - வினையெச்சம்

## உறுப்பிலக்கணம்

**பிரிந்த = பிரி + த்(ந்) + த் + அ**

- பிரி - பகுதி
- த் - சந்தி
- "த்" - "ந்" ஆனது விகாரம்
- த் - இறந்தகால இடைநிலை
- அ - பெயரெச்ச விகுதி

**எழுதி = எழுது + இ**

- எழுது - பகுதி
- இ - வினையெச்ச விகுதி

## கவிதைப்பேழை

இயல் 2

# திருமலை முருகன் பள்ளு

## நுழையும் முன்

- உழவர், உழத்தியரின் வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிய நடையில் நயம்பட வெளிப்படுத்துவதே பள்ளுச் சிற்றிலக்கியத்தின் உட்கோளாகும். 'நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது' என்பர். வேளாண்மை இலக்கியமான பள்ளு, அரிய பல செய்திகளின் கருவூலமாக விளங்குகிறது.

## தெரிந்து தெளிவோம்

- உங்கள் மாவட்டத்திலுள்ள ஆறு, ஏரி, குளங்களின் பெயர்களை அறிவீர்களா? கேட்டறிக.
- தமிழகத்தில் முன்னோர்கள் பயிரிட்டு வந்த நெல் வகைகள் தற்பொழுது குறைந்ததற்கான காரணம் அறிவீர்களா?

## தெரியுமா?

- பள்ளு 96 வகையான சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. இது உழத்திப் பாட்டு எனவும் அழைக்கப்படும். தொல்காப்பியம் குறிப்பிடும் புலன் என்னும் இலக்கிய வகையைச் சாரும்.

## திருமலை முருகன் பள்ளு கூறும் நெல் வகைகள்

- சீரகச்சம்பா
- ரங்கஞ்சம்பா
- அதிக்கிராதி
- சீதாபோகம்
- மணல்வாரி
- முத்துவெள்ளை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



- புழுகுச்சம்பா
- சொரிகுரும்பை
- புத்தன்வாரி
- சிறைமீட்டான்
- கார்நெல்
- அரியநாயகன்
- கருங்சூரை
- பூம்பாளை
- குற்றாலன்
- பாற்கடுக்கன்
- கற்பூரப்பாளை
- காடைக் கழுத்தன்
- மிளகுச் சம்பா
- பனைமுகத்தன்
- மலைமுண்டன்
- திருவரங்கன்
- குருவைக் கிள்ளை
- முத்துவெள்ளை

## மாடு வகைகள்

- காரி, தொந்திக்காளை
- மால்காளை, மறைகாளை
- மயிலைக்காளை, மேழைக்காளை
- செம்மறையான், கருமறையான்

## உழவுக் கருவிகள்

- கலப்பை, நுகம், பூட்டு,
- வள்ளைக்கை, உழக்கோல், கொழு
- கயமரம், மண்வெட்டி, வடம்

## சொற்சுவை

- **கண்காணி:** பேச்சு வழக்கில் **கங்காணி** என்று பயன்படுத்தப்படுகிறது. கண்காணம் என்பது பயிர்த்தொழிலில் கையாளப்படும் ஒரு சொல். கங்காணம் என்றும் வழங்கப்படுகிறது. **ஆக - 2022**
- இதன்பொருள், நாள்தோறும் வயலில் நெல் அறுவடை செய்து களத்தில் ஒப்படி செய்யப்படும் நெல் அளவு என்பதாகும். கண்காணி என்பது இந்த ஒப்படியை மேற்பார்வை செய்பவரைக் குறிக்கும்.

## நூல்வெளி

- திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்திற்கு அருகில் உள்ளது பண்புளிப்பட்டணம். இவ்வூர் 'பண்பை என்றும் 'பண்பொழில்' என்றும் அழைக்கப்படும். இங்குள்ள சிறு குன்றின் பெயர் திருமலை. குன்றின் மேலுள்ள முருகக்கடவுளைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு **திருமலைமுருகன் பள்ளு** பாடப்பட்டுள்ளது. இந்நூலில் கலித்துறை, கலிப்பா, சிந்து ஆகிய பாவகைகள் விரவி வந்துள்ளன. இந்நூல் **'பள்ளிசை'** என்றும் **'திருமலை அதிபர் பள்ளு'** எனவும் வழங்கப்படுகிறது. திருமலை முருகன் பள்ளு நூலின் ஆசிரியர் பெரியவன் கவிராயர். இவர் காலம் 18ஆம் நூற்றாண்டு.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## பாடநூல் வினாக்கள்

### குறு வினா

**1. "வளருங் காவில் முகில்தொகை ஏறும் - பொன் மாடம் எங்கும் அகிற்புகை நாறும்" - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?**

சோலையில் மேகக் கூட்டம் ஏறும் என்பது பொருள். அதாவது, தென்கரை நாட்டில் உயர்ந்து வளர்ந்த மரங்கள் நிறைந்த சோலைகளில் மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும் என்பதாகும். மரங்கள் நிறைந்த இடத்தில் மழை பொழியும் என்னும் குறிப்பை இதன் மூலம் அறிய முடிகிறது.

### சிறுவினா

**1. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.** ஆக - 2022 மார்ச் - 2020

**இடம்:** திருமலை முருகன் பள்ளுவில், வடகரை நாட்டின் வளத்தைக் கூறும்போது "சலச வாவியில் செங்கயல் பாயும்" என்று பெரியவன் கவிராயரால் கூறப்படுகிறது.

**பொருள்:** நீர் நிறைந்த தாமரைத் தடாகத்தில், செம்மையான கயல்மீன்கள் துள்ளிப்பாய்ந்து, விளையாடும் என்பது பொருளாகும்.

**விளக்கம்:** வடகரை நாடு நீர், நிலவளம் மிக்கது. அங்குத் தாமரை நிறைந்த குளத்தில் கயல் மீன்கள் அச்சமின்றித் துள்ளிப் பாய்ந்து விளையாடும் மீனைப் பிடித்துண்ண வந்த சங்கிலியில் அமர்ந்துள்ள உள்ளான் பறவை, வண்டுகளின் இசையில் மயங்கி வாலை ஆட்டியபடி அமர்ந்திருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதில் வடகரை நாட்டின் நீர், நிலவளம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அ.மா.தே. 23 மார்ச் - 2023

### நெடுவினா

**1. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை விவரிக்க.** ஜூன் - 2019 மே - 2022

**வடகரை நாட்டின் வளம்:**

- ❖ வடகரை நாட்டில் வண்டுகள் இந்துளம் என்ற பண்ணைப் பாடும்.
  "மலரில் ஆரளி இந்துளம் பாடும்
  மடைஇ டங்கணி வந்துளம் ஆடும்"
- ❖ இவ்விசையைக் கேட்டு உள்ளான் பறவைகள் மீனைப் பிடித்து உண்ணாமல் வாலை ஆட்டிக் கொண்டு இருக்கும்.
- ❖ "சலச வாவியில் செங்கயல் பாயும்"
- ❖ தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளி விளையாடும்.
- ❖ "குலமின் னார்மழை பெய்யெனப் பெய்யும்" வெண்சங்குகள் முத்துகளை ஈன்று பரவிக் காணப்படும் மின்னலையொத்த பெண்கள் பெய் என்றால் மழை பெய்யும்.
- ❖ உள்ளங்கை ஏந்தி இரந்து உண்ணும் முனிவர்கள் கூறும் வார்த்தை மெய்யாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



- "புலவர் போற்றும் திருமலைச் சேவகன்" இத்திருமலையில் திருமலைச் சேவகன் வீற்றிருக்கிறார்.

**தென்கரை நாட்டின் வளம்:**

- தென்கரைநாட்டில் வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச்செல்லும்.
- பொன்னாலான மாட மாளிகையில் அகிற்புகை நறுமணம் வீசும்.
- மாட மாளிகையில் மயில்களும், மேகங்களும் சூழ்ந்து செல்லும்.
  "குளிரும் மஞ்ஞையும் கொண்டலும் காக்கும்"
- மன்னர் நீதி தவறாமல் ஆட்சி செய்வார்.
  "கொல்முறை மன்னர் மண்டலம் காக்கும்"
- இளம்பெண்கள் அரங்கில் நடித்து விளையாடுவர்.
- குளத்தில் முத்துகளை அலைகள் ஏந்த வரும்.
- அலைகள் கரையில் மோதி முத்துகள் வெடிக்கும்.
- "ஏந்தி வாவித் தரங்கம் வெடிக்கும்" இத்தகைய நாட்டில் கொன்றைமலர் சூடிய குற்றாலநாதர் வீற்றிருக்கிறார்.

## இலக்கணக்குறிப்பு

| | |
|---|---|
| செங்கயல், வெண்சங்கு | - பண்புத்தொகைகள் |
| அகிற்புகை | - ஆறாம் வேற்றுமைத்தொகை |
| மஞ்ஞையும் கொண்டலும் | - எண்ணும்மை |
| கொன்றைசூடு | - இரண்டாம் வேற்றுமைத்தொகை |

## உறுப்பிலக்கணம்

**ஈன்ற - ஈன் + ற் + அ** — ஆக - 2022

- ஈன் - பகுதி
- ற் - இறந்தகால இடைநிலை
- அ - பெயரெச்ச விகுதி

## புணர்ச்சி விதி

**1) செங்கயல் = செம்மை + கயல்** — மே - 2022

- "ஈறு போதல்" என்ற விதிப்படி செம் + கயல்
- "முன்னின்ற மெய் திரிதல்" என்ற விதிப்படி செங்கயல் எனப் புணர்ந்தது.

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடத்தை நிரப்புக

1. "பள்ளு" என்ற இலக்கிய வடிவத்தின் வேறு பெயர் __________ **விடை: உழத்திப் பாட்டு**
2. "வட ஆரியநாடு" என வழங்கப் பெறுவது __________ **விடை: திருமலை**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



3. "தென் ஆரிய நாடு" என வழங்கப்பட்டது __________ **விடை: குற்றாலம்**

4. " மஞ்ஞை" என்பது __________ குறிக்கும். **விடை: மயிலைக்**

5. "இந்துளம்" என்பது __________ **விடை: ஒருவகைப் பண்**

6. "அளி" என்பது __________ குறிக்கும் **விடை: வண்டைக்**

7. பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ) இந்துளம் | - | 1) மயில் |
| ஆ) இடங்கணி | - | 2) ஒருவகைப் பண் |
| இ) தரளம் | - | 3) சங்கிலி |
| ஈ) மஞ்ஞை | - | 4) முத்து |

**விடை: அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 1**

8. பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ) சலச வாவி | - | 1) மேகக் கூட்டம் |
| ஆ) முகில் தொகை | - | 2) கார்கால மேகம் |
| இ) கொண்டல் | - | 3) தாமரைத் தடாகம் |
| ஈ) முத்து | - | 4) அளி |
| உ) சோலை | - | 5) தரளம் |
| ஊ) வண்டு | - | 6) கா |

**விடை: அ) 3 ஆ) 1 இ) 2 ஈ) 5 உ) 6 ஊ) 4**

9. குற்றாலநாதர் சூடிய மலர் __________ **விடை : கொன்றை மலர்**

10. பள்ளிசை என்று வழங்கப்படும் நூல் __________ **விடை: திருமலை முருகன் பள்ளு**

11. வள்ளைக்கை என்பது ஒரு வகை __________ **விடை: உழவுக் கருவி**

12. நெல்லு வகையை எண்ணினாலும் __________ வகையை எண்ண முடியாது. **விடை: பள்ளு**

13. "முத்து"- என்ற பொருள் தரும் சொல் __________ **விடை: தரளம்**

14. பள்ளு என்பது __________ வகையான சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று . **விடை: 96**

15. தாமரைத் தடாகத்தில் __________ துள்ளிப் பாய்ந்து விளையாடும் **விடை: மீன்கள்**

16. மின்னலையொத்த பெண்கள் __________ என்றால் மழை பெய்யும். **விடை: பெய்**

17. தொல்காப்பியம் குறிப்பிடும் __________ எனும் இலக்கிய வகையைச் சார்ந்தது பள்ளு.

**விடை: புலன்**

---

## குறுவினாக்கள்

**1. வடகரை நாட்டில் உள்ள வண்டுகள் என்ன செய்யும்?**

வடகரை நாட்டில் உள்ள மலரில் மொய்க்கும் வண்டுகள் இந்துளம் என்னும் பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும்.

---

**2. பாமர மக்களின் வாழ்வியலைக் கூறும் இலக்கணம் யாது?**

பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**3. "மடைஇ டங்கணி வந்துளம் ஆடும்" - விளக்குக.**

- வடகரை நாட்டில், பெய்த மழை நீரை வீணாக்காமல் தேக்கி வைத்திருக்கின்றனர்.
- தேங்கிய அந்நீரில் மீன்கள் துள்ளி விளையாடுகின்றன.
- மீன்களை உண்ண வந்த உள்ளான் பறவை வாலை ஆட்டி விளையாடும்.
- இதையே "மடைஇ டங்கணி வந்துளம் ஆடும்" என்பர்.

**4. "வாவித் தரங்கம் வெடிக்கும்" - எப்போது?**

தென்கரை நாட்டில் உள்ள குளங்களில் அலைகள் முத்துகளை ஏந்தி வரும். அவ்வலைகள், கரைகளில் மோதும்பொழுது முத்துகள் சிதறி வெடிக்கும்.

**5. "பள்ளு" - குறிப்பு வரைக.**

- "உழத்திப்பாட்டு" என அழைக்கப்படும் பள்ளு, 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும்.
- கலிப்பா, கலித்துறை, சிந்து ஆகிய பா வகைகளால் பாடப்படுகிறது.
- உழவர், உழத்தியர் வாழ்வில் நிகழும் நிகழ்ச்சிகளை, எளிய நடையில் நயம்படக் கூறுகிறது.

## கவிதைப்பேழை

## இயல் 2

## ஐங்குறுநூறு


திணை : முல்லை


துறை : பருவங் (கார் காலம்) குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்தது.


### நுழையும் முன்

- இல்லறத்தில் அன்பும் அறனும் சிறக்க வேண்டித் தலைவன் பொன்னும் பொருளும் ஈட்ட வெளியூர் செல்வது பற்றிப் பல சங்கப் பாடல்கள் பேசுகின்றன. மக்கள் வாழ்வோடு இயைந்த மலர்கள், தலைவனின் வரவைத் தலைவிக்கு அறிவிக்கும் பாடலிது.

### மழைக்கால மலர்கள்


காயா


கொன்றை


நெய்தல்


முல்லை


தளவம்


பிடவம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## நூல்வெளி

- ஐந்து + குறுமை + நூறு = **ஐங்குறுநூறு.** மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல். திணை ஒன்றிற்கு நூறு பாடல்களாக, ஐந்து திணைகளுக்கு ஐந்நூறு பாடல்கள் கொண்டது. ஐந்து திணைகளைப் பாடிய புலவர்கள்: குறிஞ்சித்திணை - கபிலர், முல்லைத்திணை - பேயனார், மருதத்திணை - ஓரம்போகியார், நெய்தல் திணை - அம்மூவனார், பாலைத்திணை - ஓதலாந்தையார். ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இந்நூலைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.
- பேயனார், சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்றிய 105 பாடல்கள் கிடைத்துள்ளன.

# பாடநூல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**1. பிழையான தொடரைக் கண்டறிக.**

அ) பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.

ஆ) ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.

இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.

ஈ) யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறிய முடியும்.

**விடை: இ) குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.**

## குறுவினா

**1. அலர்ந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக.** அ.மா.தே. 23 | மார்ச் - 2023 | செப் - 2020

**அலர்ந்து = அலர் + த்(ந்) + த் + உ**

- அலர் - பகுதி
- த் - சந்தி
- "த்" - "ந" ஆனது விகாரம்
- த் - இறந்த கால இடைநிலை
- உ - வினையெச்ச விகுதி.

## சிறுவினா

**1. ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதற்பொருள், கருப்பொருள்களை அட்டவணைப் படுத்துக.**

- ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை - முல்லைத்திணை
- முதற்பொருள்: நிலமும், பொழுதும் என இரு வகைப்படும்.
- நிலம் - காடும் காடு சார்ந்த இடம்
- பொழுது - பெரும் பொழுது, சிறு பொழுது
- பெரும்பொழுது - கார்காலம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



- சிறுபொழுது - மாலை

**கருப்பொருள்கள்:**

- தெய்வம் - பெருமாள்
- மக்கள் - ஆயர், ஆய்ச்சியர்
- பறவை - காட்டுக்கோழி
- விலங்கு - மான், முயல்
- பூ - முல்லைப்பூ
- பண் - முல்லைப்பண்
- உணவுப்பொருள்- வரகு, சாமை
- தொழில் - ஏறுதழுவுதல்

## இலக்கணக்குறிப்பு

| | |
|---|---|
| ஆல் | - அசைநிலை |
| கண்ணி | - அண்மை விளிச்சொல் |
| ஆடுகம் | - தன்மைப் பன்மை வினைமுற்று |

## உறுப்பிலக்கணம்

**அலர்ந்து - அலர் + த் (ந்) + த் + உ** செப் - 2020 மார்ச் - 2023 அ.மா.தே. 23

- அலர் - பகுதி
- த் - சந்தி, (ந் ஆனது விகாரம்)
- த் - இறந்தகால இடைநிலை
- உ - பெயரெச்ச விகுதி

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடத்தை நிரப்புக

1. ஐங்குறுநூறுப் பாடல்களில் அமைந்துள்ள பா __________ **விடை: ஆசிரியப்பா**
2. "முல்லைத்திணை" பாடுவதில் வல்லவர் __________ **விடை: பேயனார்**
3. ஐங்குறுநூறு- பிரித்து எழுத __________ என வரும். **விடை: ஐந்து + குறுமை + நூறு**
4. ஐங்குறுநூற்றைத் தொகுத்தவர் __________ **விடை: புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்**
5. ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தவர் __________ **விடை: மாந்தரஞ்சேரல் இரும்பொறை**
6. முல்லைத் திணையின் தலைவன், தான் வருவதாகச் சொல்லிச் சென்ற காலம் __________
   **விடை: கார்காலம்**
7. ஐங்குறுநூற்றின் அடி வரையறை __________ கொண்டது.
   **விடை: மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



8. ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் ________ **விடை: பெருந்தேவனார்**

9. "கவினி" என்பதன் பொருள் ________ **விடை: அழகுற**

10. பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ) குறிஞ்சி | - | 1) அம்மூவனார் |
| ஆ) முல்லை | - | 2) ஓரம்போகியார் |
| இ) மருதம் | - | 3) பேயனார் |
| ஈ) நெய்தல் | - | 4) கபிலர் |

**விடை: அ) 4 ஆ) 3 இ) 2 ஈ) 1**

## குறுவினாக்கள்

**1. பேயனார்- பற்றி எழுதுக.**

- சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்றிய பாடல்களுள் 105 மட்டுமே கிடைத்துள்ளன.
- ஐங்குறுநூற்றில் முல்லைத்திணைப் பாடல்களைப் பாடியுள்ளார்.

**2. முல்லைத் திணைக்குரிய சிறுபொழுது, பெரும் பொழுது யாவை?**

சிறுபொழுது - மாலை

பெரும் பொழுது - கார்காலம்.

**3. மழைக்கால மலர்கள் யாவை?**

காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம்.

**4. பேரமர்க் கண்ணி -என்று யார் யாரை விளித்தனர்?**

அழகிய பெரிய கண்களை உடையவளே! என்று முல்லை நிலத் தலைவன், தன் தலைவியை விளித்தான்.

## சிறுவினாக்கள்

**1. ஐங்குறுநூறு - நூற்குறிப்புத் தருக.**

**ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு**

- மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல்.
- திணை ஒன்றிற்கு 100 பாடல்களாக, ஐந்து திணைகளுக்கு 500 பாடல்கள் கொண்டது.
- ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- இந்நூலைத் தொகுத்தவர் பலத்துறை முற்றிய கூடலூர்கிழார்.
- தொகுப்பித்தவர் யானைக்கண்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை.
- ஐந்திணைகளில் ஒன்றான முல்லைத் திணையைப் பற்றிய பாடல் நமக்குப் பாடமாக அமைந்துள்ளது.
- இப்பாடலைப் பாடியவர் பேயனார்.
- இவர் சங்ககாலப் புலவர்களில் ஒருவர்.
- இவர் இயற்றிய 105 பாடல்கள் கிடைத்துள்ளன.

**ஐந்திணைகளைப் பாடிய புலவர்கள்:**

குறிஞ்சித்திணை - கபிலர்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



முல்லைத்திணை - பேயனார்
மருதத்திணை - ஓரம்போகியார்
நெய்தல்திணை - அம்மூவனார்
பாலைத்திணை - ஓதலாந்தையார்

**2. முல்லைத்திணை, தலைவன் தலைவிக்கு உரைத்த துறை - விளக்குக**

**அ) முல்லை திணை:**

**விளக்கம்:**

- பொருளீட்டுவதற்காக வெளியூர் சென்ற தலைவன், தான் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்ற கார்காலத்திற்கு முன்னரே வீட்டிற்கு திரும்புகிறான். தான் வருவதாகக் கூறிச் சென்ற மழைக்காலம் முடியும் முன்னே வந்துவிட்டதனை உணர்த்த நினைக்கிறான்.
- பெரிய அழகிய கண்களை உடையவளே அழகிய மாலை நேரத்தில் கொல்லைப் புறத்தில் உள்ள முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய மலர்கள் பூத்திருக்கின்றன. அப்பூக்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட, விரைந்து வா என்று தலைவன் தன் தலைவியை அழைக்கிறான்.

**திணைப் பொருத்தம்:**

இப்பாடலில் முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுதான கார்காலமும், சிறுபொழுதான மாலை நேரமும், இடம்பெற்றிருப்பதால் இப்பாடல் முல்லைத் திணைக்குப் பொருத்தமாயிற்று.

**ஆ) கார்காலப் பருவம் குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னரே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்த துறை:**

முல்லை நிலத் தலைமகன் தான் வருவதாகச் சொன்ன காலத்திற்கும் முன்பே வந்தேன். சொல்லாமல் சொல்லும் மலர்களைக் கண்டேன். அகன்ற கடைவிழி உடையவளே கொல்லைப் புறத்தில் கொட்டிக் கிடக்கும் பேரழகுப் பூக்களின் பாடலைக் கொண்டாடி மகிழ்வோம். விரைந்து ஓடிவா என்று தலைவியிடம் உரைத்தான் தலைவன்.

**சான்று:** "காயா கொன்றை நெய்தல் முல்லை"

**துறைப் பொருத்தம்:**

இப்பாடலில் தலைவன் தான் வருவதாய்க் கூறிச் சென்ற பருவத்திற்கு முன்னரே வந்துள்ளமையைத் தலைவிக்குக் காட்ட, முல்லை நிலத்தில் மழைக்கால மலர்கள் பூத்திருப்பதை கூறியிருப்பதால் இப்பாடல் குறித்த பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்றத் தலைவிக்கு உரைத்த துறைக்குப் பொருத்தமானதாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



விரிவானம்

இயல் 2

# யானை டாக்டர்

– ஜெயமோகன்

## நுழையும் முன்

❖ காட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்கும் யானைகளைக் 'காட்டின் மூலவர்' என்பர். மனிதர்கள் அல்லாத உயிரினங்களில் தன்னை அறியும் ஆற்றலைப் பெற்றதும் மனிதர்களின் குணங்களில் பலவற்றைக் கொண்டதுமான யானைகள் நமது பண்பாடு, கலைகளின் பிரிக்க முடியாத கூறாக விளங்குகின்றன. அவற்றுக்குத் தெரிந்தோ தெரியாமலோ நாம் பல்வேறு இன்னல்களை இழைக்கிறோம். வானத்து நிலவும் மண்ணுலகத்துக் கடலும் போல் என்றும் அலுக்காத யானைகளின் பேருருக் காட்சியைக் காண அவற்றின் தடத்தைப் பின்தொடர்வோம்.

## சிறப்பு 1

**நிகண்டுகளில் யானையைக் குறிக்கும் வேறு சொற்கள்**

1. கயம்
2. வேழம்
3. களிறு
4. பிளிறு
5. களபம்
6. மாதங்கம்
7. கைம்மா
8. வாரணம்
9. அஞ்சனாவதி
10. அத்தி
11. அத்தினி
12. அரசுவா
13. அல்லியன்
14. அனுபமை
15. ஆனை
16. இபம்
17. இரதி
18. குஞ்சரம்
19. வல்விலங்கு
20. கரி
21. அஞ்சனம்

## சிறப்பு 2

❖ மனிதர்கள் தவிர்த்த மற்றைய விலங்குகளுள் யானைகள், அதிக நாள்கள் வாழும் தரைவாழ் விலங்குகள் ஆகும். வேட்டை விலங்குகளாகவும் காட்டுயிர்களின் உணவுப் படிநிலையில் உயர்நிலையிலுள்ளவையாகவும் இருக்கின்ற சிங்கம், புலி முதலியனவும் நெருங்கு அஞ்சும் வலிமை கொண்டவை யானைகள். இவை குடும்பமாக வாழும்; மிகுதியான நினைவாற்றல் கொண்டவை. யானைகளுள் மூன்று வகைகள் இன்று உலகில் எஞ்சியுள்ளன. அவை ஆப்பிரிக்கப் புதர்வெளி யானைகள், ஆப்பிரிக்கக் காட்டு யானைகள், ஆசிய யானைகள் ஆகியனவாகும். பொதுவாக எல்லா யானைகளும் ஏறத்தாழ 70 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன.

## சிறப்பு 3

❖ காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு.

- கலித்தொகை 2: 26 - 27



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## சிறப்பு 4

❖ யானை டாக்டர் என்று அழைக்கப்பட்ட டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி, தமிழகத்தின் முக்கியமான காட்டியல் வல்லுநர்களில் ஒருவர். யானைகளுக்காகத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்தவர். உலகப்புகழ் பெற்ற அறிவியல் இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். வனப்பேணுநர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான வேணுமேனன் ஏலீஸ் விருதினை 2000 ஆம் ஆண்டில் பெற்றார். தமிழகக் கோவில் யானைகளுக்கு வனப் புத்துணர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அரசின்மூலம் செயல்படுத்தியவர்.

## நூல்வெளி

❖ ஜெயமோகன், நாகர்கோவிலைச் சேர்ந்தவர். **விஷ்ணுபுரம், கொற்றவை** உள்ளிட்ட பல புதினங்களோடு சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இயற்கை ஆர்வலர். யானையைப் பாத்திரமாக வைத்து **ஊமைச்செந்நாய், மத்தகம்** ஆகிய கதைகளையும் எழுதியுள்ளார். இந்தக் குறும் புதினம் **'அறம்'** என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்று உள்ளது.

# பாடநூல் வினாக்கள்

## பலவுள் தெரிக

1. **பொருத்தமான இலக்கிய வடிவம் எது?**
   அ) ஏதிலிக் குருவிகள் - மரபுக்கவிதை
   ஆ) திருமலை முருகன்பள்ளு - சிறுகதை
   இ) யானை டாக்டர் - குறும்புதினம்
   ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை

   **விடை: இ) யானை டாக்டர் - குறும்புதினம்**

## நெடுவினா

1. **யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களை அழித்துக் கொண்டிருக்கிறான். உலகில் உயிரினங்கள் உருவான போதே அவை வாழ்வதற்கான இயற்கை வளங்களை இறைவன் படைத்தான். அவ்வாறு படைக்கப்பட்ட இயற்கை வளங்கள் உயிரினப் பாதுகாப்பு பற்றி இக்கட்டுரையில் பின்வருமாறு காண்போம்.

**யானை டாக்டர்:**

"யானை டாக்டர்" என்று அழைக்கப்படுபவர் டாக்டர். வி. கிருஷ்ணமூர்த்தி. யானைகளுக்காகத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்தவர். யானைகளின் உடல்நிலையைப் பேணுவதற்காக உருவாக்கிய விதிமுறைகள்தான் இந்திய வானவியல் துறையின் கையேடாக உள்ளன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**காட்டின் பயன்கள்:**

காடுகளும் காட்டில் உள்ள விலங்குகளும் நாட்டின் செல்வம் ஆகும். காட்டு உயிரிகளால் காடுகளில் பல அரியவகை மரம், செடி, கொடிகள் தழைத்து வளர்கின்றன. நோயுறும் விலங்குகள் அவற்றை உண்டு இயற்கை வைத்தியம் செய்து கொள்கின்றன. அவற்றைப் பயன்படுத்தி ஆறறிவு படைத்த நாமும் நோய் நீக்க முடிகிறது. பலவகைகளில் நற்பயனளிக்கும் காடுகளை மக்கள் பாதுகாக்கவேண்டும்.

**இயற்கையின் பாதுகாப்பு:**

இன்றைய மனிதனின் வாழ்க்கைமுறை நிற்கக்கூட நேரமில்லாமல் இயந்திரமாகிவிட்டதால் வனவிலங்குகள், காடுகள், அதில் வாழும் விலங்குகள் ஆகியவற்றைப் பாதுகாக்கத் தவறியதால், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகிறது. இந்த அழிவிலிருந்து பாதுகாக்க மத்திய மாநில அரசுகள் தனிச் சட்டங்களை உருவாக்கி காப்பகங்கள் அமைத்துப் பராமரிக்கப்படுகின்றன. சரணாலயங்கள் ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அழிந்து வரும் உயிரினங்களை பாதுகாத்து அவற்றின் அவசியத்தை ஏற்படுத்த வேண்டும்.

**காடுகளில் யானைகளின் இன்றைய நிலைப்பாடு:**

பண்டைய இந்தியாவில் மனிதனால் பயன்படுத்தப்பட்ட விலங்குகளில் பசு, குதிரைக்கு அடுத்தபடியாக யானை மிகவும் போற்றிப் பாதுகாக்கப்பட்டது. ஒரு காலக்கட்டத்தில் காடுகளின் அரசன் என்று பெருமையாகக் கூறப்பட்ட யானைகள், இன்றைய நிலையில் மனித இனத்தால் காடுகள் அழிக்கப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்டதால் உணவுக்காகவும், நீர்த் தேவைக்காகவும் காட்டை விட்டு வெளியேறுகின்றன. இதனால் வாகனங்களில் அடிபட்டும், சுடப்பட்டும் இறக்கின்றன.

**உயிரினப் பாதுகாப்பு:**

இயற்கை உயிரினங்களை நம்மால் இயன்றவரை பாதுகாப்போம். காடுகளை அழித்து நாடாக்கும் திட்டத்தைக் கைவிடுவோம். வன உயிரினங்களுக்கு மருத்துவ உதவி அளிப்போம். சுற்றுப்பயணம் என்ற பெயரில் காட்டுக்கு வரும் மக்கள், குடித்துவிட்டு வெறியுடன் காட்டு மரத்தின் மீது வீசி எரியும் மதுக்குப்பிகள் மிகவும் ஆபத்தானவை. மற்ற எந்த மிருகத்தை விடவும் யானைகளுக்கு அவை மிக அபாயகரமானவையாகும்.

**முடிவுரை:**

யானை டாக்டர் கதையின் வாயிலாக மனிதன் மரங்களை வெட்டுவது, விலங்குகளின் குடியிருப்புகளை ஆக்கிரமிப்பது, அவற்றின் வாழ்விடங்களை மாசுபடுத்துவது என்னும் செயல்களைக் கைவிட வேண்டும். நாம் நலமாக வாழ விரும்புவதுபோலப் பிற உயிரினங்களையும் மகிழ்ச்சியாக வாழ விடவேண்டும். உலகின் நல வாழ்வுக்கு விலங்குகளின் வாழ்வும் இன்றியமையாதது என்பதை, நாம் அறிய முடிகிறது.

"காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
யாழ்வரைத் தாங்கி யாங்கு" - என்கிறது கலித்தொகை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## இனிக்கும் இலக்கணம்

இயல் 2

## புணர்ச்சி விதிகள்

TAZP6

### நன்னூல் விதிகள்

**சிறப்பு 1:**

| | |
|---|---|
| இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை<br>உயிர்வழி வவ்வும் ஏமுன்இவ் விருமையும்<br>உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்<br>(நன்னூல் - 162) | இ, ஈ, ஐ - ய்<br>பிற உயிர்கள் - வ்<br>ஏ - ய், வ் |

**சிறப்பு 2:**

- ❖ உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் (நன்னூல் - 164)

**சிறப்பு 3:**

- ❖ நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள்
  டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே. (நன்னூல் - 183)

**சிறப்பு 4:**

- ❖ முற்றும் அற்று ஒரோவழி (நன்னூல் - 164)

**சிறப்பு 5:**

- ❖ இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
  கசதப மிகும்; விதவாதன மன்னே. (நன்னூல் - 165)

**சிறப்பு 6:**

- ❖ பூப்பெயர் முன் இனமென்மையுந் தோன்றும் (நன்னூல் - 200)

**சிறப்பு 7:**

- ❖ உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (நன்னூல் - 204)

**சிறப்பு 8:**

- ❖ தனிக்குறில்முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் (நன்னூல் - 205)

**சிறப்பு 9:**

- ❖ மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
  வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும் (நன்னூல் - 219)

**சிறப்பு 10:**

- ❖ ஈறு போதல் இடைஉகரம் இய்யாதல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



ஆதி நீடல் அடிஅகரம் ஐ ஆதல்
தன்னொற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்
இனம் மிகல் இனையவும் பண்பிற்கு இயல்பே (நன்னூல் - 136)

## பாடநூல் வினாக்கள்

### இலக்கணத் தேர்ச்சிகள்

**1. குற்றியலுகரப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.**

எ.கா: வண்டு + அழகு = வண்டழகு

- "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்" என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று "உ" கரம் கெட்டு, (ட் + உ) -வண்ட் + அழகு என்றானது.
- "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி (ட் + அ - ட) (வண்ட் + அழகு) வண்டழகு எனப் புணர்ந்தது.

**2. கருவிழி, பாசிலை, சிறியன், பெருங்கல் ஆகிய சொற்களைப் பிரித்து புணர்ச்சி விதி தருக.**

**அ) கருவிழி = கருமை + விழி**

- "ஈறுபோதல்" என்ற விதிப்படி "மை" கெட்டு "கருவிழி" எனப் புணர்ந்தது.

**ஆ) பாசிலை = பசுமை + இலை**

- "ஈறுபோதல்" என்ற விதிப்படி "மை" கெட்டு "பசு + இலை" என்றானது.
- "ஆதிநீடல்" என்ற விதிப்படி (ப் + ஆ - பா) பாசு + இலை என்றானது.
- "உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்" என்ற விதிப்படி "பாச் + இலை" என்றானது.
- "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி "பாசிலை" என்று புணர்ந்தது.

**இ) சிறியன் = சிறுமை + அன்**

- "ஈறுபோதல்" என்ற விதிப்படி "மை" கெட்டு "சிறு + அன்" என்றானது.
- "இடை உகரம் இ ஆதல்" என்ற விதிப்படி (று - றி) "சிறி + அன்" என்றானது.
- "இ ஈ ஐ வழி யவ்வும்" என்ற விதிப்படி உடம்படுமெய் தோன்றி "சிறி + ய் + அன்" என்றானது.
- "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி(ய் + அ - ய) "சிரியன்" எனப் புணர்ந்தது.

**ஈ) பெருங்கல் = பெருமை + கல்**

- "ஈறுபோதல்" என்ற விதிப்படி "மை" கெட்டு "பெரு + கல்" என்றானது.
- "இனமிகல்" என்ற விதிப்படி "க" கரத்திற்கு இனமான "ங" கரம் தோன்றிப் "பெருங்கல்" எனப் புணர்ந்தது.

**3. புணர்ச்சி விதி தந்து விளக்குக.**

புலனறிவு, வில்லொடிந்தது, வழியில்லை, திரைப்படம், ஞாயிற்றுச்செலவு.

**அ) புலனறிவு - புலன் + அறிவு**

- "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி "புலனறிவு" எனப் புணர்ந்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**ஆ) வில்லொடிந்தது - வில் + ஒடிந்தது** மார்ச் - 2019

- ❖ "தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்" என்ற விதிப்படி "வில்ல் + ஒடிந்தது.
- ❖ "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி "வில்லொடிந்தது" எனப் புணர்ந்தது.

**இ) வழியில்லை - வழி + இல்லை**

- ❖ "இ ஈ ஐ வழி யவ்வும்" என்ற விதிப்படி உடம்படுமெய் மிகுந்து "வழி + ய் + இல்லை" என்றானது.
- ❖ "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி "வழியில்லை" எனப் புணர்ந்தது.

**ஈ) திரைப்படம் - திரை + படம்**

- ❖ "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்" என்ற விதிப்படி "திரைப்படம்" எனப் புணர்ந்தது.

**உ) ஞாயிற்றுச் செலவு - ஞாயிறு + செலவு**

- ❖ "நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களுள் ஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே" என்ற விதிப்படி "ஞாயிற்று + செலவு" என்றானது.
- ❖ "இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் க ச த ப மிகும்" என்ற விதிப்படி "ஞாயிற்றுச் செலவு" எனப் புணர்ந்தது.

---

**4. விதி வேறுபாடறிந்து விளக்குக.**

தன்னொற்றிரட்டல் - "தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்".

இனமிகல் - வன்மைக்கு இனமாகத் திரிபவும் ஆகும்.

**அ) தன்னொற்றிரட்டல்:**

பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் "தன்னொற்றிரட்டல்" விதியைப் பயன்படுத்த வேண்டும்.

எ.கா: வெற்றிலை - வெறுமை + இலை - வெற்று + இலை - வெற்ற் + இலை = வெற்றிலை

**ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரண்டும்:**

தனிக்குறில் முன் ஒற்று வரும் புணர்ச்சியில் வருமொழி முதல் உயிரெழுத்தாக இருப்பின் நிலைமொழி ஒற்று இரட்டிக்கும்.

எ.கா: கல் + அதர் - கல்ல் + அதர் - கல்லதர் எனப் புணரும்.

**இ) இனமிகல்:**

பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் வருமொழி முதல் வல்லினத்திற்கு இனமான மெல்லின மெய் நிலைமொழி ஈற்றில் புணர "இனமிகல்" என்ற விதி வரும்.

எ.கா: கருமை + கடல் = கருங்கடல் எனப் புணரும்.

**வன்மைக்கு இனமாகத் திரிபவும் ஆகும்:**

மகர ஈற்றுப் புணர்ச்சியில் வரும் "ம்" மெய் நீங்கி நிலைமொழி உயிரீறாக இருக்கும் போது வருமொழி முதல் வல்லினத்திற்கு இனமாக நிலைமொழி ஈற்றில் மெல்லினம் தோன்றும்.

எ.கா: காலம் + கடந்தவன் = காலங்கடந்தவன் எனப் புணரும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**5. பொருத்துக:**

அ) அடி அகரம் ஐ ஆதல் - 1. செங்கதிர்

ஆ) முன் நின்ற மெய்திரிதல் - 2. பெருங்கொடை

இ) ஆதிநீடல் - 3. பைங்கூழ்

ஈ) இனமிகல் - 4. காரிருள்

**விடைகள்:**

அ) அடி அகரம் ஐ ஆதல் - 1. பைங்கூழ்

ஆ) முன் நின்ற மெய்திரிதல் - 2. செங்கதிர்

இ) ஆதிநீடல் - 3. காரிருள்

ஈ) இனமிகல் - 4. பெருங்கொடை

---

**6. கூற்றுக்களைப் படித்து கீழ்க்காண்பவற்றுள் சரியானதைத் தேர்க.**

அ) நிலைமொழியில் குற்றியலுகரமாகவும் வருமொழியின் முதல் உயிரெழுத்தாகவும் அமையும் போது "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்" என்னும் விதியைப் பெறும்.

ஆ) நிலைமொழியின் ஈற்றில் இ ஈ ஐ வரும்போது வகர உடம்படுமெய் பெறும்.

இ) பண்புப்பெயர்ப் புணர்ச்சியில் "ஈறுபோதல்" என்னும் விதியே முதன்மையானதாக விளங்கும்.

ஈ) தன்னொற்றிரட்டல் என்னும் விதி பண்புப்பெயர்ப் புணர்ச்சிக்குப் பொருந்தும்.

1) அ, ஆ, இ சரி, ஈ தவறு
2) அ, இ, ஈ சரி, ஆ தவறு
3) அ, ஆ சரி, இ, ஈ தவறு
4) அ, ஆ, ஈ சரி, இ தவறு

**விடை: 2) அ, இ, ஈ, சரி, ஆ தவறு**

---

## குறுவினா

**1. ய், வ், ஞ், ட், ற், ந் - மெய்களுக்கான வேற்றுநிலை, உடனிலை மெய்ம்மயக்கங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.**

**மெய் - உடல்நிலை மெய்ம்மயக்கம் - வேற்றுநிலைமெய்ம்மயக்கம்**

- ய் - செய்யலாம் - வாய்மை
- வ் - இவ்விதம் - தெவ்யாது
- ஞ் - விஞ்ஞானம் - மஞ்சள்
- ட் - பட்டம் - காட்சி
- ற் - வெற்றி - பயிற்சி
- ந் - செந்நெறி - தந்த



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## சிறுவினா

**1. தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் இன எழுத்துகளின் பங்கைக் குறிப்பிடுக.**

**தமிழ் நெடுங்கணக்கு:**

❖ உயிர் 12 ம், மெய் 18 ம் சேர்ந்து 216 உயிர்மெய் எழுத்துகளாக உருவாவதை வரிசையாய்க் கொண்டுள்ளன.

**இன எழுத்துகள்:**

❖ தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் வல்லின மெய்கள் ஒவ்வொன்றிற்கும் அவற்றிற்கு இனமான மெல்லின மெய்கள் அடுத்தடுத்து வந்து இன எழுத்துகளாய்ப் பங்கு பெறுகின்றன.

**சான்று:**

வல்லினம் - க் - க, கா, கி, கீ......

மெல்லினம் - ங் - ங, ஙா, ஙி, ஙீ......

## தெரிந்து தெளிவோம்

**மெய்ம்மயக்கம்:**

❖ மொழிக்கு முதலில் வரும் எழுத்துகளையும், இறுதியில் வரும் எழுத்துகளையும் அறிந்து கொண்டதைப் போலவே மொழிக்கு இடையில் வரும் எழுத்துகளையும் அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறான எழுத்துகள் தமிழ்ச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் கண்டறியவும் பயன்படுத்தவும் உதவுகின்றன.

❖ சொல்லின் இடையில் மெய்யெழுத்துகள் அடுத்தடுத்து வருவது மெய்ம்மயக்கம் எனப்படும். இது உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என இரண்டு வகைப்படும்.

**உடனிலை மெய்ம்மயக்கம்:** ஜூன் - 2019

❖ சொற்களின் இடையில் ஒரே மெய்யெழுத்து அடுத்தடுத்து வருவது உடனிலை மெய்ம்மயக்கம் எனப்படும். தமிழில் க், ச், த், ப் ஆகிய மெய்யெழுத்துகள் தம் எழுத்துகளுடன் மட்டுமே சேரும் உடனிலை மெய்ம்மயக்க எழுத்துகள் ஆகும். இந்த எழுத்துகளின் அருகில் அவற்றுக்குரிய எழுத்து வரிசை மட்டுமே வரும். பிற எழுத்துகள் வாரா. அவ்வாறு வந்தால் அச்சொல் தமிழ்ச்சொல்லாக இருக்காது.

| | |
|---|---|
| அச்சம் | எச்சம் |
| மொத்தம் | சாத்தன் |
| அப்பம் | கப்பம் |

❖ எடுத்துக்காட்டாக, பக்கம் என்ற சொல்லில் (ப + க் + க் + அ + ம்) க் என்னும் மெய்யெழுத்து தொடர்ந்து இருமுறை வந்துள்ளதைப் பாருங்கள். இதுபோலவே ச், த், ப் ஆகிய எழுத்துகளும் வரும்.

**வேற்றுநிலை மெய்ம்மயக்கம்** ஜூன் - 2019

| | |
|---|---|
| ர் | - தேர்தல், உயர்வு |
| ழ் | - வாழ்பவன், சூழ்க |

❖ சொல்லின் இடையில் வெவ்வேறு மெய்யெழுத்துகள் தொடர்ந்து வருவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும். தமிழில் ர், ழ் ஆகிய இரண்டு மெய்யெழுத்துகள் தம் வரிசை எழுத்துகளுடன் சேர்ந்து வராமல் பிற மெய்யெழுத்துகளுடன் மட்டுமே சேர்ந்து வரும். எனவே, இவ்விரு மெய்யெழுத்துகளும் மட்டுமே சேர்ந்து வரும். எனவே, இவ்விரு மெய்யெழுத்துகளும் வேற்றுநிலை மெய்ம்மயத்திற்கு மட்டுமே உரியவையாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



❖ க், ச், த், ப், ர், ழ் ஆகிய ஆறனையும் தவிர்த்த ஏனைய பன்னிரண்டு மெய்களும் உடனிலை மெய்ம்மயக்கமாகவும் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் உள்ளன. இவற்றையும் மெய்ம்மயக்கம் என்றே கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| ட் - பட்டம், காட்சி | ம் - அம்மா, அம்பு |
| ற் - வெற்றி, பயிற்சி | ன் - மன்னன், இன்பம் |
| ங் - அங்ஙனம், தங்கம் | ய் - செய்யலாம், வாய்மை |
| ஞ் - விஞ்ஞானம், மஞ்சள் | ல் - நல்லவன், செல்வம் |
| ண் - தண்ணீர், நண்பகல் | வ் - இவ்விதம், தெவ்யாது |
| ந் - செந்நெறி, தந்த | ள் - உள்ளம், கொள்கை |

**ஈரொற்று மெய்ம்மயக்கம்** செப் - 2020

❖ தனிச்சொற்களிலோ கூட்டுச்சொற்களிலோ சொற்களின் இடையில் **ய், ர், ழ்** ஆகிய மெய்கள் ஈரொற்றாய் வரும். (மூன்று மெய்களாக மயங்கி வரும்) இதனை ஈரொற்று மெய்ம்மயக்கம் என்பர்.

| | | |
|---|---|---|
| ய் - காய்ச்சல், நாய்க்கால் | ர் - உயர்ச்சி, தேர்க்கால் | ழ் - வீழ்ச்சி - காழ்ப்புணர்ச்சி |

அ.மா.தே. 23

## பயிற்சி பெறுக

❖ மெய்ம்மயக்கம் என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? அவை யாவை?

❖ உடனிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன? சான்று தருக.

❖ வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன? சான்று தருக.

❖ மயங்கொலிப் பிழைகள் என்பவை யாவை?

❖ உடனிலையாகவும் வேற்று நிலையாகவும் வரும் மெய்கள் யாவை?

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடங்களை நிரப்புக

1. "கலை + அறிவு" புணரும் புணர்ச்சி வகை ________ **விடை: உடம்படுமெய்ப் புணர்ச்சி**
   அ.மா.தே. 23 செப் - 2020
2. பதினெட்டு மெய்களுள் ________ மெய்கள் மட்டும் உடம்படுமெய்களாகும். **விடை: ய், வ்**
3. "செந்தமிழ்" என்னும் சொல்லுக்குரிய விதிகள் ________ **விடை: ஈறுபோதல், முன் நின்ற மெய் திரிதல்**
4. "கருங்கடல்" என்னும் சொல்லுக்குரிய விதிகள் ________ ஜூன் - 2019 **விடை: ஈறுபோதல், இனமிகல்**
5. நெடில் தொடர்க், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் வரும் மொழியோடு சேரும்போது ________ புணரும்.
   **விடை: ஒற்று இரட்டித்து**
6. "பாடவேளை" என்பதில் பயின்று வரும் புணர்ச்சி ________ **விடை: மகர ஈற்றுப் புணர்ச்சி**
7. "கல்லதர்" என்ற சொல்லில் பயன்படுத்தும் விதி ________
   **விடை: தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



## குறுவினாக்கள்

**1. புணர்ச்சி விதிகள் எதற்குப் பயன்படுகின்றன?**

- மொழியைப் பிழையின்றிக் கையாளவும், பாடல் அடிகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் பிரித்து அறியவும், மொழி ஆளுமையைப் புரிந்து கொள்ளவும் பயன்படுகின்றன.

**2. உடம்படுமெய் என்றால் என்ன?**

- நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் உயிர் எழுத்துகளாக இருந்தால் உச்சரிப்பின் போது ஒலி உடன்பாடு இல்லாமல் இடைவெளி ஏற்படும். எனவே, உடன்படாத அவ்விரு மொழிகளையும் சேர்த்துப் புணர வரும் மெய், உடம்படுமெய் ஆகும். அவ்வாறு உடன்படுத்த வரும் மெய் ய், வ் ஆகும்.

  **சான்று:** கோ + வ் + இல் = கோவில்

**3. இயல்பீறு, விதியீறு - புணர்ச்சியைக் கூறி, சான்று தருக.**

- "இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் க ச த ப மிகும்" - பள்ளி + தோழன் = பள்ளித்தோழன்.

**4. பூப்பெயர்ப் புணர்ச்சி- விளக்குக.**

பூ என்னும் சொல் நிலை மொழியாக இருந்தால், வருமொழியின் முதல் எழுத்து மெய்யெழுத்தாக வரும்போது, இனமான வல்லினமே மிகுந்து புணரும் ."பூப்பெயர் முன் இன மென்மையும் தோன்றும்"

எ.கா: பூ + கொடி = பூங்கொடி, பூக்கொடி.

**5. மெய்யீற்றுப் புணர்ச்சி - விளக்குக.**

- நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால், வருமொழியின் முதலாக வரும் உயிரோடு, மெய்யோடு புணர்வது மெய்யீற்றுப் புணர்ச்சி ஆகும்.

  எ.கா: வாயொலி - வாய் + ஒலி "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி "வாயொலி" எனப் புணர்ந்தது.

**6. "மரக்கலம்" பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

**மரக்கலம் - மரம் + கலம்**

- "மவ்வீறு ஒற்று அழிந்து உயிர் ஈறு ஒப்பவும்" என்ற விதிப்படி "மர + கலம்" என்றானது.
- "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்" என்ற விதிப்படி "மரக்கலம்" எனப் புணர்ந்தது.

**7. "மூதூர்" பிரித்து புணர்ச்சி விதி தருக.**

- மூதூர் - முதுமை + ஊர்
- "ஈறுபோதல்" என்ற விதிப்படி - முது + ஊர்
- "ஆதிநீடல்" என்ற விதிப்படி - மூது + ஊர்
- "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்" என்ற விதிப்படி- "மூத் + ஊர்".
- "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி "மூதூர்" எனப் புணர்ந்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**8. "பைந்தமிழ்" பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

**பைந்தமிழ் - பசுமை + தமிழ்**

- ❖ "ஈறுபோதல்" என்ற விதிப்படி - பசு + தமிழ்
- ❖ "அடி அகரம் ஐ ஆதல்" என்ற விதிப்படி - பைசு + தமிழ்
- ❖ "இணையவும் பண்பிற்கு இயல்பே" என்ற விதிப்படி "சு" கெட்டு "பை + தமிழ்" என்றானது.
- ❖ "இனமிகல்" என்ற விதிப்படி "பைந்தமிழ்" எனப் புணர்ந்தது.

**புணர்ச்சி விதி (பயிற்சி பெறுக):**

காட்டுமரம், சேவடி, மாவிலை, தீயணை, ஆற்றுநீர், மூதூர், வானொலி, வயிற்றுப்பசி, பழத்தோல், பைங்காய், நல்லாடை, மெய்ம்மயக்கம்.

---

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

**1. உடனிலை மெய்ம்மயக்கச் சொற்களை எடுத்து எழுதுக.**

**உடல்நிலை மெய்ம்மயக்க சொற்கள்:**

இயக்கத்தின், போற்றப்படும் தென்காசிக்கு, சிற்றூரில், புகைப்படக்கலை, அச்சுக்கலை, மருத்துவம், திண்டுக்கல்லில், பணியாற்றும், சித்த மருத்துவத்தில், பெற்று, மக்களால், செலுத்தினார், மக்கள், கற்று, வித்தியா, என்னும், அமைப்பை, உருவாக்கி, நடத்தினார், மாநாடுகளுக்கும், உரையாற்றினார், இசைத்தமிழ், தமிழுக்குத், எழுபத்தோராண்டுகள்.

---

**2. வேற்றுநிலை மெய்ம்மயக்க சொற்களை எடுத்து எழுதுக.**

**வேற்றுநிலை மெய்ம்மயக்க சொற்கள்:**

தந்தை, தென்காசி, சாம்பவர், பிறந்தவர், கொண்டு, பயின்றார், திண்டுக்கல், பண்டுவர், ஆண்டுகள், என்று, தஞ்சையில், பண்டிதர், தொடங்கினார், ஆழ்ந்து, சங்கம், நடந்த, சென்று, தொண்டின், தொண்டு, செய்தவர்.

---

**3. உடனிலை மெய்ம்மயக்கமாகவும் வேற்றுநிலை மெய்ம் மயக்கமாகவும் உள்ள சொற்களை எழுதி மெய்களை அடிக்கோடிடுக.**

விருப்பம், கல்லில், அழைக்க, எல்லாம், வித்தியா - உடனிலை மெய்ம்மயக்கம்

கொண்டு, நுட்பம், திண்டு, தொடங்கி, நூல்களை, சங்கீத - வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

---

**4. கீழ்க்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக.**

சங்கீதம் - இசை

வித்தியா - கல்வி

மகாஜனம் - பொதுமக்கள்

சாகரம் - கடல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**5. இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

பயின்றார், தொடங்கினர்

**இலக்கணக்குறிப்பு:**

பயின்றார், தொடங்கினார் - படர்க்கை பலர்பால் வினைமுற்றுகள்

**பகுபத உறுப்பிலக்கணம்:**

**அ) பயின்றார் - பயில்(ன்) + ற் + ஆர்**

பயில் - பகுதி

"ல்" - "ன்" எனத் திரிந்தது விகாரம்

ற் - இறந்தகால இடைநிலை

ஆர் - படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதி

**ஆ) தொடங்கினர் - தொடங்கு + இன் + ஆர்**

தொடங்கு - பகுதி

இன் - இறந்தகால இடைநிலை

அர் - படர்க்கை பலர்பால் வினைமுற்று விகுதி

## தமிழாக்கம் தருக

1. **Just living is not enough. One must have sunshine, freedom and a little flower - Hans Anderson**
   - ❖ சாதாரண வாழ்க்கை வாழ்ந்தால் மட்டும் போதாது, சூரியனைப் போல பிரகாசமாகவும் சுதந்திரமாகவும் பூவின் மணம் போலவும் வாழ வேண்டும் - ஹான்ஸ் ஆண்டர்சன்
2. **In nature, light creates the colour. In the picture, colour creates the light - Hans Hofmann** மார்ச் - 2019
   - ❖ இயற்கையில், ஒளி வண்ணத்தை உருவாக்குகிறது. படங்களில் வண்ணம் ஒளியை உருவாக்குகிறது - ஹான்ஸ் ஹோஃப்மேன்
3. **Look deep into nature and then you will understand everything better - Albert Einstein**
   - ❖ இயற்கையை ஆழமாக உற்று நோக்கினால், எல்லாவற்றையும் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும் - ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்
4. **Simplicity is nature's first step, and the last of art - Philip James Bailey**
   - ❖ எளிமை என்பது இயற்கையின் முதல் படி அதுவே கலையின் இறுதி நிலை - பிலிப் ஜேம்ஸ் பெய்லி
5. **Roads were made for journeys not destinations - Confucius**
   - ❖ சாலைகள் பயணங்களுக்கேயன்றி, முடிவுக்காக அல்ல - கன்பூசியஸ்

## மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக

| | | |
|---|---|---|
| 1. உலை, உளை, உழை | 3. கலை, களை, கழை | 5. குரை, குறை |
| 2. வலி, வளி, வழி | 4. கனை, கணை | 6. பொரி, பொறி |

**1. உலை, உளை, உழை** ஆக - 2022 ஜூன் - 2019 மார்ச் - 2023

❖ மன **உளை**ச்சல் தீரவும் வீட்டில் உலை கொதிக்கவும் **உழை**க்க வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**2. வலி, வளி, வழி**

❖ பள்ளிக்குச் செல்லும் **வழி**யில் **வளி** வேகமாக வீசியதால் **வலி**மை மிக்க ஆலமரமே சாய்ந்தது.

**3. கலை, களை, கழை** அ.மா.தே. 23 | செப் - 2020

❖ **களை**யான முகம் கொண்ட அப்பெண் **கழை**யில் ஏறி ஆடியதில் **கலை**தான்.

**4. கனை, கணை** மார்ச் - 2019 | மே - 2022

❖ **கனை**த்துக் கொண்டே ஓடிய குதிரை மீது எவரோ தொடுத்த **கணை** பாய்ந்தது.

**5. குரை, குறை**

❖ நாய் **குரை**க்காமல் போனது பெரிய **குறை**தான்

**6. பொரி, பொறி** அ.மா.தே. 23 | மார்ச் - 2020

❖ சோளம் **பொரி**க்கப் (பொரித்தல்) **பொறி**யைப் (இயந்திரம்) பயன்படுத்துகின்றனர்.

## கீழ்க்காண் விளம்பரத்தைப் பத்தியாக மாற்றி அமைக்க

உடல் வளர்த்தேன்! உயிர் வளர்த்தேன்!!

**இயற்கை உணவுத் திருவிழா**

**நாள்:** தை 5 முதல் 11 வரை **நேரம்:** மாலை 6 - 10 மணி **இடம்:** தீவுத்திடல், சென்னை



| | |
|---|---|
| ஆவாரம்பூச் சாறு | தூதுவளைச் சாறு |
| குதிரைவாலிப் பொங்கல் | சாமைப் பாயசம் |
| வாழைப்பூ வடை | கேழ்வரகு உப்புமா |
| தினைப் பணியாரம் | கம்புப் புட்டு |
| வல்லாரை அப்பளம் | அகத்திப்பூ போண்டா |
| முடக்கத்தான் தோசை | முள்முருங்கை அடை |

இன்னும் பல........

**விடை:**

"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்" என்ற திருமூலரின் திருமந்திரத்தின் படி இயற்கை உணவுத் திருவிழா சென்னை தீவுத்திடலில் தை 5 முதல் 11 வரை, நாள்தோறும் காலை 6 மணி முதல் மாலை 10 மணி வரை, நடைபெற இருக்கிறது. இயற்கை உணவுத் திருவிழாவில் ஆவாரம் பூச்சாறு, குதிரைவாலிப் பொங்கல், வாழைப்பூ வடை, தினைப்பணியாரம், வல்லாரை அப்பளம், முடக்கத்தான் தோசை, தூதுவளைச் சாறு, சாமைப் பாயசம், கேழ்வரகு உப்புமா, கம்புப் புட்டு, அகத்திப்பூ போண்டா, முள்முருங்கை அடை உள்ளிட்ட ஏராளமான உணவு வகைகள் தங்கள் நாவினுக்கு விருந்து படைக்கக் காத்திருக்கின்றன. "இயற்கை உணவே உடல் நலத்திற்கான உணவு", அனைவரும் வருகை தந்து இயற்கை உணவை சுவைத்து விடுவீர்களாக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## நயம் பாராட்டுக

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!

வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!

கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!

பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!

- கவிமணி

**ஆசிரியர் குறிப்பு:**

| | |
|---|---|
| பெயர் | : கவிமணி தேசிக விநாயகம் |
| பெற்றோர் | : சிவதாணுபிள்ளை - ஆதிலட்சுமி |
| ஊர் | : கன்னியாகுமரி - தேரூர் |
| காலம் | : 1876 முதல் 1954 வரை |
| படைப்பு | : மலரும் மாலையும், ஆசிய ஜோதி, மருமக்கள் வழி மான்மியம் |
| பணி | : தமிழ்ப்பேராசிரியர் |

**திரண்ட கருத்து:**

**"வாழைக்கு அழகு குருத்து
கவிதைக்கு அழகு கருத்து"**

என்பதற்கு ஏற்றவாறு அழகிய தெளிவான கருத்துகளைக் கொண்டுள்ளது இப்பாடல். வெண்ணிலாவானது கோடி விண்மீன்கள் படைசூழ்ந்து வர வானக் கடலில் ஒரு வெந்நீர் ஓடம் மிதந்து வருவதைப் போல பவனி வருகிறது. வெண்ணிலவு மாதத்தில் பதினைந்து நாட்கள் நன்கு வளர்ந்து நிறைவான ஒளியைப் பரப்பி முழுமையாக இருக்கிறது. பின்பு அடுத்தடுத்த 15 நாட்கள் மெல்ல மெல்லத் தேய்ந்து ஒளியை இழந்து அமாவாசையாக இருக்கிறது. பகலில் கண் தெரியாததால் கூகையும் ஆந்தையும் கூட்டில் உறங்குவதைப் போல வெண்ணிலாவும் பகலில் உறங்கி விட்டு இரவில் பிரகாசம் அளிக்கிறது. தான் பௌர்ணமி அன்று பந்து போல தோற்றமளிப்பதால் பூமியில் இருப்பவர் முழுமதியைப் பார்த்து, பந்து என நினைத்து மக்கள் பந்தடித்து விளையாடுவார்கள் என அஞ்சியே பகலில் வரவில்லை என்கிறார் கவிஞர்.

**மையக் கருத்து:**

நிலவு முழுமை அடைவதும் தேய்வதும் பகலில் கண்ணில் படாததும் மண்ணிற்கு வராததும் ஆகிய செயல்களுக்கு தனக்குத் தோன்றிய காரணங்களைக் கூறி ஆறுதல் வருவது போல பாடியுள்ளமை குழந்தைகளை மகிழச் செய்வதற்கு ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**தொடை நயம்:**

**"தொடையற்ற பாட்டு நடையற்றுப்போகும்"**

என்பதற்கேற்ப இப்பாடலில் எதுகை, மோனை, இயைபு, முரண் போன்ற தொடை நயங்கள் அமைந்துள்ளன.

**மோனைத் தொடைநயம்:**

**"இசைக்கு அழகு வீணை பாடலுக்கு அழகு மோனை"**

பாடலில் அடி அல்லது சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனைத்தொடை நயமாகும்.

**சான்று:**

வளர்ந்து - வாடி
கூகை - கூட்டணியில்
பந்தடிப்போம் - பாரில்

**எதுகைத் தொடை நயம்:**

**"மதுரைக்கு அழகு வைகை
பாடலுக்கு அழகு எதுகை"**

செய்யுளில் சீர்தோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாவது எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை நயமாகும்.

**சான்று:**

வளர்ந்து - வளர்ந்து
கோடி - கோடி
வாடி - வாடி

**இயைபுத்தொடை நயம்:**

செய்யுளில் அடிகளில் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றுபோல் இயைந்து வருவது இயைபுத்தொடை நயமாகும்.

**சான்று:** வெண்ணிலவே
வெண்ணிலவே

**அணிநயம்:**

**"பெண்களுக்கு அழகு அணிகலன்
செய்யுளுக்கு அழகு அணிநயம்"** இச்செய்யுளில் உவமை அணி நயம் இடம்பெற்றுள்ளது.

வெண்ணிலவானது வானத்தில் ஒரு வெள்ளியோடம் போல பவனி வருகிறது என்று உவமை நயம் தோன்றப் பாடியுள்ளதால் இச்செய்யுளில் உவமை அணி பயின்று வந்துள்ளது.

**சந்த நயம்:**

**"யானைக்கு அழகு தந்தம்
செய்யுளுக்கு அழகு சந்தம்"**

இச்செய்யுளில் எதுகை, மோனை, இயைபு நயங்கள் நயம்பட அமைந்துள்ளதால் சந்த நயம் சிறப்பாக அமைந்துள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



வல்லோசை, மெல்லோசை பெற்று இசையுடன் பாடிக் களிப்பதற்கேற்ற வகையில் சந்த நயம் இடம்பெற்றுள்ளது.

**சுவை நயம்:**

"விருந்துக்கு அறுசுவை செய்யுளுக்கு எண்சுவை" என்பது போல இப்பாடலில் பெருமிதச்சுவை பயின்று வந்துள்ளது.

**சொல், பொருள் நயம்:**

சொல்லும் சொல்லுக்குரிய பொருளும் நயம்பட அமைந்துள்ளதால் இச்செய்யுளில் சொல், பொருள் நயம் அமைந்துள்ளது.

- ❖ வெள்ளியோடும்- வெண்மை நிற ஓட்டமாக நிலவினைச் சுட்டுகிறது.
- ❖ ஆந்தை போல நீயும் வெண்ணிலாவே என்று நயம்பட வெண்ணிலாவைக் கூறுகிறது.

**பாடலுக்கேற்ற தலைப்பு:**

"உடலுக்குத் தேவை உழைப்பு செய்யுளுக்குத் தேவை தலைப்பு" இச்செய்யுளுக்குரிய தலைப்பு வெண்ணிலா.

---

விழுந்த மலர்
கிளைக்குத் திரும்புகிறது
அடடா... வண்ணத்துப்பூச்சி

- மோரிடாகே

- ❖ ஓர் அழகு போனாலும் மற்றொரு அழகு அதன் இடத்தை நிரப்பும் என்பது இதன் உட்கருத்து.

---

## மொழியோடு விளையாடு

### 1. எண்ணங்களை எழுத்தாக்குக

**விடை:**



மரம் இயற்கை வரம் - மரத்தை
மனம் இல்லாமல் வெட்டினாய்
வெட்டி வீழ்த்திவிட்டு நிழல் தேடி
வெட்டியாய் அலைந்து
அமர இடம் தேடுகிறாய்
மரம் மக்களுக்கு மருந்து
மரம் மனிதர்களுக்கு குளிர்ச்சி
மரங்களை நடுவோம்.
மரமே வாழ்வின் ஆதாரம்
மரமே கடவுளின் அவதாரம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## புதிர்களில் மறைந்துள்ள சொற்களைக் கண்டுபிடிக்க

1. ஐந்தெழுத்துக்காரன்
முதலிரண்டோ
பாட்டெழுதுபவரின் பட்டம்
இரண்டும் மூன்றுமோ
பசும்பால் என்பதன் பின் இறுதி
கடைசி இரண்டெழுத்தோ
மானினத்தில் ஒரு வகையாம்
இரண்டும் ஐந்துமோ
பொருளை விற்கத் தேவையாம்
அது என்ன?

2. இறுதி இரண்டெழுத்தோ
பழத்தின் முந்தைய பச்சை நிலை
தமிழ்க்கடவுளின் முற்பாதியை
முதலிரு எழுத்தில் வைத்திருக்கும்
நடுவிலோ ஓரெழுத்து ஒருமொழி
அதற்கும் முன் பொட்டு வைத்த ஙகரம்
சேர்த்தால் காயாவான்
பிரித்தால் நிலைமொழியில் மரமாவான்
ஏழெழுத்துக்காரன் அவன் யார்?

1. **கவின்கலை**
2. **முருங்கைக்காய்**

இவை போன்ற சிறு சிறு புதிர்க் கவிதைகளை எழுதிப் பழகுக.

## சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, இயற்கைப் பாதுகாப்பு குறித்த முழக்கத்தொடர்கள் எழுதிக் காட்சிப்படுத்துக.

**(எ.கா) 1. விதைப்பந்து எறிந்திடுவீர்! பூமிப்பந்து காத்திடுவீர்!**

**2. சிட்டுக்குருவிக்குக் கொஞ்சம் அரிசியிடு! உலக உயிர்களுக்கு உன் கருணையிடு!**

**விடை:** 3. மரம் ஒன்று நட்டு மழை பெற முயல்

4. மண்வளம் காக்க மாசுகளை அகற்று

5. நீரோடை அமைத்துத் தண்ணீரைத் தேக்கு

6. குப்பையை எறியாதீர் குப்பைத் தொட்டியில் சேமிப்பீர்

7. மாற்றுத்திறனாளிக்கு உதவுவீர் மாற்றுத் திறனாளிகளை மதிப்பீர்

## நிற்க அதற்குத் தக

முன்மாதிரியானவர்கள் என்று யாரைக் கருதுவீர்கள்? அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக்கொள்ள விரும்பும் நற்பண்புகளைக் குறிப்பிடுக.

| முன்மாதிரியானவர் | நான் விரும்பிய நற்பண்பு |
|---|---|
| தந்தை | நேரந்தவறாமை |
| தொடக்கப்பள்ளி ஆசிரியர் | எதற்கும் அஞ்சாமை |
| உறவினர் | எதையும் பெரிய துன்பமாக எண்ணாமை |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



## கலைச்சொல் அறிவோம்

| | |
|---|---|
| இயற்கை வேளாண்மை | - Organic Farming |
| வேதி உரங்கள் | - Chemical Fertilizers |
| ஒட்டு விதை | - Shell Seeds |
| தொழு உரம் | - Farmyard Manure |
| மதிப்புக்கூட்டுப் பொருள் | - Value Added Product |
| வேர்முடிச்சுகள் | - Root Nodes |
| தூக்கணாங்குருவி | - Weaver Bird |
| அறுவடை | - Harvesting |

www.Padasalai.Net




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
FOR ORDERS CONTACT : 8925612359
www.CBSEtips.in



# இயல் 3

# பீடு பெற நில்



**கற்றல் நோக்கங்கள்:**

- ❖ இலக்கியங்கள்வழி தமிழர் பண்பாட்டுக்கூறுகளை அறிந்து தமதாக்கிக் கொண்டு வாழ்தல்
- ❖ பண்புகளோடு இணைந்த வாழ்க்கையே மனிதம் என்பதை உணர்ந்து பின்பற்றுதல்
- ❖ வீட்டிலும் சமூகத்திலும் பின்பற்றப்படும் பண்பாட்டு நிகழ்வுகளைப் பொறுப்புடன் கடைப்பிடித்தல்
- ❖ சொற்களைப் பொருள்புரிந்து காலத்திற்கேற்பப் பயன்படுத்தும் திறன் பெறுதல்

## பாடப்பகுதிகள்

- ❖ மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு - **ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப.**
- ❖ காவடிச்சிந்து - **சென்னிகுளம் அண்ணாமலையார்**
- ❖ குறுந்தொகை - **வெள்ளிவீதியார்**
- ❖ புறநானூறு - **கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி**
- ❖ வாடிவாசல் - **சி.சு. செல்லப்பா**
- ❖ பகுபத உறுப்புகள்
- ❖ திருக்குறள் - **திருவள்ளுவர்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



உரைநடை உலகம்

இயல் 3

# மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு

– ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப.

## நுழையும் முன்

❖ மலை, மனித சமூகத்தின் ஆதி நிலமாகும். தமிழ் அகத்திணையிய், மலையும் மலை சார்ந்த பகுதியையும் குறிஞ்சி என்று குறிக்கும். குறிஞ்சி நிலம் சார்ந்த சங்கப் பாடல்கள் மலையோடு இயைந்த தமிழர்தம் சீரிய வாழ்வினைப் பேசின. மலை, குன்றுகளின் பெயர்கள் குறித்த ஆய்வை OROLOGY என்ற கலைச்சொல்லால் அழைப்பர். தமிழர் வாழ்வில் மலைகள் பெறும் சிறப்புக் குறிப்பிடத்தக்கது.

## சிறப்புகள்

**சிறப்பு 1:**

| | |
|---|---|
| மால் பஹாடியா | ஜார்கண்ட் |
| மல அரயன் | மேற்குத்தொடர்ச்சி மலைகள் - கேரளம் |
| மல குறவன் | நெடுமங்காடு - கேரளம் |
| மல மூத்தன் | எர்நாட் - கேரளம் |
| மல பணிக்கர் | வட கேரளம் |
| மலயன் | பாலக்காடு - கேரளம் |
| மல வேடா | இடுக்கி - கேரளம் |
| மலேரு | தட்சிண கன்னடா - கர்நாடகம் |

**சிறப்பு 2:**

| | |
|---|---|
| கோட்டா | நீலகிரி, தமிழ்நாடு |
| கொண்டா தோரா | ஆந்திரப்பிரதேசம் |
| கோண்டு, கொய்ட்டெர் | ஒடிஸா |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**சிறப்பு 3:**

| திராவிடச் சொற்கள் | மாநிலம் | மாவட்டம் |
|---|---|---|
| மலை | உத்தரகாண்ட் | சமோலி |
| | ஜார்கண்ட் | கும்லா |
| | உத்திரப் பிரதேசம் | ஜவுன்பூர் |
| வரை | குஜராத் | வல்ஸட் |
| | மஹாராஷ்ட்ரா | தாணே |
| | ஹிமாசலப்பிரதேசம் | காங்க்ரா |
| மலா | பஞ்சாப் | ஜலந்தர் |
| | ராஜஸ்தான் | அஜ்மீர் |
| | கர்நாடகம் | உடுப்பி |

**சிறப்பு 2:**

| தமிழ் | கோட்டை, கோடு |
|---|---|
| மலையாளம் | கோட்ட, கோடு |
| கன்னடம் | கோட்டே, கோண்டே |
| தெலுங்கு | கோட்ட |
| துளு | கோட்டே |
| தோடா | க்வாட் |

## நூல்வெளி

❖ இந்தியவியல் மற்றும் திராவிடவியல் ஆய்வாளரான ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப, 28 ஆண்டுகளாக, இடப்பெயராய்வில் ஈடுபட்டு வருகிறார். வடமேற்கு இந்தியாவில் இன்றுவரை வழக்கிலுள்ள 'கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகத்தை' ஆய்வுலகின் கவனத்திற்குக் கொண்டுவந்தவர். தினமணி நாளிதழில் துணையாசிரியராகவும் கணையாழி இலக்கிய இதழின் ஆலோசகர் குழுவிலும் தீவிரப் பங்காற்றியிருக்கிறார். அன்புள்ள அம்மா, சிறகுக்குள் வானம் உள்ளிட்டவை இவர்தம் நூல்கள். 1984ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப்பணித் தேர்வை, முதன்முதலாக, முழுவதுமாகத் தமிழிலேயே எழுதி, முதல் முயற்சியிலேயே தேர்ச்சி பெற்றவர். தற்போது ஒடிசா மாநிலத்தில் கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் அம்மாநிலத்தின் வளர்ச்சி ஆணையராகப் பொறுப்பில் இருக்கிறார். பாடப்பகுதி 'சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்' என்னும் இவரது நூலிலிருந்து எடுக்கப்பட்டது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. கூற்று : "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.**

**விளக்கம் : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.**

அ) கூற்று சரி, விளக்கம் தவறு
ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி
இ) கூற்று தவறு, விளக்கம் சரி
ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

**விடை: ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி**

### குறுவினா

**1. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எழுத்தாளப் பட்டுள்ளது?** மே - 2022

**திராவிட மொழிகள் - கோட்டை**

1. தமிழ் - கோட்டை, கோடு
2. மலையாளம் - கோட்ட, கோடு
3. கன்னடம் - கோட்டே, கோண்டே
4. தெலுங்கு - கோட்ட
5. துளு - கோட்டே
6. தோடா - க்வாட்

### சிறுவினா

**1. "மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது" என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.** மே - 2022

- திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள்.
- "சேயோன் மேய மைவரை உலகம்" என்கிறது தொல்காப்பியம்.
- கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைப்பகுதிகளின் தலைவர்களாகவே வாழ்ந்தனர்.
- திராவிடர்களை மலைநில மனிதர்கள் என்று அழைக்கிறார் கமில் சுவலபில்.
- "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" என்ற திருமுருகாற்றுப்படை பாடல் கடவுளையும் மலையையும் தொடர்புப்படுத்துகிறது.
- பாண்டிய மன்னன் ஒருவனை "மலையத்து வஜ" என்று அழைப்பர்.
- பழங்குடியினர், ஓடும் நீரையே தங்கள் குடிநீராகப் பயன்படுத்தும் இயல்புடையவர்கள். எனவே, அவர்கள் தங்கள் குடியிருப்புப் பகுதியை விட உயரமான இடத்தில் ஓடும் சிற்றாறுகள், ஓடைகளிலிருந்து நீர் எடுத்துப் பருகுகிறார்கள்.
- உயரமான மேடை, திண்ணை, சுற்றுச்சுவர்கள், மேலோடை நீர் ஆகியவை திராவிடப் பழங்குடியினரின் வாழ்விட வடிவமைப்பிலும் வாழ்வியலிலும் உயரமான இடங்கள் செலுத்தும் தாக்கத்தைக் காட்டுகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடங்களை நிரப்புக

1. "OROLOGY" என்பது __________ பற்றிய ஆய்வு. **விடை: மலை, குன்றுகள்**
2. மலையைக் குறிக்கும் மற்றொரு சொல்லான"மலே" __________ இடப்பெயர்களில் இடம்பெறுகிறது. **விடை: 15**
3. கேரளா மாநிலத்தில் __________ "மலை" விகுதி இட பெயர்கள் உள்ளன. **விடை: 10**
4. KVT COMPLEX என்பதன் பொருள் __________ **விடை: கொற்கை வஞ்சி தொண்டி வளாகம்**
5. ஆர். பாலகிருஷ்ணன் துணையாசிரியராகப் பணியாற்றிய நாளிதழ் __________ **விடை: தினமணி**
6. அன்புள்ள அம்மா, சிறகுக்குள் வானம் என்னும் நூல்களின் ஆசிரியர் ________ **விடை: ஆர்.பாலகிருஷ்ணன்**
7. மனித சமூகத்தின் ஆதி நிலம் __________ **விடை: மலை**
8. "சேயோன் மேய மைவரை உலகம்" என்று குறிப்பிடும் நூல் __________ **விடை: தொல்காப்பியம்**
9. கடையெழு வள்ளல்களைப் பற்றிக் குறிப்பிடுபவை __________ **விடை: பழந்தமிழ் இலக்கியங்கள்**
10. "ஜதாப்பு" எனப்படும் திராவிடப் பழங்குடியினரின் குடியிருப்புகள் அமைந்துள்ள இடங்கள் __________ **விடை: ஆந்திரா, ஒரிசா**
11. "கோட்டை" என்னும் பொருளைத் தரும் "க்வாட்" என்பது.............. மொழிச் சொல். **விடை: தோடா**
12. இந்தியாவில் __________ என்று முடியும் 248 இடப்பெயர்கள் தமிழ்நாட்டில் உள்ளன. **விடை: கோட்டை**
13. ஆர்.பாலகிருஷ்ணன் ஆலோசகராகப் பணியாற்றிய இலக்கிய இதழ் __________ **விடை: கணையாழி**
14. "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ" எனக் குறிப்பிடும் நூல் __________ **விடை: திருமுருகாற்றுப்படை**
15. திராவிடர்களை "மலைநில மனிதர்கள்" என அழைத்தவர் __________ **விடை: கமில் சுவலபில்**
16. பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர் __________ **விடை: தோடர்**
17. தாழ்வாரத்தை "மெட்டு" என்று குறிப்பிட்டவர் __________ **விடை: குறும்பர்**
18. "மலை" என்னும் திராவிடச் சொல், வடமொழியில் __________ என வழங்கப்படுகிறது. **விடை: மலய**
19. "தோனிமலை" என்னும் பெயர் உள்ள இடம் __________ **விடை: கர்நாடகம்**
20. காவல்மிகு காப்பரண் கொண்ட மதில் சூழ்ந்த கட்டமைப்பு __________ என வழங்கப்பட்டது. **விடை: கோட்டை**
21. "கோட்டா" என்ற இனக்குழுவினர் உள்ள இடம் __________ **விடை: நீலகிரி**

### குறு வினாக்கள்

1. **தமிழரின் கடவுளையும், மலையையும் தொடர்புபடுத்தும் பண்டைய பதிவுகளாக விளங்குபவை யாவை?**
   - திராவிடர்களை, "மலைநில மனிதர்கள்" என்று அழைக்கிறார் கமில் சுவலபில்
   - "சேயோன் மேய மைவரை உலகம்" என்று உரைக்கிறது தொல்காப்பியம்
   - "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" என்கிறது திருமுருகாற்றுப்படை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**2. "கோடு" என்னும் தமிழ்ச் சொல்லின் பொருள் யாது?**

- **"கோடு" என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பொருள்:** மலை உச்சி, சிகரம், மலை, வல்லரன், கோட்டை ஆகியன ஆகும்.

**3. திராவிடப் பழங்குடிகளின் இனக்குழுப்பெயர்கள் எவற்றை வெளிப்படுத்துகின்றன?**

- இனக்குடிப்பெயர்கள், பழங்குடியினரின் மலை சார்ந்த மானுடப் புவிச்சூழலை வெளிப்படுத்துகின்றன.

**4. "வரை" என்னும் சொல்லழகு குறித்து அறியப்படுவது யாது?**

- "நுனி முதல் அடி வரை", "அடி முதல் நுனிவரை" என்னும் தொடர்களில் "வரை" என்ற சொல், "விளிம்" என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**5. பழந்தமிழ்ச் சமூகத்திற்கு ஆணிவேர் அடையாளங்களாகத் திகழும் ஊர்கள் எவை?**

- கொற்கை, தொண்டி, வஞ்சி என்னும் ஊர்கள், சங்க இலக்கியம் காட்டும் பழந்தமிழ்ச் சமூகத்திற்கு ஆணிவேர் அடையாளங்கள் ஆகும்.

**6. "மலய" சொல் வழக்கால் பெறப்படும் செய்தி யாது?**

- "மலை" என்னும் திராவிடச் சொல், வடமொழியில் "மலய" என வழங்கப்படுகிறது.
- "மலய" என்னும் சொல், திராவிடத் தொடர்புக்கு அரண் சேர்க்கிறது.
- பாண்டிய மன்னன் ஒருவன் "மலயத்துவஜன்" என அழைக்கப்பட்டான்.
- "மலய" என்னும் சொல், மலபாருக்கு மேற்கே உள்ள மலைகளையே குறிக்கிறது.

**7. நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவரைப் பற்றி எழுதுக.**

- நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள். எனவே, அவற்றைச் சுற்றி உயர்ந்த மதில் சுவர்களை அமைத்திருக்கின்றனர்.
- அவர்களின் வீடுகளில் திண்டுகள் முக்கிய இடம் பெறுகின்றன.

**8. திராவிடப் பழங்குடியினர் குடிநீருக்காக என்ன செய்தார்கள்?**

- பழங்குடியினர் ஓடும் நீரையே தங்கள் குடிநீராகப் பயன்படுத்தும் இயல்புடையவர்கள்.
- அவர்கள், தங்கள் குடியிருப்புப் பகுதிகளைவிட உயரமான இடத்தில் ஓடும் சிற்றாறுகள், ஓடைகளிலிருந்து நீர் எடுத்துப் பருகுகிறார்கள்.

## சிறு வினாக்கள்

**1. தென்னிந்தியாவில் "மலை" என்ற இடப்பெயரின் சிறப்பிடம் குறித்து எழுதுக.**

**தமிழ்நாடு:**

தமிழ்நாட்டில் மட்டும் "மலை" என்ற சொல் 17 இடப்பெயர்களில் முன்னொட்டாகவும் 84 இடப் பெயர்களில் பின்னொட்டாகவும் இடம்பெறுகிறது.

**ஆந்திரா:**

மலை என வழங்கப்படுவதற்கு மாறாக ஆகார ஈறு பெற்று "மலா" என்று வழங்கப்படுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**கர்நாடகா:**

மலை என்பது "தோணிமலை" என்னும் இடப்பெயரில் ஒரே ஒருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. "மலே" என்பது 15 இடப்பெயர்களில் இடம் பெறுகிறது.

**கேரளா:**

பத்து "மலை" விகுதி இடப் பெயர்கள் உள்ளன.

**தென்னிந்தியா:**

தென்னிந்தியாவில் எந்த ஒரு மாநிலத்திலும் முன்னொட்டாகவோ பின்னொட்டாகவோ வருகின்றனவே அன்றி, மலை என்ற தனிச்சொல்லாக வழங்கப்படவில்லை.

---

**2. கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகம் - குறிப்பு வரைக.**

- KVT COMPLEX என்பது, "கொற்கை, வஞ்சி, தொண்டி" வளாகம் ஆகும்.
- கொற்கை, வஞ்சி, தொண்டி என்னும் ஊர்ப் பெயர்களில் பழந்தமிழர்களின் அரசியல், பொருளியல் மற்றும் பண்பாட்டு உருவாக்கத்தின் விளைவாக உருவானவை.
- சங்க இலக்கியம் காட்டும் பழந்தமிழ்ச் சமூகத்திற்குக் கொற்கை, வஞ்சி, தொண்டி ஆகிய பெயர்கள் ஆணிவேர் அடையாளங்கள் ஆகும்.
- இப்பெயர்களில் ஒன்றைக் கூட வடமொழி இலக்கியங்கள் பதிவு செய்யவில்லை.
- சங்ககாலத் தமிழ் மன்னர்களின், குறு நிலத்தலைவர்களின் தலைநகரங்கள், துறைமுகங்கள், போர்க்களங்கள் ஆகியவற்றின் பெயர்களோடு வடமேற்குப் பகுதிகளில் உள்ள ஊர்ப்பெயர்கள் பொருந்திப் போகின்றன.

---

## கவிதைப்பேழை

இயல் 3

## காவடிச்சிந்து

### நுழையும் முன்

- காவடி தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று. உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது. காவடி தூக்கிச் செல்வோர், அதைச் சுமையாக எண்ணாமல் பாடியவாறே செல்வதற்கு வழிநடைப் பாடல்களை இயற்றியுள்ளனர்.

### நூல் வெளி

- 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சென்னிகுளம் அண்ணாமலையார் பாடிய காவடிச்சிந்து அருணகிரியாரின் திருப்புகழ்த் தாக்கத்தால் விளைந்த சிறந்த இலக்கியமாகும். இப்பாடலின் மெட்டு அண்ணாலையாராலேயே அமைக்கப்பட்டதாகும். தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியதால்,



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



காவடிச் சிந்தின் தந்தை என அழைக்கப்பட்டார். 18 வயதிலேயே ஊற்றுமலைக்குச் சென்று அங்குக் குறுநிலத்தலைவராக இருந்த இருதயாலய மருதப்பத் தேவரின் அரசவைப் புலவராகவும் இருந்தார். இவர், இந்நூல் தவிர வீரைத் தலபுராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம், சங்கரன்கோவில் திரிபந்தாதி, கருவை மும்மணிக்கோவை, கோமதி அந்தாதி ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?** மார்ச் - 2023 | ஜூன் - 2019

அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்

இ) முருகன் ஈ) பாரதியார்

**விடை: ஆ) அண்ணாமலையார்**

### குறு வினா

**1. காவடிச்சிந்து என்பது யாது?** அ.மா.தே. 23 | செப் - 2020

தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசை மரபே காவடிச்சிந்து எனப்படும்.

### சிறு வினா

**1. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.**

- காவடி தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று.
- காவடிச்சிந்து இசைப்பாவகைகளில் ஒன்று. சிந்து என்பது இசைத்தமிழ் பாகுபாடுகளில் ஒன்று.
- தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் தமிழ்நாட்டார் வழக்கில் உள்ள இசை மரபே காவடிச்சிந்து.
- குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகனின் கோவிலை நோக்கி வழிபடச் செல்வர். அப்போது முருகப்பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருள்களைக் காவடிகளில் கொண்டு செல்வர். அவ்வாறு செல்லும் போது களைப்புப் போக முருகப்பெருமானின் புகழைப் பாடுவது சிந்து வகைப் பாடலாகும்.

### நெடு வினா

**1. காவடிச்சிந்து ஒரு வழிநடைப் பாடல் -இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.**

**முன்னுரை:** மார்ச் - 2019

தமிழர் வழிபாட்டில் இசையும் நடனமும் குறிப்பிடத்தக்கனவாகத் திகழ்கின்றன. தெய்வத்தை வணங்குவதற்குப் பூமாலையும் பாமாலையும் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்த வகையில் காவடிச்சிந்து ஒரு வழிநடைப் பாடலாக முருகப்பெருமானின் வழிபாட்டில் இடம்பெறுவதைப் பின்வருமாறு காணலாம்.

**காவடிச்சிந்து - தோற்றம்:**

- காவடி, தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகளும் ஒன்று.
- தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில் காவடி எடுத்து ஆடுவது வழக்கம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



- ❖ காவடி எடுத்துச் செல்வோர், அதைச் சுமையாக எண்ணாமல் பாடியவறே செல்வதற்கு வழிநடைப் பாடல்கள் இயற்றப்பட்டன.

**காவடி எடுத்தல்:**

காவடி எடுத்துச் செல்வதைச் சுமையாகக் கருதாமல், வாழ்வின் சுகமாக எண்ணி, வழிநடைக் களைப்புத் தெரியா வகையில் மணிகளை ஒலித்துக்கொண்டும் பாடிக்கொண்டும் ஆடிக் கொண்டும் பாதசாரிகள் செல்வர். இது, தமிழ்நாட்டில் பண்டைக்காலம்முதல் "நாட்டார் வழக்கியல்" என்னும் இசைமரபோடு கூடியதாக அமைந்துள்ளது.

**முருகனின் பெருமை:**

"காவடிச்சிந்தின் தந்தை" எனப் போற்றப்பெறுபவர் சென்னிகுளம் அண்ணாமலையார். இவர் பாடிய காவடிச்சிந்து, அருணகிரியாரின் திருப்புகழ்த் தாக்கத்தால் விளைந்த சிறந்த சந்த இலக்கியம் ஆகும்.

அண்ணாமலையார் சிந்தில், கழுகுமலை முருகன் சிறப்புகள், அருள் புரியும் திறம், பக்தர்கள் வழிபடும் முறை எனப் பலவும் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளன.

கழுகுமலை முருகனை வழிபடக் காவடி எடுத்துவரும் அடியவர்கள் பாடும் பாடல் முழக்கம், வானுலகத்தில் உள்ள தேவர்களின் செவியைச் சென்றடையும் என்கிறார்.

வழிநடைக் களைப்பின்றி, முருகன் அருள்பெற நல்வழி காட்டுவதாக, அண்ணாமலையார் காவடிச்சிந்து அமைந்துள்ளது. காவடிச்சிந்தைப் பாடிக்கொண்டு ஆடல் பாடல்களோடு செல்வதால், வழிநடைக் களைப்புத் தெரிவதில்லை. பயணக் களைப்பைப் போக்குவதோடு வழி இடையே தமக்கு ஏற்படும் தொல்லைகளிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ளக் காவடிச்சிந்து உதவுகிறது.

**முடிவுரை:**

நெஞ்சம் நெகிழ்ந்துருக, தங்கத்திலும் மேலான காவடியைத் தோளில் தூக்கிக் கனலில் உருகிய மெழுகென முருகனை நோக்கி வரும் பக்தர்கள் அருளைப் பெறுவர். இன்பம் அடைவார்.

"கனல் ஏறிய மெழுகாய் வருபவர்ஏவரும் இகமேகதி காண்பார், இன்பம் பூண்பார்" என்ற அண்ணாமலையாரின் பாடல் அடிகளிலிருந்து, கனலில் உருகிய மெழுகென முருகனை நோக்கி வரும் பக்தர்கள், நெஞ்சம் நெகிழ்ந்துருகிப் பாடும் வழிநடைப் பாடலாகக் காவடிச்சிந்து அமைந்துள்ளமை தெளிவாகிறது.

## இலக்கணக்குறிப்பு

| | |
|---|---|
| தாவி | - வினையெச்சம் |
| மாதே | - விளி |

## உறுப்பிலக்கணம்

**வருகின்ற - வா (வரு) + கின்று + அ**

- ❖ வா - பகுதி, 'வரு' எனத் திரிந்தது விகாரம்
- ❖ கின்று - நிகழ்கால இடைநிலை
- ❖ அ - பெயரெச்ச விகுதி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## புணர்ச்சி விதி

**1) திருப்புகழ் - திரு + புகழ்** மார்ச் - 2023

❖ "இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்" என்ற விதிப்படி திருப்புகழ் எனப் புணர்ந்தது.

**2) உயர்ந்தோங்கும் - உயர்ந்து + ஓங்கும்**

❖ "உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்" என்ற விதிப்படி "உயர்ந்த் + ஓங்கும்"

❖ "உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி உயர்ந்தோங்கும் எனப் புணர்ந்தது.

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடத்தை நிரப்புக

1. "ஊற்றுமலை" இருதயாலய மருதப்பத் தேவரின் அவைப் புலவராக இருந்தவர் _________
**விடை: அண்ணாமலையார்**
2. காவடி எடுக்கும் அடியார் பாடிய திருப்புகழ் முழக்கம் _________ தேவர்களின் செவியை அடைகிறது.
**விடை: அமராவதிப் பட்டினம்**
3. அண்ணாமலையார் பாடிய காவடிச்சிந்து _________ தாக்கத்தால் விளைந்த இலக்கியமாகும்.
**விடை: அருணகிரியாரின் திருப்புகழ்**
4. தமிழில் முதன் முதலில் வண்ணச்சிந்து பாடியவர் _________ **விடை: அண்ணாமலையார்**
5. காவடிச்சிந்து என்ற பாவடிவம் _________ வகைகளிலிருந்து தோன்றியது. **விடை: வழிநடைப்பாடல்**
6. குறவள்ளி பதம்பணி நேசன்- யார்? **விடை: முருகன்**
7. கழுகாசலபதியில் கோயில் கொண்டுள்ளவர் _________ **விடை: முருகன்**
8. "நூபுரத் துத்தொனி வெடிக்கும்"-இவ்வடியில் "நூபுரம்" என்ற சொல்லின் பொருள் _________
**விடை: சிலம்பு**
9. "உன்னதமாகிய இஞ்சி" - இதில் "இஞ்சி" என்பதன் பொருள் _________ **விடை: மதில்**
10. "செகமெச்சிய மதுரகவி" யார்? **விடை: அண்ணாமலையார்**
11. அண்ணாமலையாரின் ஊர்... **விடை: சென்னிக்குளம்**
12. 'வருகின்ற' என்ற சொல்லின் பகுதி _________ **விடை: வா**
13. திருப்புகழை அருளியவர் _________ **விடை: அருணகிரியார்**
14. 'சலராசி' என்பதன் பொருள் **விடை: கடலில் வாழும் மீன் முதலிய உயிர்கள்**
15. 'த்வஜஸ்தம்பம்' என்பதன் பொருள் _________ **விடை: கொடி மரம்**
16. மதுரமான கவிமாலையைத் தோளில் சார்த்திக் கொள்பவர் **விடை: முருகன்**
17. கழுகுமலைத் தலைவன் என்று போற்றப்படுபவர் _________ **விடை: முருகன்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## குறுவினாக்கள்

**1. திருப்புகழ் முழக்கம் எங்குச் சென்றடைவதாகக் காவடிச்சிந்து கூறுகிறது?**

❖ முருகனுக்குக் காவடி எடுக்கும் அடியார்கள் பாடும் திருப்புகழ் முழக்கமானது, அமராவதிப் பட்டினத்திலுள்ள தேவர்களின் செவிகளைச் சென்றடைவதாகக் காவடிச்சிந்து கூறுகிறது.

**2. சென்னிகுளம் அண்ணாமலையார் - குறிப்பு வரைக.**

❖ காவடிச்சிந்து என்னும் நூலை எழுதியவர் சென்னிகுளம் அண்ணாமலையார்.

❖ அருணகிரியாரின் திருப்புகழ்த் தாக்கத்தால் விளைந்த சிறந்த சந்த இலக்கியம் "காவடிச்சிந்து" ஆகும்.

❖ தமிழில் முதன்முதலில் வண்ணச்சிந்து பாடியதால், "காவடிச்சிந்தின் தந்தை" என அழைக்கப்பட்டார்.

❖ ஊற்றுமலை குறுநிலத் தலைவராக இருந்த இருதயாலய மருதப்பத் தேவரின் அரசவைப் புலவராகவும் இருந்தார்.

**3. அண்ணாமலையார் இயற்றிய நூல்கள் யாவை?**

❖ வீரைத் தலபுராணம்

❖ சங்கரன்கோவில் திரிபந்தாதி

❖ கோமதி அந்தாதி

❖ கருவை மும்மணிக்கோவை

❖ வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம்.

**4. கழுகுமலைக் கோவில் விமானம் குறித்துக் காவடிச் சிந்து கூறுவது யாது?**

❖ அது தங்கத்தால் ஆனது.

❖ அது விண்ணுலகில் உள்ள தேவர்களின் கோவில் கோபுர விமானச் சிகரத்தைக் கடந்து உயர்ந்திருக்கும்.

❖ அதன் ஒளி, மாசு படியாமல் கண்கள் கூசும்படியான அழகோடு பல உலகங்களிலும் விளங்கும்.

**5. எவற்றை நடிக்கும், தாக்கும் எனக் காவடிச்சிந்து குறிப்பிடுகிறது?**

❖ கழுகுமலைக் கோவிலில், தங்கள் காற்சிலம்பு ஒலிக்கும்படி, சிற்றிடை கொண்ட பெண்கள் நடனம் ஆடுவதை "நடிக்கும்" எனவும், பாம்புகள் இது இடி முழக்கமோ என அஞ்சித் தலை தூக்கிப் பார்க்கும்படி கோவில் பலகணியில் வைக்கப்பட்டிருக்கும் முழவினை அடிப்பதால் எழும் பேரொலி, நான்கு திசைகளிலும் சென்று மோதி ஒலிப்பதைத் "தாக்கும்" எனவும் காவடிச்சிந்து குறிப்பிடுகிறது.

**6. காவடிச்சிந்து என்ற வடிவம் எவ்வாறு தோன்றியது?**

❖ குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகனின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு செல்வது வழக்கம்.

❖ அவ்வாறு கொண்டு செல்லும்போது காவடி எடுத்துச் செல்வோர் ஆடல் பாடல்களுடன் செல்லும் வழிநடைப்பாடல் வகைகளிலிருந்து காவடிச்சிந்து என்று பாவடிவம் தோன்றியது.

**7. முருகன் கோவில் எவ்வாறு திகழ்கிறது?**

❖ கழுகுமலைத் தலைவன் முருகனின் கோவில் நல்ல வளத்தினைப் பெற்றுள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



- கடலில் வாழும் மீன், மகரம் போன்ற உருவ அமைப்புகள் கொண்ட கொடிகள் எல்லாம் சிறக்க முருகன் கோவில் திகழ்கிறது.

**8. தேவர்களின் செவியைச் சென்று அடைப்பவை எவை?**

- காவடி எடுக்கும் அடியார்கள் பாடும் திருப்புகழ் முழக்கமானது, அமராவதிப் பட்டினத்திலுள்ள தேவர்களின் செவியைச் சென்று அடைக்கிறது.

## சிறு வினா

**1. கழுகுமலைத் தலைவன் முருகனின் கோவில் வளம் பற்றி அண்ணாமலையார் கூறுவன யாவை?**

**முருகன் கோவில் வளம்:**

கழுகுமலைத் தலைவன் முருகனின் கோவில் கோபுரத்தின் தங்கக் கலசம் தேவர் உலகைவிட உயர்ந்து ஒளி வீசுகிறது. அவ்வொளி உலகங்கள் பலவற்றிலும் கண்கள் கூசும்படி பரவுகிறது.

கடலில் வாழும் மீன், மகரம் போன்ற உருவ அமைப்புகள் கொண்ட கொடிகள் எல்லாம் சிறக்க, முருகன் கோவில் திகழ்கிறது.

**கழுகுமலையின் அருள்:**

காவடி எடுக்கும் அடியார்கள் பாடும் திருப்புகழ் முழக்கமானது, அமராவதிப் பட்டினத்தில் உள்ள தேவர்களின் செவியைச் சென்று அடைகிறது. கழுகுமலை நகரின் கோட்டை உயரமானது. அதில் மேகங்கள் படிகின்றன. அவற்றிலிருந்து உருவாகும் மின்னல்கள் இருளைக் கிழிக்கின்றன.

"கோபுரத் துத்தங்கத் தூவி - தேவர்
கோபுரத் துக்கப்பால் மேவி...."

# கவிதைப்பேழை

இயல் 3

## குறுந்தொகை

3V6DP

## நுழையும் முன்

- அன்பும் அறனும் விளையும் திருமண வாழ்வைத் தலைவி விரும்புவதையும் இரு மனம் இணையும் திருமணத்தை உறுதிசெய்ய இரு வீட்டார் முனைவதையும் அகத்திணை இலக்கணத்தின் இலக்கியமாய் விளங்கும் குறுந்தொகை இப்பாடல்வழிக் காட்சிப்படுத்துகிறது.

## நூல்வெளி

- குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. கடவுள் வாழ்த்து நீங்கலாக, அகத்திணை சார்ந்த 401 பாடல்களை உடையது. "நல்ல குறுந்தொகை" எனச் சிறப்பித்து உரைக்கப்படுவது. உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல். ஆதலால் இந்நூலே முதலில் தொகுக்கப்பட்ட



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



தொகை நூலாகக் கருதப்படுகிறது. இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார். இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்.

❖ வெள்ளிவீதியார் சங்ககாலப் பெண்புலவர்களுள் ஒருவர். சங்கத்தொகை நூல்களில் 13 பாடல்கள் இவரால் பாடப்பட்டவை.

## பாடநூல் வினாக்கள்

### குறு வினா

**1. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?**

❖ எட்டுத்தொகை நூல்களில் ஒன்று குறுந்தொகையாகும்.

❖ அக ஒழுக்கம் சார்ந்த 401 பாடல்களைப் பெற்றது.

❖ "நல்ல" என்னும் அடைமொழியால் சிறப்பித்து உரைக்கப்பெற்றது.

❖ நான்கு அடிகள் முதல் எட்டு அடிகள் வரை கொண்டதாகும்.

❖ கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். இதனைத் தொகுத்தவர் பூரிக்கோ.

### சிறுவினா

**1. சங்க காலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு வெள்ளிவீதியார் பாடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது இக்காலச் சமூக நிகழ்வுகள் எழுத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்குக.**

**சங்க காலத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வு:**

சங்க கால தமிழகத்தில் நடைபெற்ற சமூக நிகழ்வுகளுள் ஒன்றான திருமணத்திற்கு மணமகன் முதியவர்கள் மூலம் தலைவியின் இல்லத்திற்குப் பரிசுப் பொருட்களை அனுப்பித் திருமணத்தை உறுதி செய்ததை, வெள்ளிவீதியார் பாடலால் அறிய முடிகிறது. அதாவது அக்காலத்தில் பெண்ணுக்கு, மணமகன் பொன்பொருள் அளித்து மணந்தமை புலப்படுகிறது.

**இக்காலச் சமூக நிகழ்வுகள்:**

இக்காலத்தில் இதே சமூக நிகழ்வு மணம் பேசுதல் எப்படி நடைபெறுகிறது என்பதை கவிதைகளும் சிறுகதைகளும் நாவல்களும் சுட்டிக் காட்டப்படுகின்றன. அதாவது, பெண்ணை மணப்பதற்கு மணமகனுக்கு மணக்கொடை அளித்தால்தான் திருமணம் நிச்சயம் நடைபெறும் என்ற இந்நிலை காணப்படுகிறது. தமிழகத்தில்தான் இன்று பொன் கொடுத்தால்தான் பெண் கொள்வேன் என்னும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. எனினும் எங்கோ சில இடங்களில் வரதட்சணை வாங்காமல் மணம்புரியும் நிகழ்வும் நடைபெற்று வருகிறது.

### இலக்கணக்குறிப்பு

பிரிந்தோர் - வினையாலணையும் பெயர்

நன்றுநன்று - அடுக்குத்தொடர்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## உறுப்பிலக்கணம்

**பிரிந்தோர் - பிரி + த் (ந்) + த் + ஓர்**

- பிரி - பகுதி
- த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்
- த் - இறந்தகால இடைநிலை
- ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி

## புணர்ச்சி விதி

1) **தண்டுடை - தண்டு + உடை** அ.மா.தே. 23 மார்ச் - 2020

- "உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்" என்ற விதிப்படி தண்ட் + உடை.
- "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" என்ற விதிப்படி தண்டுடை எனப் புணர்ந்தது.

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடத்தை நிரப்புக

1. உரையாசிரியர்களால் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல் ________ **விடை: குறுந்தொகை**
2. அகத்திணை இலக்கணத்தின் இலக்கியமாய் விளங்குவது ________ **விடை: குறுந்தொகை**
3. "தண்டுடைக் கையர்" யார்? **விடை: முதியவர்கள்**
4. குறுந்தொகைப் பாடல்களின் அடிவரையறை ________ **விடை: நான்கடி முதல் எட்டடி வரை**
5. குறுந்தொகை ________ நூல்களுள் ஒன்று. **விடை: எட்டுத்தொகை**
6. முதலில் தொகுக்கப்பட்ட எட்டுத்தொகை நூலாகக் கருதப்படுவது ________ **விடை: குறுந்தொகை**
7. வெள்ளிவீதியார் ________ காலப் பெண்பாற் புலவர்களில் ஒருவர். **விடை: சங்க**
8. குறுந்தொகை காட்டும் அக்கால சமூக நிகழ்வு ________ **விடை: மணக்கொடை கொடுத்தல்**
9. "அம்மாவாழி"எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலின் பா வகை ________
   **விடை: நேரிசை ஆசிரியப்பா**
10. "அம்மவாழி" எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடல் யார் யாரிடம் கூறியது?
    **விடை: தோழி - தலைவியிடம் கூறியது**
11. தண்டுடை - என்னும் சொல்லுக்குரிய விதிகள் ________
    **விடை: உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**
12. "தண்டு" என்பதன் பொருள் ________ **விடை: ஊன்றுகோல்**
13. குறுந்தொகையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை ________ **விடை: 401**
14. "நல்ல" என்ற அடைமொழியை உடைய எட்டுத்தொகை நூல் ________ **விடை: குறுந்தொகை**
15. வெள்ளிவீதியார் சங்கத்தொகை நூல்களில் பாடியுள்ள பாடல்களின் எண்ணிக்கை ________
    **விடை: 13**
16. பாரதம் பாடியவர் ________ **விடை: பெருந்தேவனார்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



17. வெண்டலைச் சிதவலர் - இதில் "சிதவல்" என்பதன் பொருள் ________ **விடை: தலைப்பாகை**
18. "குறுந்தொகை" நூலைத் தொகுத்தவர் ________ **விடை: பூரிக்கோ**
19. குறுந்தொகைக் கடவுள் வாழ்த்தைப் பாடியவர் ________ **விடை: பெருந்தேவனார்**
20. குறுந்தொகை ________ திணை சார்ந்த நூல். **விடை: அகத்திணை**

## சிறுவினாக்கள்

**1. குறிஞ்சித் திணை, தலைவன் வரவை நமர் ஏற்றுக் கொண்டனர், நீ கவலை ஒழிவாயாக என்று தோழி தலைவியிடம் சொல்லிய துறையை விளக்குக.**

**சான்று:**

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர்
இருந்தனர்.........
- குறுந்தொகை

**குறிஞ்சித் திணை:** செப் - 2020 | அ.மா.தே. 23

- ❖ நிலம் - மலையும் மலை சார்ந்த இடமும் ஆகும்.
- ❖ பொழுது - பெரும்பொழுது - குளிர்காலம், முன்பனிக்காலம் சிறுபொழுது - யாமம்.
- ❖ **கருப்பொருள்** - தெய்வம் - முருகன்; உணவு - தினை, மலைநெல் ; விலங்கு - புலி, கரடி; பறவை - கிளி, மயில்; தொழில் - தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல்.
- ❖ உரிப் பொருள் - புணர்தலும் புணர்தல் நிமித்தமும்

**துறை விளக்கம்:**

தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேசச் சான்றோரை அனுப்புகிறான். தலைவி, அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்து விடுவார்களோ என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் தலைவனின் தரப்பைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக்கொண்டனர் என்று தேற்றுகிறாள்.

**துறைப் பொருத்தம்:**

தலைவனின் தரப்பை உன் நமர் ஏற்றுக்கொண்டனர். நீ கவலை ஒழிவாயாக என்று தலைவியிடம் தோழி கூறியது இத்துறைக்குப் பொருந்துவதாக அமைகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



கவிதைப்பேழை

இயல் 3

# புறநானூறு

## நுழையும் முன்

❖ தமிழரின் வாழ்வியல் கருவூலமான புறநானூறு, வீரத்தையும் ஈரத்தையும் மட்டும் பேசாமல், வாழ்வின் விழுமியங்களையும் பேசுகிறது. பிறர்க்கென வாழ்வதே பிறவிப்பயன் என்ற கருத்தினை விளக்கும் இப்பாடல், தனக்கென வாழா மனிதர்களைப் பற்றிப் பேசுகிறது.

## சிறப்புகள்

**சிறப்பு 1:**

❖ பேராசிரியர் ஜார்ஜ் எல். ஹார்ட் (GEORGE L. HART) என்பவரால் புறநானூறு The Four Hundred Songs of Ward and Wisdom: An Anthology of Poems from Classical Tamil, the Purananuru என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஜி.யு. போப் (G. U. POPE), புறநானூற்றுப்பாடல்கள் சிலவற்றை “Extracts from Purananooru & Purapporul venbamalai” என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

**சிறப்பு 2:**

❖ சுவடிகளில் எழுதிப் பயன்படுத்தப்பட்டு அழிந்துபோகும் நிலையில் இருந்த புறநானூற்றின் பல சுவடிகளை ஒப்பிட்டு ஆய்ந்து பயன்பெறும் வகையில், உ.வே.சா. 1894 ஆம் ஆண்டு முதன் முதலாக அச்சில் பதிப்பித்து வெளியிட்டார்.

## நூல்வெளி

❖ புறநானூறு, எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது; புறம், புறப்பாட்டு என்றும் வழங்கப்படும்; அகவற்பாக்களால் ஆனது. புறநானூற்றுப் பாடல்கள் சங்ககாலத்தில் ஆண்ட அரசர்களைப் பற்றியும் மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் எடுத்துரைக்கின்றன.

❖ **கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி:** பாண்டிய மன்னருள் பெருவழுதி என்னும் பெயரில் பலர் இருந்தனர். ஆயினும், அரிய பண்புகள் அனைத்தையும் தம் இளமைக்காலத்திலேயே பெற்றிருந்த காரணத்தால் அக்கால மக்கள், இவரை இளம்பெருவழுதி என்று அழைத்தனர். கடற்பயணம் ஒன்றில் இறந்துபோனமையால் இவர், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்று பிற்காலத்தவரால் அழைக்கப்படுகின்றார். இவரது பாடல்கள் புறநானூற்றில் ஒன்றும் பரிபாடலில் ஒன்றும் இடம் பெற்றுள்ளன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



# பாடநூல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**1. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

| | |
|---|---|
| 1) வெள்ளிவீதியார் | - அ) புறநானூறு |
| 2) அண்ணாமலையார் | - ஆ) சி.சு. செல்லப்பா |
| 3) வாடிவாசல் | - இ) குறுந்தொகை |
| 4) இளம்பெருவழுதி | - ஈ) காவடிச்சிந்து |

i) அ ஆ இ ஈ ii) ஆ ஈ அ இ iii) இ ஈ ஆ அ iv) இ ஈ ஆ அ

**விடை: iii) இ ஈ ஆ அ**

**2. "இனிதென" - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.** மே - 2022

அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

ஆ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

ஈ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்

**விடை: அ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**

## குறுவினா

**1. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?** அ.மா.தே. 23 மார்ச் - 2020 ஆக - 2022 மார்ச் - 2019

**புகழ்:**

❖ தமிழர்கள் புகழ் வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பார்.

**பழி:**

❖ பழி வரும் என்றால், உலகம் முழுவதும் கிடைத்தாலும், ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

## சிறுவினா

**1. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.** மே - 2022

| புறநானூற்றுப் பாடல் | குறட்பா |
|---|---|
| உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்<br>அமிழ்தம் இயைவதாயினும், இனிது எனத்<br>தமியர் உண்டலும் இலரே | விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா<br>மருந்தெனினும் வேண்டற்பாற்(று) அன்று. |
| பிறர் அஞ்சுவது அஞ்சிப் | அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது<br>அஞ்சல் அறிவார் தொழில். |
| துஞ்சலும் இலர் | ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்<br>தாழாது உஞற்று பவர். |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



| | |
|---|---|
| புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் | பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல் மண்புக்கு மாய்வது மன். |

## இலக்கணக்குறிப்பு

அம்ம - அசைநிலை
உண்டல், துஞ்சல் - தொழிற்பெயர்கள்
முயலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

## உறுப்பிலக்கணம்

**துஞ்சல் - துஞ்சு + அல்**

- துஞ்சு - பகுதி
- அல் - தொழிற்பெயர் விகுதி

**முனிவிலர் - முனி + வ் + இல் + அர்**

- முனி - பகுதி
- வ் - உடம்படுமெய் சந்தி
- இல் - எதிர்மறை இடைநிலை
- அர் - பலர்பால் வினைமுற்று விகுதி

## புணர்ச்சி விதி

**இயைவதாயினும் - இயைவது + ஆயினும்** மே - 2022

- உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் - இயைவத் + ஆயினும்
- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - இயைவதாயினும்.

**புகழெனின் - புகழ் + எனின்** செப் - 2020

- உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - புகழெனின் அ.மா.தே. 23

# கூடுதல் வினாக்கள்

## கோடிட்ட இடத்தை நிரப்புக

1. இளம்பெருவழுதியின் பாடல் விளக்கும் கருத்து __________ **விடை: பிறர்க்கென வாழ்வதே பிறவிப்பயன்**
2. வெட்சி முதல் பாடாண் வரையுள்ள திணைகளுக்குப் பொதுவான செய்திகளைக் கூறுவது __________ **விடை: பொதுவியல் திணை**
3. "புறம்", "புறப்பாட்டு" என வழங்கப்படும் நூல் __________ **விடை: புறநானூறு**
4. புறநானூறு என்பது __________ எனப் பிரியும். **விடை: புறம் + நான்கு + நூறு**
5. தமிழரின் வாழ்வியல் கருவூலமாக விளங்கும் நூல் __________ **விடை: புறநானூறு**
6. புறநானூறு __________ பாக்களால் ஆனது. **விடை: அகவற்பா**
7. கடற்செலவு ஒன்றில் இறந்து போனவர் __________ **விடை: இளம்பெருவழுதி**
8. "பெருவழுதி" என்னும் பெயர் குறிப்பது __________ **விடை:: பாண்டியரை**
9. "துஞ்சல்" என்னும் சொல்லுக்குரிய விகுதி __________ **விடை: அல்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



10. புறநானூறு முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் __________ **விடை: ஜார்ஜ் எல்.ஹார்ட்**

## குறுவினாக்கள்

**1. இவ்வுலகம் இன்றும் எதனால் இயங்கிக் கொண்டிருக்கிறது?**

தமக்காக வாழாமல் பிறருக்காக வாழும் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்கிறார் இளம்பெருவழுதி.

**2. தமிழர் எதனை உண்ணார் எதற்கு அஞ்சுவர் எனப் புறநானூறு கூறுகிறது?**

❖ இந்திரனுக்குரிய அமிழ்தமே கிடைப்பதாயினும், தமிழர் தனித்து உண்ணமாட்டார்.
❖ பிறர் அஞ்சுவனவற்றுக்குத் தாமும் அஞ்சுவர் எனப் புறநானூறு கூறுகிறது.

**3. புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை?**

❖ பண்டைத் தமிழர்களின் கல்வி, நாகரீகம், அரசியல், போர்த்திறம், சமுதாயப் பண்பாடு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை உணர்வதற்குக் கருவியாகப் புறநானூறு திகழ்கிறது.
❖ புறநானூறு தமிழரின் சிறந்த கருவூலமாகவும் விளங்குகிறது.

**4. "தமியர் உண்டலும் இலர்" - எவர்? எதை?**

நம் வாழ்வினைப் பெரியதாய்க் கருதாமல், பிறர் நன்மையையே நாடுபவர், கிடைத்தற்கரிய தேவர் உண்ணும் அமுதம் கிட்டினாலும், அஃது இனிமையானது என்று கருதித் தாமே தனித்து உண்ண மாட்டார்.

**5. "அஞ்சுவது அஞ்சித் துஞ்சலும் இலர்" - விளக்குக.**

❖ தமக்கென வாழாது பிறருக்கென வாழ்பவர், அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சுவதோடு நின்றிடாமல், அவற்றைத் தீர்த்தற்கு, ஏதாவது வழி உண்டாயின் அதனையும் சோம்பல் இன்றிச் செய்வர் என்பதாகும்.

**6. புறநானூற்றைப் பிற மொழியில் வெளியிட்ட பிற மொழியாளர் யாவர்?**

❖ பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் என்பார், புறநானூறு முழுவதையும், ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார்.
❖ மேனாட்டு அறிஞர் ஜி.யு.போப் அவர்கள் புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை மொழிபெயர்த்து வெளியிட்டார்.

## சிறுவினாக்கள்

**1. பிறர்க்கென வாழ்பவர்களின் சிறப்புகள் யாவை?**

❖ தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள், இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும், அஃது இனிமையானது என்பதற்காகத் தனித்து உண்ண மாட்டார்கள்.
❖ யாரையும் வெறுக்க மாட்டார்கள்.
❖ சோம்பலின்றிச் செயல்படுவார்கள்.
❖ பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள்.
❖ புகழெனின் உயிரும் கொடுப்பர், பழியெனில் உலகமே கிடைத்தாலும் ஏற்க மாட்டார்கள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



❖ தமக்கென உழைக்காமல் பிறர்க்காகப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு உழைப்பவர்கள் எனப் பல சிறப்புகளைப் பெற்றோர் இருப்பதனால்தான், இவ்வுலகம் இன்றளவும் நிலைத்து இயங்கிக் கொண்டிருக்கிறது எனக் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி, தம் பாடலில் தெளிவாகக் கூறியுள்ளார்.

**2. புறநானூறு -குறிப்பு வரைக.**

❖ புறநானூறு = புறம் + நான்கு + நூறு.

❖ எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

❖ புறத்திணை சார்ந்த நானூறு பாடல்களைக் கொண்டது.

❖ புறம், புறப்பாட்டு என்றும் அழைக்கப்படுகிறது.

❖ அகவற்பாக்களால் ஆனது.

❖ 11திணைகள், 65துறைகள் கொண்டது.

❖ பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் எழுதப்பட்ட நூலாகும்.

❖ சங்க காலத்தில் வாழ்ந்த மன்னர்களின் வாழ்க்கை, வீரம், வெற்றி, புகழ், கொடை முதலியவற்றைப் பற்றி எடுத்துரைக்கின்றன.

**3. பொதுவியல் திணை சான்றுடன் விளக்குக.** ஆக - 2022

**திணை விளக்கம்:**

வெட்சி முதல் பாடண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளையும் பிற பொதுவான செய்திகளையும் தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணையாகும்.

**சான்று:**

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்"

**விளக்கம்:**

தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள், இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அஃது உயிர் காப்பது என்பதற்காகத் தனித்து உண்ணமாட்டார்கள்.

**பொருத்தம்:**

தமக்காக உழைக்காமல் பிறர்க்காகவும் உழைப்பவர்களால் மட்டுமே இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருப்பதாகப் புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான செய்திகளைக் கூறுவதால், இஃது பொதுவியல் திணை ஆயிற்று.

**4. பொண்மொழிக் காஞ்சித் துறை- சான்றுடன் விளக்குக.** ஆக - 2022

**துறை விளக்கம்:**

மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல் பொருண்மொழிக் காஞ்சித் துறையாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**சான்று:**

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்"

**விளக்கம்:**

தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள், இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அஃது உயிர் காப்பது என்பதற்காகத் தனித்து உண்ணமாட்டார்கள்.

**பொருத்தம்:**

தமக்காக உழைக்காமல் பிறர்க்காகவும் உழைப்பவர்களால் மட்டுமே இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருப்பதாக வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுவதால், இஃது "பொருண்மொழிக் காஞ்சித் துறை" ஆயிற்று. இப்பாடல் புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவான செய்திகளைக் கூறுவதால் இஃது பொதுவியல் திணை ஆயிற்று.

---

## விரிவானம்

இயல் 3

## வாடிவாசல்

– சி.சு. செல்லப்பா

### நுழையும் முன்

❖ ஒத்தைக்கு ஒத்தையாகக் கோதாவில் இறங்கும் மிருகத்துக்கும் மனுஷனுக்கும் நடக்கும் விவகாரத்துக்கு இரண்டிலொரு முடிவு காணும் இடம் வாடிவாசல். அந்த வாடிவாசலில் மனுஷ ரத்தம் சிந்தலாம்; காளை உடலில் ஒரு சொட்டு ரத்தம் காணக்கூடாது. எதன் கை ஓங்குதோ அதுதான் தூக்கும். மனுஷன் இதை விளையாட்டாக நினைத்தாலும் மிருகத்துக்கு அது விளையாட்டன்று. அதுதான் ஜல்லிக்கட்டு.

### தெரிந்து தெளிவோம்

❖ அளவில் சிறுகதையைவிட நீளமாகவும் புதினத்தைவிடச் சிறியதாகவும் இருக்கும் கதை குறும்புதினம். இதனைக் குறுநாவல் என்றும் சொல்வர். சிறுகதைக்கும் புதினத்துக்கும் இடைப்பட்ட வடிவம் என்று கொள்ளலாம்.

### நூல்வெளி

❖ சி.சு. செல்லப்பா சிறுகதை, புதினம், விமர்சனம், கவிதை, மொழிபெயர்ப்பு முதலாக இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் பங்களிப்புச் செய்திருக்கிறார்.

❖ சந்திரோதயம், தினமணி ஆகிய இதழ்களில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்; "எழுத்து" இதழினைத் தொடங்கி நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



- அவருடைய குறிப்பிடத்தக்க படைப்புகள்: வாடிவாசல், சுதந்திர தாகம், ஜீவனாம்சம், பி.எஸ். ராமையாவின் சிறுகதைப்பாணி, தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது.
- இவருடைய 'சுதந்திர தாகம்' புதினத்திற்கு 2001ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது.

## பாடநூல் வினாக்கள்

### நெடு வினா

**1. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.** ஜூன் - 2019 | மார்ச் - 2020 | அ.மா.தே. 23 | ஆக - 2022

**முன்னுரை:**

சி.சு.செல்லப்பா சிறுகதை, புதினம், கவிதை, மொழிபெயர்ப்பு முதலான இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் பங்களிப்புச் செய்திருக்கிறார். "எழுத்து" இதழினைத் தொடங்கி நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். வாடிவாசல், சுதந்திர தாகம்,ஜீவனாம்சம் போன்றவை இவரது படைப்புகள் ஆகும். இவருடைய "சுதந்திர தாகம்" புதினத்திற்கு 2001 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருது கிடைத்தது.

**மங்கையரின் வீர உணர்வு:**

வீரத்தின் விளைநிலம் தமிழகம். போர் முரசு கேட்டவுடன், கலங்காது கையில் வேலெடுத்துக் கொடுத்து, நெற்றியில் திலகம் இட்டு, போரிடச் சென்று, வெற்றியுடன் வருக் என வழியனுப்பி வைக்கும் மங்கையரைக் கொண்ட நாடு நம் நாடாகும்.

**காளைகளை அடக்கும் காளைகள்:**

இத்தகைய வீரமக்கள் இன்றும் தமிழகத்தில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். தின்று கொழுத்துத் தினவெடுத்து வளர்ந்திருக்கும் காளைகளை எதிர்த்து நின்றால், அக்காளைகளின் கூரிய கொம்புகளால் குத்தப்பட்டுச் சாக நேரிடும் அல்லது பெருங்காயமுற்று வீழ நேரிடும் என்பதை எல்லோரும் அறிவர். எனினும், அதனைப் புறந்தள்ளி, போராடி, காளைகளை அடக்கி வெற்றி பெறப் பலநூறு வீர இளைஞர்கள் ஜல்லிக்கட்டு நிகழும்போது முன் வருவதைக் காணும்போது வியப்பு மேலிடுகிறது.

**வாடிவாசலில் அமர்க்களம்:**

"வாடிபுரம் காளை" என்று கத்திய அத்தனை குரல்களிலும் ஒரு நடுக்கம். திகில் வெடித்துப் பரவியது. வாடிவாசல் அமர்க்களப்பட்டது. வாடிவாசலில் முண்டியடித்து நின்ற கூட்டம், காரிக் கொம்புக்கு எட்டாதபடி அவனவன் அங்கும் இங்கும் ஓடிப் பதுங்கிப் பார்த்தான். இரண்டொருத்தன் தான் துணிந்து நின்று காளை அவிழ்க்கப்படுவதைப் பார்த்தான்.

**ஆசைக்கு உலை வைத்த காளை:**

தன் லங்கோட்டைச் சரி செய்து கொண்ட பிச்சி, மருதனை உஷார் படுத்தி விட்டுக் கைகளை மண்ணில் தேய்த்துக் காளையைப் பிடிக்க ஆயத்தமானன். பிடிக்கப் புறப்பட்டவனுக்காகச் சிலர் பரிதாபப்பட்டனர். பார்வையாளராக அமர்ந்திருந்த ஜமீன்தார், தம் பார்வையிலேயே பிச்சியை ஊக்கப்படுத்தினார் கேலி பேசியவர்களைக் கண்டித்தார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



காளை, திட்டி வாசலில் தலைநிமிர்ந்து நின்றது ."இந்த நின்னுகுத்திக் காளையைக் கிழக்கத்தியான் எங்கே அடக்கப்போறான்?" எனச் சிலர் ஏளனம் பேசினர். மண் சிதறக் காளை ஒருமுறை மூச்சுவிட்டு, மீண்டும் தரையை மோந்தது. எதிரில் நின்ற பிச்சிக்குத் தன் தந்தையின் ஆசைக்கும் உயிருக்கும் உலை வைத்த அடையாளமாக காளையின் கொம்பில் ரத்தம் தெரிந்தது.

இரு கைகளையும் தரையில் தேய்த்து, பிடி வழுக்காமல் இருக்கச் சுரசுரப்பாக்கிக் கொண்டனர். மருதனும் பிச்சியும் ,தன்னைச் சுற்றி எழுந்த கேலி வார்த்தைகளைக் கேட்ட ஜமீன்தார், "உளறாமே பார்த்துகிட்டிருங்க" என்று சுருக்கெனச் சொல்லி அடக்கினார்.

வாடிவாசலில், தன் மீது கை போடும் படி சவால் விட்ட மாதிரி நின்றது. அதன்மூச்சு தரையில் பட்டதும் மண் சிதறிப் பறந்தது. ஒரு தரம் செறுக்கடித்தது. காரியின் புடைத்த கருந்திமில் நெஞ்சுயர மரக்கட்டை அடைப்புக்கு மேலாக எடுப்பாகத் துருத்திக் கொண்டிருந்தது. "அப்பன் ஆசைக்கு மட்டுமன்றி உசிருக்கே உலை வைத்த காரி, அதன் கொம்பில் இன்னும் அப்பன் ரத்தம் வழிந்து கொண்டிருப்பது போன்ற பிரமை ஏற்பட பிச்சியின் நேரெதிரில் காரி வந்து நின்றது.

**காளையை அடக்கத் திட்டமிடல்:**

காளையின் கொம்புக்கு நேராகப் பிச்சியும், வால் பக்கம் மருதனும் நின்றனர். "டுர்ரீ" எனக் குரல் கொடுத்த மருதன், காளையின் வாலைத் தொட்டு விட்டு ஒதுங்கினான்.

மருதன் மீது பாயக் காளை திரும்பியது, காளையின் மீது சடக்கெனப் பாய்ந்து, திமிலில் இடக்கை போட்டு, நெஞ்சோடு இறுக்கி அணைத்து, உடலைக் காளையின் கழுத்தோடு ஒட்டி,வலக்கையால் காளையின் கொம்பைப் பற்றிக்கொண்டான்.

பிச்சியின் எதிர்பாராத பாய்ச்சல் காளைக்குப் பாதகமாகிவிட்டது. ஆனாலும், மிருக சுபாவத்துடன் சமாளித்துப் பிச்சியை இருமுறை கீழே தள்ள முயன்று, தவ்வி ஆள் உயரம் குதித்தது. பிச்சியின் பிடி இறுகியது.

பிச்சி, தன் கால்களைத் தரையில் பதிக்க முயன்றான். காளை துள்ளியது. காளை களைத்துப் போனதால், மூன்றாம்முறை தவ்வ இயலவில்லை. பிச்சியைக் காளை உருட்டித் தள்ளிக் கிழித்திருக்க வேண்டும். ஆனால், "கிழக்கத்தியான், வென்றிட்டான்டா......... என்று கூட்டம் ஆர்ப்பரித்தது. உசிலனூர் அம்பிலியின் பேரைக் காப்பாத்திட்டேடா நீ புலிக்குப் பொறந்தவன்டா" என்று பாராட்ட, பிச்சியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

**முடிவுரை:**

அடங்காத காளையை அடக்க, எவ்வாறு திட்டமிட வேண்டும்? காளையை எப்படிப் பிடிக்க வேண்டும்? பிடியைத் தளர்த்தாமல் இறுதிவரை ஏன் போராட வேண்டும் என்பனவற்றையெல்லாம் வாடிவாசல் கதையால் நாம் அறியமுடிகிறது.

போட்டியில் கலந்து கொள்ளும்போது மற்றவர் போற்றுவதையும் தூற்றுவதையும் காதில் வாங்காமல் கருமமே கண்ணாகச் செயல்பட வேண்டும் என்பதை எல்லாமும் அறியமுடிகிறது. தமிழர் பண்பாட்டில், காளையை அடக்குவதை மனிதன் விளையாட்டாக நினைக்கிறான். காளைக்கு அது விளையாட்டு இல்லை. பண்பாட்டின் உயிர்ப்பில் இந்தத் தெளிவு, மிகமிக அவசியம் என்பதும் இக்கதையின் மூலமாகத் தெள்ளத் தெளிவாகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



## இனிக்கும் இலக்கணம்

இயல் 3

# பகுபத உறுப்புகள்

PSR3G

| சிறப்புகள் |
|---|

**சிறப்பு 1:**

- வியங்கோள், தொழிற்பெயர், பெயரெச்சம், வினையெச்சம் போன்ற பல்வேறு இலக்கணப் பொருண்மைகளை உணர்த்தவும் விகுதி பயன்படுகிறது.

  எழுதுக - எழுது + க உரைத்த - உரை + த் + த் + அ

  செய்தல் - செய் + தல் படித்து - படி + த் + த் + உ

**சிறப்பு 2:**

- இறந்தகால இடைநிலைகள் - த், ட், ற், இன்
- நிகழ்கால இடைநிலைகள் - கிறு, கின்று, ஆநின்று
- எதிர்கால இடைநிலைகள் - ப், வ்
- எதிர்மறை இடைநிலைகள் - ஆ, அல், இல்

**சிறப்பு 3:**

- பகுபத உறுப்புகளில் அடங்காமல் ஏழாவது உறுப்பாக வரும் புறத்துறுப்பு **எழுத்துப்பேறு** எனப்படும். சாரியை வரவேண்டிய இடத்தில் புள்ளி பெற்ற எழுத்து உயிர் ஏற இடமளித்து வந்தால் அதனை எழுத்துப்பேறு எனக் குறிப்பிடல் வேண்டும். விகுதி தனியே வராமல் துணையாகப் பெற்று வரும் எழுத்தே எழுத்துப்பேறு ஆகும். **எழுத்துப்பேறு காலம் காட்டாது.**

  பாடுதி - பாடு + த் + இ மொழியாதான் - மொழி + ய் + ஆ + த் + ஆன்

- இச்சொற்களில் 'இ' என்னும் முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிக்கு முன்னும் 'ஆ' என்னும் எதிர்மறை இடைநிலைக்குப் பின்னும் த் என்பது எழுத்துப்பேறாகும்.

**சிறப்பு 4:**

- அன் என்பது விகுதியாக வரும்போது அன் என்பதே சாரியையாக வரும்.
- ஆன், ஆள், ஆர் ஆகிய விகுதிகள் வரும்போது அன் சாரியையாக வராது.

| நினைவில் கொள்க |
|---|

| | |
|---|---|
| இறந்தகால இடைநிலைகள் | த், ட், ற், இன் |
| நிகழ்கால இடைநிலைகள் | கிறு, கின்று, ஆநின்று |
| எதிர்கால இடைநிலைகள் | ப், வ் |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



| | |
|---|---|
| தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் | என், ஏன், அல், அன், கு, டு, து, று |
| தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | எம், ஏம், அம், ஆம், ஓம், கும், டும், தும், றும் |
| முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் | ஐ, ஆய், இ |
| முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | இர், ஈர், மின் |
| படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதிகள் | அன், ஆன் |
| படர்க்கைப் பெண்பால் வினைமுற்று விகுதிகள் | அள், ஆள் |
| படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதிகள் | அர், ஆர், ப, மார், கள் |
| படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள் | து, று, டு |
| படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று விகுதிகள் | அ, ஆ |
| வியங்கோள் வினைமுற்று விகுதிகள் | க, இய, இயர் |
| தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| தெரிநிலை வினையெச்ச விகுதிகள் | உ, இ, ... |

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**1. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?**

அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம் ஆ) பகுதி, இடைநிலை, சாரியை

இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி

**விடை: ஈ) பகுதி, விகுதி**

### சிறு வினா

**1. பகுபத உறுப்பிலக்கணம் கூறுக.**

அ) வருகின்றாள்

ஆ) வாழ்வான்

இ) காண்பிப்பார்

ஈ) பிரிந்த

**1. வருகின்றாள் = வா(வரு) + கின்று + ஆள்** மார்ச் - 2023

- வா - பகுதி
- "வா" என்னும் பகுதி "வரு" எனத் திரிந்தது விகாரம்
- கின்று - நிகழ்கால இடைநிலை
- ஆள் - படர்க்கைப் பெண்பால் வினைமுற்று விகுதி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



2. **வாழ்வான் = வாழ் + வ் + ஆன்**
   - ❖ வாழ் - பகுதி
   - ❖ வ் - எதிர்கால இடைநிலை
   - ❖ ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.
3. **காண்பிப்பார் = காண்பி + ப் + ப் + ஆர்**
   - ❖ காண்பி - பகுதி
   - ❖ ப் - சந்தி
   - ❖ ப் - எதிர்கால இடைநிலை.
   - ❖ ஆர் - படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி
4. **பிரிந்த = பிரி + த்(ந்) + த் + அ**
   - ❖ பிரி - பகுதி
   - ❖ த் - சந்தி
   - ❖ "த்" - "ந்" ஆனது விகாரம்
   - ❖ த் - இறந்தகால இடைநிலை
   - ❖ அ - பெயரெச்ச விகுதி.

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடங்களை நிரப்புக

1. தமிழ் ஓர் __________ மொழி **விடை: ஒட்டு நிலை**
2. பகுதி சில சொற்களில் ஒற்று இரட்டித்துக் __________ காட்டும். **விடை: காலம்**
3. வெட்சி முதல் பாடாண் வரையுள்ள திணைகளுக்குப் பொதுவான செய்திகளைக் கூறுவது __________ **விடை: பொதுவியல் திணை**
4. க, இய, இயர் என்பன __________ விகுதிகள் **விடை: வியங்கோள் வினைமுற்று**
5. பகுபத உறுப்புகள் மொத்தம் __________ **விடை: ஆறு**
6. பகுபதத்தில் அடிப்படை உறுப்புகள் __________ **விடை: இரண்டு**
7. பகுபதத்தில் "பகுதி" என்பது, சொல்லின் __________ அமையும். **விடை: முதலில்**
8. பகுதி என்பது __________ வரும். **விடை: ஏவல் வினையாக**
9. திணை, பால், எண், இடம் காட்டும் உறுப்பு __________ **விடை: விகுதி**
10. காலம் காட்டும் உறுப்பு __________ பகுபதத்தில் வரும். **விடை: வினைப்**
11. பாடினாள் - இச்சொல் பெறும் இடைநிலை __________ **விடை: இறந்தகாலம்**
12. பாடுகிறது - இச்சொல் பெறும் இடைநிலை __________ **விடை: நிகழ்காலம்**
13. கொடுப்பாள் - இச்சொல் பெறும் இடைநிலை __________ **விடை: எதிர்காலம்**
14. பகுதியை __________ என்றும் கூறுவர். **விடை: முதனிலை**
15. பகுபத உறுப்புகளில் அடங்காமல் ஏழாவது உறுப்பாக வரும் புறத்துறுப்பு __________



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**விடை: எழுத்துப்பேறு**

16. பகுபத உறுப்புகளில் ________ க்குப் பொருள் இல்லை. **விடை: சாரியை**

## குறுவினாக்கள்

**1. பெயர் இடைநிலை என்பது யாது? சான்று தருக.**

- ❖ ஓர் ஆக்கப்பெயர்ச் சொல்லில் பெயர்ப்பகுதியை விகுதியோடு இணைப்பதற்கு வரும் இடைநிலை பெயர் இடைநிலை ஆகும்.
- ❖ க்,ஞ்,ந், த்,வ் ஆகிய மெய்கள் பெயர் இடைநிலைகளாக வரும்.

**சான்று:**

தமிழச்சி = தமிழ் + அ + ச் + ச் + இ

மூவர் = மூன்று + வ் + அர்

**2. "பகுதி" என்பதனை விளக்கு.**

- ❖ சொல்லின் முதலில் நிற்கும் உறுப்பு; முதல் நிலை, பகுதி, அடிச்சொல், வேர்ச்சொல்.
- ❖ பகுதி, ஏவல் வினையாக அமையும், மேலும் பிரிக்க முடியாது.

**சான்று:** செய், உண், கல், படி, நட, ஓடு, தா, பாடு, எழுது.

**3. சந்தி என்பதனை விளக்கு.**

- ❖ "சந்தி" என்பது பகுபத உறுப்புகள் புணரும்போது இடையில் தோன்றுவது ஆகும்.
- ❖ பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்.

**சான்று:**

- ❖ த், ப், க் என்னும் மெய்களும் ய், வ் உடம்படு மெய்களுமாகும்.
- ❖ இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையிலும் சில சொற்களில் இடம்பெறும்.

**4. விகாரம் என்பது யாது?**

பகுபத உறுப்புகள் புணரும்போது ஏற்படும் எழுத்துகளின் வடிவமாற்றம் விகாரம் (திரிதல், கெடுதல், குறுகல்) எனப்படும்.

**5. பதம் என்பது யாது?**

ஓர் எழுத்து தனித்து வந்தோ, பல எழுத்துகள் சேர்ந்து தொடர்ந்து வந்தோ ஒரு பொருள் தருமாயின் அது பதம் எனப்படும்.

**6. பதத்தின் வேறுபெயர்கள் யாவை?**

- ❖ சொல்
- ❖ மொழி
- ❖ கிளவி

**7. பதம் எத்தனை வகைப்படும்?அவை யாவை?**

பதம் இரு வகைப்படும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



அவை, பகுபதம், பகாப்பதம் ஆகும்.

**8. பகாப்பதம் - சான்றுடன் விளக்குக.**

பகுதி, விகுதி முதலிய உறுப்புகளாய்ப் பிரிக்க முடியாத, பிரித்தால் பொருள் தராத, இடுகுறியாய் அமைந்த சொல் பகாப்பதம் எனப்படும்.

**சான்று:** நாடு, மண்.

**9. எவை பகாப்பதங்களாகவே இருக்கும்?**

இடைச்சொல்லும், உரிச்சொல்லும் பகாப்பதங்களாகவே இருக்கும்.

**10. பகுபதம் என்றால் என்ன? சான்றுடன் விவரி.**

- பகுதி, விகுதி முதலிய உறுப்புகளாய்ப் பிரிக்கக் கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும்.
- **சான்று:** அறிஞன் - இச்சொல்லை அறி + ஞ் + அன் எனப் பிரிக்கலாம். பிரித்தபின் "அறி" என்பது அறிவையும், "அன்" என்பது ஆண்பாலையும் உணர்த்தும்.

**11. பெயர்ப் பகுபதம் எவற்றின் அடியாய்ப் பிறக்கும்?**

பெயர்ப் பகுபதம், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடியாய்ப் பிறக்கும்.

**12. பகுபதத்தின் உறுப்புகள் யாவை?**

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறும் பகுபதத்தின் உறுப்புகளாகும்.

**13. எழுத்துப்பேறு என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.**

- பகுபத உறுப்புகளில் அடங்காமல் ஏழாவது உறுப்பாக வரும் புறத்துறுப்பு எழுத்துப்பேறு எனப்படும்.
- விகுதி தனியே வராமல் துணையாகப் பெற்று வரும் எழுத்தே எழுத்துப்பேறு ஆகும்.
- எழுத்துப்பேறு காலம் காட்டாது.
- **சான்று:** பாடுதி - பாடு + த் + இ

## இலக்கணத் தேர்ச்சிகொள்

**1. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?**

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும். அவை, பகுதி, விகுதி, இடைநிலை, சாந்தி, சாரியை, விகாரம் என்பனவாகும்.

**2. காலம்காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

- இறந்தகால இடைநிலை - த், ட், ற், இன் என்பன
- நிகழ்கால இடைநிலைகள் - கிறு, கின்று, ஆநின்று என்பன
- எதிர்கால இடைநிலைகள் - ப், வ் என்பன.

**எ.கா:**

செய்தான் - செய் + த் + ஆன்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



உண்கிறான் - உண் + கிறு + ஆன்

படிப்பான் - படி + ப் + ப் + ஆன்

**3. பகுபதத்தில் சந்தி, சாரியை எவ்வெவ்விடங்களில் அமையும்?**

**சந்தி:**

- பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய பகுபத உறுப்புகள் புணரும்போது இடையில் தோன்றும் உறுப்பு, சந்தி எனப்படும்.
- சந்தி, பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வருவது பெருவழக்காகும்.
- பெரும்பாலும் த் ப் க் என்னும் மூன்று எழுத்துகளுள் ஒன்று சந்தியாக வரும்.
- உடம்படுமெய்கள் (ய், வ்) சந்தியாக வருவதுண்டு.

  அசைத்தான் - அசை + த் + த் + அன்

  படிக்கிறார் - படி + க் + கிறு + ஆர்

**சாரியை:**

- பகுதியோடு இடைநிலையும் இடைநிலையோடு விகுதியும் பொருத்தமாகச் சார்ந்து இயைய வரும் உறுப்பு, சாரியை ஆகும்.
- பெரும்பாலும் சாரியை இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.

  பார்த்தனன் - பார் + த் + த் + அன் + அன்

- சாரியைக்குப் பொருள் இல்லை.

**4. விகுதிகள் எவற்றை உணர்த்தும்?**

திணை, பால், எண், இடம் ஆகியவற்றை உணர்த்தும்.

**5. பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

| | பகுதி | சந்தி | விகாரம் | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|---|
| **அமைந்து** | அமை | த் | (ந்) | த் | - | உ |
| **பார்த்தான்** | பார் | த் | - | -த் | - | ஆன் |
| **தோன்றி** | தோன்று | - | - | - | - | இ |
| **வருகிறார்** | வா | - | வரு | கிறு | - | ஆர் |
| **செய்க** | செய் | - | - | - | - | க |
| **நடந்தனன்** | நட | த் | (ந்) | த் | அன் | அன் |
| **கொடுத்த** | கொடு | த் | - | த் | - | அ |

**6. பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க.**

அன் - வந்தனன்   இன் - முறிந்தது   கு - காண்குவன்   அன் - சென்றன

**விடை:** ஆ) இன் - முறிந்தது




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net
FOR ORDERS CONTACT : 8925612359
www.CBSEtips.in




**7. பகுதி, விகுதி இடைநிலை ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.**




❖ பேசினான்
❖ எழுதினான்
❖ வணங்கினான்
❖ பேசுகிறான்
❖ எழுதுகிறான்
❖ வணங்குகிறான்
❖ பேசுவான்
❖ எழுதுவான்
❖ வணங்குவான்
❖ பேசான்
❖ எழுதான்
❖ வணங்கான்

---

**8. வேர்ச்சொல், எதிர்மறை இடைநிலை, விகுதி ஆகியவற்றைச் சேர்த்துச் சொற்களை உருவாக்குக.**




❖ பாரான்
❖ கண்டிலள்
❖ உரைத்திலர்

---

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

**1. மாநிலக்கல்லூரி - புணர்ச்சி விதி கூறுக.**

❖ மாநிலக்கல்லூரி = மாநிலம் + கல்லூரி "மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்" என்ற விதிப்படி "ம்" நீங்கி மாநில + கல்லூரி என்றானது.

❖ "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் க ச த ப மிகும்" என்ற விதிப்படி "க்" மிகுந்து "மாநிலக்கல்லூரி" எனப் புணர்ந்தது.

---

**2. ஆசிரியராக்கினார் - இதன் பகுதி அ) ஆசு ஆ) ஆசிரி இ) ஆசிரியராக்கு ஈ) ஆசி**

**விடை:** இ) ஆசிரியராக்கு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**3. சிறு சிறு தொடர்களாக மாற்றி எழுதுக**

தாமோதரனார் நீதிநெறி விளக்கம் என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டுக் கலித்தொகை, வீரசோழியம் உள்ளிட்ட நூல்களைப் பதிப்பித்துக் கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

❖ தாமோதரனார் நீதிநெறி விளக்கம் என்ற நூலைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.
❖ தாமோதரனார் கலித்தொகை, வீரசோழியம் உள்ளிட்ட நூல்களைப் பதிப்பித்துள்ளார்.
❖ தாமோதரனார் கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூடாமணி வசனம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

**4. பெரும்புகழ் - இலக்கணக்குறிப்புத் தருக.**

**விடை:** பண்புத்தொகை

**5. கல்லூரி, உயர்நீதிமன்றம், வரலாறு, பணி ஆகியவற்றிற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.**

கல்லூரி - College
நீதிமன்றம் - High Court
வரலாறு - History
பணி - Job

## வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

1. **குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.** மே - 2022

**விடை:** குமரனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமா? - என் வீட்டிற்கு வருகை தாருங்கள் என் வீட்டிற்குப் பக்கத்து வீடு தான் குமரனது வீடு.

2. **அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெறவேண்டும்.** மார்ச் - 2020

**விடை:** அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெற வேண்டும். அ.மா.தே. 23

3. **கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.**

**விடை:** கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மை தீமைகளைப் புரிந்து பேசுவர். ஜூன் - 2019

4. **தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.**

**விடை:** தமிழர் ஆற்றுத் தண்ணீரைத் தேக்கிச் சேமித்துக் கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

5. **சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.**

**விடை:** சான்றோர் மிகுந்த பொறுப்புடன் சிறப்பான சேவை புரிந்து கொள்கையை நிலைநாட்டச் செய்தனர்.

## தமிழாக்கம் தருக

1. **Education is the most powerful weapon, which you can use to change the world.** மார்ச் - 23 மே - 2022

❖ கல்வி என்பது அதிக ஆற்றல் வாய்ந்த கருவி என்பதனைக் கொண்டு, நீ உலகையே மாற்றலாம்.

2. **Looking at beauty in the world is the first step of purifying the mind** மார்ச் - 2023 மே - 2022



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



❖ உலகில் உள்ள அழகை இரசிப்பது மனதைத் தூய்மைப்படுத்துவதற்கான முதல் படியாகும்.

3. **Culture does not make people. People make culture.** மார்ச் - 2023 மார்ச் - 2019

❖ கலாச்சாரம் மக்களை உருவாக்குவதில்லை, மக்களே கலாச்சாரத்தை உருவாக்குகின்றார்கள்.

4. **A people without the knowledge of their past history and culture is like a tree without roots.**

❖ கடந்த கால வரலாறு மற்றும் கலாச்சாரம் பற்றிய அறிவு இல்லாத மக்கள், வேர்கள் இல்லாத மரம் போன்றவர்கள்.

5. **A nation's culture resides in the hearts and in the soul of its people.** ஜூன் - 2019

❖ ஒரு நாட்டின் கலாச்சாரம் என்பது மக்களின் மனதிலும், ஆன்மாவிலும்தான் இருக்கிறது.

## கீழ்க்காணும் செய்தியைப் படித்து அறிவிப்புப் பதாகை ஒன்றை உருவாக்குக

| | |
|---|---|
| ஜனவரி - 10, மதுரை. தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும், பண்பாடு குறித்தான தேடலின் தேவை குறித்தும் சிறகுகள் சமூக அமைப்பின் சார்பாக ஒருநாள் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. | மதுரையை மையமாகக் கொண்டு இயங்கி வரும் சமூகநல அமைப்பான சிறகுகள் சார்பில் ஒருநாள் கருத்தரங்கம் தெப்பக்குளம் அருகில், பாரதி கலைக்கூட அரங்கில் ஜனவரி 13ஆம் நாள் நடைபெற உள்ளது. இதில் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புக் குறித்தும் தொலைத்த பண்பாட்டை மீட்டெடுப்பது குறித்தும் "பண்பாடுகளால் வாழும் தமிழர்" என்னும் தலைப்பில் சமூக ஆர்வலரும் கவிஞருமான அன்பரசி பேசவிருக்கிறார். இதன் இறுதிப்பகுதியாகக் கலந்துரையாடலும் நடைபெற இருக்கிறது. விருப்பம் உள்ள சமூக ஆர்வலர்கள், கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள் கலந்து கொள்ளலாம் என்று சிறகுகள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான இனியன் தெரிவித்துள்ளார். |

## <u>தமிழ்ப்பண்பாட்டுக் கருத்தரங்கு</u>

"நமது பண்பாடு" "நமது பாசறை"

பங்கு பெற வருக

இடம் : பாரதி கலைக்கூட அரங்கு, (தெப்பக்குளம் அருகில்) மதுரை

நாள் : ஜனவரி 10.

தலைப்பு : **"பண்பாடுகளால் வாழும் தமிழர்"**

சிறப்புரை : சமூக ஆர்வலர் கவிஞர் அன்பரசி அவர்கள்.

விழைவு : சமூக ஆர்வலர்கள், கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்கள், உள்ளிட்டோரின் வருகையும் கலந்துரையாடலும் நடைபெறும்.

**ஆர்வலர்களே! மாணவர்களே! கலந்து கொள்ளத் திரண்டு வருக!**

அழைப்பில் மகிழும் இனியன்,
ஒருங்கிணைப்பாளர்,
"சிறகுகள்" அமைப்பு,
மதுரை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



# மொழியோடு விளையாடு

## கட்டுரை எழுதுக

**1. "பண்பாட்டைப் பாதுகாப்போம்**
**பகுத்தறிவு போற்றுவோம்" - என்னும் பொருள்பட ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.**

## கட்டுரை எழுதுதல்

**முன்னுரை:**

**"பண்புடையார் பட்டுண்டு உலகு"** என்னும் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க பண்புகளின் உறைவிடமாக நமது தாயகம் திகழ்கிறது. தமிழர் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்திருந்தனர் என்பதை நம் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. மனதில் குற்றமில்லாமல் இருப்பதே அறமாகும். சிறிதளவு தீமையும் தராத சொற்களைப் பேசுவதே வாய்மை என்றும், **"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"** என்றும் எம்மொழியிலும் என் நாட்டிலும் காண முடியாத பண்புகளைச் சான்றோர்கள் நம் மனங்களில் புகுத்திச் சென்றனர்.

**"ஒருவனுக்கு ஒருத்தி என்றும்,**
**பிறன்மனை நோக்காதே பேராண்மை என்றும்**
**இல்லறம் இன்புற வள்ளுவம் வகுத்தளித்த**
**வழியை யாரே இயம்ப இயலும்".**

**தமிழர் பண்பாடு:**

பல்லாயிரம் மொழிகள் புவியியல் இருந்தாலும் எத்திசையிலும் பெருமை கொண்டே தனித்துவமான பண்பாடுகளையும் கலாச்சாரங்களையும் கொண்டது.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர் தர வாரீர்"**

என்று உலகத்துக்கே சமத்துவத்தை விதைக்கிறார் பூங்குன்றனார். பண்பாடு என்பது பயிர் விளைகின்ற நிலத்தைப் பயன்படுத்துவது போல மக்களின் வாழ்க்கையை நெறிப்படுத்துவதே ஆகும்.

**கலைச்செல்வங்கள்:**

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் கற்றுத் தேர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். இயல், இசை, நாடகம் தமிழர்களின் வாழ்வோடு இணை பிரியாதவை. அன்பு, நட்பு, வீரம் போன்றவற்றை தம் கலைகள் மூலம் வெளிக்காட்டியவர்கள். அச்செல்வங்கள் இன்றும் நம் தமிழர்களின் பண்பாடு கலாச்சாரம் நாகரிகம் போன்றவற்றைப் பறைசாற்றி நிற்கின்றன. மக்களின் பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாகத் திகழ்கின்றன.

**பகுத்தறிவு போற்றுவோம்:**

ஐந்தறிவுகளால் பெறப்படும் செய்திகளை ஒருங்கிணைத்து உண்மை நிலையைக் கண்டறிதல் நுண்ணறிவு. இதையே பகுத்தறிவு என்பர் .பகுத்தறிவு என்பது நிகழ்வுகளோ கருத்துகளோ, எதுவாயினும், அவை தோன்றக் காரணம், அதனால் உண்டாகும் பின் விளைவுகள் இவற்றைப் புரிந்து செயல்படுவதாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு"**

என்னும் தமிழ் வேதப்படி சகுனம், சாத்திரம், சம்பிரதாயம் என்னும் கேடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு உலகத்தோடு ஒட்ட ஒழுகுவோம். ஆணுக்கு இணையாகப் பெண்ணை அனைத்துத் துறைகளிலும் வாய்ப்பளித்து வாழ்வில் வளம் பெறச் செய்வோம். உணவு, உடை பழக்கவழக்கங்களில் பல மாற்றங்களைப் பெற்றாலும் நம் பகுத்தறிவைப் பயன்படுத்தி இயற்கையோடு இயைந்த நல்வாழ்வினை வாழச் செய்வோம்.

- பிறருக்கு ஒருபோதும் தீமை செய்யோம்.
- அறிவியல் உலகில், அவசர வாழ்வில் புதுமை காண்கின்ற இளைய சமுதாயத்திற்கு வழிகாட்டுவோம்.
- உலகியலை உணர வைப்போம்.
- நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் புகட்டுவோம்.
- புகழ் பெறவைப்போம் எழுச்சிபெறச் செய்வோம்.

**முடிவுரை:**

**"திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும்"** கொண்ட நம்மிடையே, மேலை நாட்டின் பழக்க வழக்கங்கள் ஊடுருவி, நம் பண்பாட்டினைச் சீர்குலைக்க முனைகின்றன. இதிலிருந்து மீண்டு, பகுத்தறிவைப் போற்றி, நம் பண்பாட்டினைப் பாதுகாத்து, உலக அரங்கில் தமிழர் உயர்ந்தோங்கி வாழ முயல்வோம் பண்பாட்டு உணர்வும், பகுத்தறியும் திறனும் கொண்ட சமுதாயம்தான் வாழ்வின் சிறந்து விளங்கும் என்பதை உணர்வோம்.

## சித்திரகவி

தமிழ்க் கவிதைகளுள் சித்திரகவி அமைப்பும் ஒன்றாகும். சித்திரகவியில் பல வகைகள் உள்ளன. சித்திரகவி என்பது ஏதேனும் ஒரு பொருளைக் காட்சிப்படுத்திக் கவிதையினையும் அதற்குள்ளாக அமைத்து எழுதுவதாகும்.

### மாலைமாற்று


மாலைமாற்று சித்திரகவி வகைகளுள் எளிமையானது. (மாலை - பூக்களால் வரிசையாகத் தொடுத்தது) மாலையின் தொடக்கத்தில் உள்ள இரண்டு முனைகளிலிருந்து கீழ்நோக்கினாலும் மாலையின் முடிபாக உள்ள ஒரு முனையிலிருந்து மேல்நோக்கிச் சென்றாலும் அம்மாலை ஒரே தன்மை உடையதாகத் தோன்றும். அதுபோல ஒரு பாடலை முதலிலிருந்து நோக்கினாலும் முடிவிலிருந்து நோக்கினாலும் அதே எழுத்துகள் அமைந்த பாடலாக மாலைமாற்று அமையும். ஆங்கிலத்தில் PALINDROME என்னும் வடிவமும் இத்தகையது என்று ஒருவாறு கூறலாம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359





**எழுதிப்பழகுக**



தேரு வருதே நீ வா பாப்பா
பாப்பா வா நீ தேரு வருதே

மாமா நீ வா மாமா
மாமா வா நீ மாமா

## உடன்பட்டும் மறுத்தும் பேசுக

### ஆங்கிலேயர் வருகை (உடன்படல்)

ஆங்கிலேயர் வருகையால் இந்தியா முழுவதும் இரயில் பாதைகள் அமைக்கப்பட்டன. தொலைத்தொடர்பு வசதி அவர்களாலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. நமது நாட்டின் மிகப்பெரிய அலுவலகக் கட்டடங்கள் அவர்கள் கட்டுமானத்தால் ஆனவையே. மேலும், நமது தொழில்துறையை மேம்படுத்தியதும் அவர்களே. அவர்க்ளின் காலம், வளர்ச்சிப் படிநிலையின் விடியற்காலம்.

### ஆங்கிலேயர் வருகை (மறுத்தல்)

ஆங்கிலேயர் இந்தியாவில் இரயில் பாதைகளைத் துறைமுகங்களோடு இணைத்து அதன் வழியாக நமது அரிய செல்வங்களையும் உற்பத்திப் பொருள்களையும் பிரிட்டனுக்குக் கொண்டு சென்றது அவர்கள் வாழ்வை மேம்படுத்திக் கொள்வதற்காகவே. தொலைத்தொடர்பு வசதிகளையும் பெரிய கட்டடங்களையும் இந்தியர்களுக்காகச் செய்து கொடுக்கவில்லை. அவர்களின் ஆட்சிமுறைத் தேவைகளுக்காகவே செய்து கொண்டனர். எனவே, ஆங்கிலேயர் நம்மை ஆட்சி செய்த காலம் நம்மை நாமே தொலைத்திருந்த இருள்காலம்.

மேலும்,

- தொழில்நுட்பத்தால் விளைந்தது வளர்ச்சியே! வீழ்ச்சியே,
- தற்போதைய உணவுமுறை நல்வாழ்வை வளர்க்கிறது / குறைக்கிறது.
- தமிழர்கள் பண்பாட்டைத் தக்க வைத்திருக்கிறார்கள்/ தள்ளி வைத்திருக்கிறார்கள் ஆகிய தலைப்புகளில் பேசவும் எழுதவும் செய்க.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**1. தொழில்நுட்பத்தால் விளைந்தது வளர்ச்சியே! வீழ்ச்சியே,**

- தொழில்நுட்பம் வளர்ந்ததால் மின்விசை கருவிகள் மூலம் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து தேவையான நீரைப் பெற முடிகிறது. போக்குவரத்து வசதிகள் பெருகி உள்ளன. உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளோம். மக்களின் சுமையைக் குறைக்கிறது.
- தொழில்நுட்பம் பெருகியதால் சிற்றூர்கள் அழிந்தன. பேரூர்கள் பெருகின. தொழிற்பேட்டைகள் வளர்ந்தன.எரிபொருளுக்காகக் காடுகளை அழித்தனர். விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் உரங்களும் பூச்சிக்கொல்லிகளும் பயிர் வளர்ச்சிக்கு உதவினாலும் உணவுப் பொருள்களினூடே கலந்து பற்பல நோய் உண்டாகக் காரணமாகின்றன. பாலித்தீன் பைகளால் நிலத்தடி நீர்ப் பாதுகாப்பும் மண்வளமும் பாதிப்பை அடைகின்றன. உலக உயிரின வீழ்ச்சிக்கு அடிப்படையே தொழில்நுட்ப வளர்ச்சிதான் என்பதை நிறுவ எத்தனையோ சான்றுகளைத் தரலாம்.

---

**2. தற்போதைய உணவு முறை நல்வாழ்வை வளர்கிறது / குறைக்கிறது.**

- உயிர் வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாதது இன்றைய நிலையில் விரைவாகச் செயல்பட வேண்டியது இன்றியமையாததாக உள்ளது. தற்போது தயாரிக்கப்படும் உணவுகளின் வகைகள் தரமாக, சரிவிகித, சத்துள்ளதாக இருப்பதால் மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். சிற்றுண்டிகள் சுவையானதாகவும், தரம் உள்ளதாகவும் இருக்கின்றன. உழைப்பு பெருகவும், விரைந்து செயல்படவும், நம் வாழ்வை எளிமையாக்கவும் இன்றைய உணவுப் பழக்கம் சிறப்பானதாக உள்ளது.
- உயிர் வாழ்க்கைக்கு மட்டுமல்ல நோயற்ற வாழ்வுக்கும் உணவு இன்றியமையாததாகிறது. நம் வீட்டில் சமைக்கும் உணவில் சத்துப் பொருட்கள் சரிவிகிதத்தில் இடம் பெறுகின்றன. விரைவு உணவகங்களில் விற்கப்படும் உணவு வகைகளில் மனத்திற்காகவும் சுவைக்காகவும் சேர்க்கப்படுகின்ற வேதிப்பொருட்கள் உடலுக்கு ஊறு விளைவிக்கும். துரித உணவு வகைகளில் பயன்படுத்தப்படுவது சுத்தம் செய்யப்படாத எண்ணெய் ஆகும். நொறுக்குத் தீனி செய்யப் பயன்படும் எண்ணெய் அடிக்கடி மாற்றாமல் பயன்படுத்துவதால், சுகாதாரக் குறைவு ஏற்படும் .எனவே, இன்றைய நிலையில் கடைப்பிடிக்கப்படும் உணவுமுறை நல்வாழ்வை வளர்ப்பதாக இல்லை. குறைப்பதாகவே உள்ளது.

---

**3. தமிழர்கள் பண்பாட்டைத் தக்க வைத்திருக்கிறார்கள் / தள்ளி வைத்திருக்கிறார்கள்.**

- தமிழர்களின் பண்பாடு தொன்மையானது பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வந்து கொண்டிருப்பது உண்ணும் உணவில் இன்னும் தமிழர்கள் பழமையையே உண்டு மகிழ்ந்தனர். இறை வழிபாட்டிலும் இன்னும் மிகுந்த பக்தி உடையவர்களாகவே இருக்கின்றனர். மருத்துவத்திலும் மூலிகை மருத்துவம், பாட்டி வைத்தியம் இன்னும் கை கொடுக்கின்றது. விருந்தோம்பலில் இன்னும் உபசரிப்பில் துளியளவேனும் குறைவில்லாமல் நடந்தேறுகிறது. வேலை, தொழில் எனப் பல்வேறு காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டியநிலை ஏற்பட்டாலும், மொழியையும் பண்பாட்டையும் மறவாமல் கடைப்பிடித்துக் கொண்டுதானே வருகிறார்கள். இந்த வகையில் தமிழர்கள் பண்பாட்டைத் தக்க வைத்திருக்கிறார்கள் என்றுதான் கூற வேண்டும்.
- உடை உடுத்துவதிலும், உண்ணும் உணவிலும் மேலை நாடுகளின் விரும்பிகளாக மாறியுள்ளனர். பாரம்பரிய விவசாயம் மறைந்து தொழில்களிலே ஆர்வம் கொண்டுள்ளனர். கூட்டுக் குடும்ப வாழ்க்கை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



மறைந்து தனிக்குடித்தனமாகி உறவுகள் நலிந்துவிட்டன. தங்கள் பண்பாட்டைத் தள்ளிவைத்து, அன்னிய மோகத்தில் மிதந்து கொண்டிருக்கின்றனர் என்பதே உண்மை.

## நிற்க அதற்குத் தக

| வேலைகள் | ஆண் | பெண் | இருவரும் | ஆண் / பெண் ஏதேனும் ஒன்றை மட்டும் தேர்வு செய்தால் அதற்கான காரணத்தை எழுதுக. |
|---|---|---|---|---|
| பூத்தொடுத்தல் | ~ | ~ | ✓ | ~ |
| கணினியில் பணி | ~ | ~ | ✓ | ~ |
| காவலர் | ~ | ~ | ✓ | ~ |
| சமைப்பது | ~ | ~ | ✓ | ~ |
| மருத்துவம் | ~ | ~ | ✓ | ~ |
| வழக்கறிஞர் | ~ | ~ | ✓ | ~ |
| வீட்டின் தூய்மை | ~ | ~ | ✓ | ~ |
| தொழில் முனைவோர் | ~ | ~ | ✓ | ~ |

## கலைச்சொல் அறிவோம்

இனக்குழு - Ethnic Group
புவிச்சூழல் - Earth Environment
வேர்ச்சொல் அகராதி - Etymological Dictionary
முன்னொட்டு - Prefix ஜூன் - 2019 ஆக - 2022
பின்னொட்டு - Suffix
பண்பாட்டுக்கூறுகள் - Cultural Elements



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



வாழ்வியல்

இயல் 3

# திருக்குறள்

## சிறப்பு

| பால் | அதிகாரம் | இயல் | இயல்களின் பெயர்கள் |
|---|---|---|---|
| அறம் | 38 | 4 | பாயிரவியல் 04, இல்லறவியல் 20, துறவறவியல் 13, ஊழியல் 01 |
| பொருள் | 70 | 3 | அரசு இயல் 25, அமைச்சு இயல் 32, ஒழியியல் 13 |
| இன்பம் | 25 | 2 | களவியல் 07, கற்பியல் 18 |

## நூல்வெளி

- திருக்குறள், உலகப் பொதுமறை என்று போற்றப்படும் தமிழ் இலக்கியமாகும். இஃது உலக மக்கள் அனைவருக்கும், எந்தக் காலத்திற்கும் எவ்வகையிலும் பொருந்தும் வகையில் அமைந்தமையால் அவ்வாறு போற்றப்படுகிறது. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படும் வாழ்வியல் நூல்; 1330 குறள்பாக்களால் ஆனது.
- உலகப்பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, முப்பால், உத்தரவேதம், தெய்வநூல் எனப் பல பெயர்களாலும் திருக்குறள் அழைக்கப்படுகிறது. இப்பாடல்கள் அனைத்தும் குறள் வெண்பா என்னும் பா வகையால் ஆனவை. பாவின் வகையைத் தன் பெயராகக் கொண்டு உயர்வு விகுதியாகத் திரு என்னும் அடைமொழியுடன் திருக்குறள் என்று அழைக்கப்படுகிறது. ஏழு சீர்களில் வாழ்வியல் நெறிகளைப் பேசும் இந்நூல் உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- திருக்குறளுக்குப் பத்துப் பேருடைய உரை இருப்பதாகப் பழம்பாடல் ஒன்று கூறுகிறது. அவர்கள் பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர், பரிதி, பரிப்பெருமாள், தருமர், தாமத்தர், நச்சர், திருமலையர், மல்லர் ஆகியோர். நாளது வரையிலும் பலர் உரை எழுதும் சிறப்புப் பெற்றது இந்நூல். திருக்குறளின் சிறப்பினை விளக்கப் புலவர் பாடிய பாடல்களின் தொகுப்பு நூலே திருவள்ளுவ மாலை.
- தேவர், நாயனர், தெய்வப்புலவர், செந்நாப்போதர், பெருநாவலர், பொய்யில் புலவர், பொய்யாமொழிப் புலவர், மாதானுபங்கி, முதற்பாவலர் என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படும் திருவள்ளுவரைப் பற்றிய அறுதியான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## கற்பவை கற்றபின்

**1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.**



அ) வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

ஆ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

**விடை: இ) நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.**

**2. துன்பப்படுபவர் __________** மே - 2022

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்

இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர் **விடை: ஈ) நாவைக் காக்காதவர்**

**3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் - நிலமிசைத்
துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினார் இவ்வுலகத் தில்.

அ) ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.

ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

இ) அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

**விடை: ஆ) நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.**

**4. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க.**

பூக்களுக்கும் முட்களுக்கும் இடையில்
புழுங்குகிறது யோசனை
பாசத்துக்கும் நியாயத்துக்கும் நடுவில்
நசுங்குகிறது அறம்
இன்பத்துக்கும் பேராசைக்கும் நடக்கும்
போராட்டத்தில் வெடிக்கின்றன



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



வெளியில் குண்டுகளும்

வீட்டில் சண்டைகளும் ....

ஆசை அறுத்தல் எளிதல்ல!

முயன்று பார்க்கலாம் வா!

அ) அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

ஆ) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்

இ) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்

**விடை: இ) இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்**

**5. ஒப்புரவு என்பதன் பொருள் __________** மே - 2022

அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது

இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது **விடை: இ) ஊருக்கு உதவுவது**

**6. பொருத்துக**

அ) வாழ்பவன் - i) காத்திருப்பவன்

ஆ) வாழாதவன் - ii) மருந்தாகும் மரமானவன்

இ) தோன்றுபவன் - iii) ஒத்ததறிபவன்

ஈ) வெல்ல நினைப்பவன் - iv) இசையொழித்தவன்

உ) பெரும் பண்புடையவன் - v) வீழ்பவன் **விடை: அ) - iii, ஆ) - v, இ) - iv, ஈ) - i, உ) - ii.**

**7. இலக்கணக் குறிப்புத் தருக.**

அ) சுடச்சுடரும் ஆ) சுடச்சுடரும் பொன் இ) சுடச்சுட

**விடை:**

அ) சுடச்சுடரும் - மூன்றாம் வேற்றுமைத் தொகை

ஆ) சுடச்சுடரும் பொன் - எதிர்காலப் பெயரெச்சத் தொடர்

இ) சுடச்சுட - அடுக்குத்தொடர்

**8. விரைந்து கெடுபவன் யார்?** மார்ச் - 2023

அ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

ஆ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்

இ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்

ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்

**விடை: ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைப்பவன்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**9. வேளாண்மை செய்தற் பொருட்டு** - பொருள் கூறுக.

**விடை: உதவி செய்வதற்காக ஆகும்**

**10. பற்று நீங்கியவனுக்கு உண்டாவது - பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது**

அ) பற்றுகள் பெருகும் - பொருள்களின் இன்பம் பெருகும்

ஆ) பற்றுகள் அகலும் - பொருள்களின் துன்பம் அகலும்

இ) பொருள்களின் துன்பம் அகலும் - பற்றுகள் அகலும்

ஈ) பொருள்களின் இன்பம் பெருகும் - பற்றுகள் பெருகும்

**விடை: இ) பொருள்களின் துன்பம் அகலும் - பற்றுகள் அகலும்**

**11. அருவினை - புணர்ச்சி விதி கூறுக.** ஜூன் - 2019

- ❖ அருவினை = அருமை + வினை
- ❖ "ஈறு போதல்" என்னும் விதிப்படி நிலைமொழி ஈற்று "மை" விகுதி கெட்டு "அருவினை" எனப் புணர்ந்தது.

## பாடநூல் வினாக்கள்

### குறுவினாக்கள்

**1. தீயினால் சுட்டதைப் புண் என்றும் நாவினால் சுட்டதை வடு என்றும் வள்ளுவம் கூறுவது ஏன்?**

- ❖ தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு உண்டானாலும் உள்ளே ஆறிவிடும்.
- ❖ நாவினால் சுட்ட புண்ணால் உடலின் புறத்தே வடு உண்டாகவிட்டாலும் உள்ளே ஆறாது.

**2. "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்" - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.**

**உவமை:**

- ❖ "மருந்தாகித் தப்பா மரம்" மருந்துமரம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தருவதைப் போன்றது.

**உவம உருபு:**

- ❖ அற்று (போன்றது) உவமேயம் பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம்

**பொருள்:**

மருந்துமரம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தருவனவை போன்று பெருந்தகையாளனிடம் உள்ள செல்வமானது அனைவருக்கும் பயன்படும்.

**3. எதற்கு முன் நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும் என்றுகுறள்கூறுகிறது?**

**நிலையாமை:**

நம் உயிர் நிலையற்றது. எனவே, நாக்கு அடைத்து, விக்கல் வந்து, உயிருக்கு இறுதி வரும் முன், நல்ல செயல்களை விரைந்து செய்ய வேண்டும்.

**4. சீர்தூக்கி ஆராயவேண்டிய ஆற்றல்கள் யாவை?** அ.மா.தே. 23 | மார்ச் - 2023 | செப் - 2020

- ❖ செயலின் வலிமை
- ❖ தன் வலிமை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



- ❖ பகைவன் வலிமை
- ❖ துணையாளர் வலிமை.

**5. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?** மே - 2022

மருந்து - செல்வம்

மருந்துமரம் இருப்பவர் - பெருந்தகையாளர்.

## சிறுவினாக்கள்

**1. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே** அ.மா.தே. 23 | மார்ச் - 2023 | மார்ச் - 2020

**நாவினால் சுட்ட வடு - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

**குறள்:**

"தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு"

**அணி சுட்டல்:**

இக்குறட்பாவில் பயின்று வரும் அணி வேற்றுமை அணி.

**இலக்கணம்:**

முதலில் இரு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறிப் பின்னர் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் கூறுவது வேற்றுமை அணி ஆகும்.

**பொருள்:**

தீயினால் சுட்டபுண் உடலில் விரைந்து ஆறாவிட்டாலும், உள்ளத்தில் ஆறிவிடும். ஆனால், நாவினால் சுட்டபுண் உள்ளத்தில் நீங்காத தழும்பை உண்டாக்கி விடும்.தீ உடலைச் சுடும்.

**அணிப் பொருத்தம்:**

தீயும் தீய சொல்லும் சுடும் தன்மையால் ஒற்றுமை உடையன. தீப்புண் ஆறும் தீய வார்த்தை ஆறாது. இவ்வாறு முதலில் ஒற்றுமையைக் கூறிப் பின் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் கூறியுள்ளதால் இக்குறளில் வேற்றுமையணி இடம்பெற்றுள்ளது.

**2. புகழுக்குரிய பண்புகளாக நீவீர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறைவழி நின்று கூறுக.**

**புகழுக்குரிய பண்புகள்:** மே - 2022

- ❖ புகழுக்குரிய பண்புகளாய் நான் கருதுவன, அன்பு, அறம், ஆன்மீகம் .
- ❖ அன்பால் அறம் செய்தல் வேண்டும்.
- ❖ அறம் செய்கின்றபோது கடவுள் நிலைக்குச் செல்கிறோம்.

**புகழின் பெருமைகள்:**

- ❖ தோன்றினால் புகழ்தரும் பண்போடு உடன் தோன்ற வேண்டும். இல்லையெனில் தோன்றாமல் இருப்பதே நல்லது.

**"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"**

- ❖ வழியில்லாமல் வாழ்பவரே வாழ்வார், புகழில்லாமல் வாழ்பவர் வாழாதவராவார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**"வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய**
**வாழ்வாரே வாழா தவர்"** - என்கிறார் திருவள்ளுவர்.

**3. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யப் படும் - இக்குறட்பாவை அலகிட்டு வாய்ப்பாடு கூறுக.**

| வரிசை எண் | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| 1. | நாச்/சென்/று | நே நே நே | தேமாங்காய் |
| 2. | விக்/குள்/மேல் | நே நே நே | தேமாங்காய் |
| 3. | வா/ரா/முன் | நே நே நே | தேமாங்காய் |
| 4. | நல்/வினை | நே திரை | கூவிளம் |
| 5. | மேற்/சென்/று | நே நே நே | தேமாங்காய் |
| 6. | செய்/யப் | நே நே | தேமா |
| 7. | படும் | நிரை | மலர் |

இக்குறட்பாவில் "மலர்" என்னும் வாய்ப்பாட்டால் முடிந்துள்ளது.

**4. சொற்பொருள் பின்வருநிலையணியை விலக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.**

ஆக - 2022

**"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்".**

**குறள்:**

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்"

**அணி சுட்டல்:**

இக்குறட்பாவில் பயின்று வரும் அணி "சொற்பொருள் பின்வருநிலையணி" ஆகும்.

**அணி இலக்கணம்:**

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல் பலமுறை வந்து ஒரே பொருளைத் தருவது சொற்பொருள் பின்வருநிலை அணி ஆகும்.

**அணிப்பொருத்தம்:**

இக்குறளில் "வலிமை" என்னும் பொருளில்,முதலில் வந்த "வலி" என்னும் சொல், அதே பொருளில் பின்னர்ப் பலமுறை வந்தமையால், இக்குறள் சொற்பொருள் பின்வருநிலை அணி ஆயிற்று.

**பொருள்:**

ஒரு செயலைச் செய்யத் தொடங்கும் முன், அந்தச் செயலின் வலிமையும், தன் வலிமையும், பகைவனின் வலிமையும், துணையாளர் வலிமையும் பற்றிச் சீர்தூக்கி ஆராய்தல் வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



**5. விரும்பியதை அடைவது எப்படி? குறள் வழி விளக்குக.** மார்ச் - 2023

**விரும்பியதை அடைதல்:**

விரும்பியதை விரும்பியவாறே பெற முடியும் என்பதால் செய்ய முடிந்த தவத்தை இங்கேயே முயன்று பார்க்கலாம்.

**"வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்**
**ஈண்டு முயலப் படும்"**

**ஞானம் வளரும்:**

புடமிடச் சுடுகையில் ஒளிவிடும் பொன் போலத் தவமிருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ஞானம் வளரும்.

**"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்**
**சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"**

---

## நெடுவினா

**1. கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.**

**முன்னுரை:**

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளில் அறத்துப்பால், இல்லறவியல் 22 ஆவது அதிகாரம் ஒப்புரவறிதல் அமைந்துள்ளது. இதில், கைம்மாறு கருதாமல் பிறருக்கு உதவுதலின் சிறப்பு, ஒப்புரவாளனது செல்வம் அனைவர்க்கும் பயன்படும் தன்மை பற்றிக் கூறப்பட்டுள்ளது பின்வருமாறு காணலாம்.

**விடாமுயற்சியால் ஈட்டிய பொருள்:**

ஒருவரிடம் முயற்சி செய்து ஈட்டிய பொருளெல்லாம் தகுதி உடையவருக்கு உதவி செய்வதற்கே ஆகும்.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு"

**உயிர் வாழ்பவன்:**

உயர்ந்தாரின் உலக நடைமுறையோடு ஒத்துப் போகிறவனே உயிர் வாழ்பவன். மற்றவன் செத்தவர்களுள் ஒருவனாகவே மதிக்கப்படுவான்.

"ஒத்த அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"

**பெருந்தகையாளனின் செல்வம்:**

பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாக மக்களுக்கு தரும். மனம் போன்றவன் மரத்தைப் போன்றவன்.

"மருந்தாகித் தப்பாமரத் தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்"

**முடிவுரை:**

கொடையில் சிறந்து விளங்க ஒப்புரவு போன்ற அறச்செயல்களைச் செய்வதே சிறப்பான வாழ்வாகும். கைம்மாறு கருதாமல் மழையைத் தரும் மேகம் போல, ஒப்புரவாளன் தன் செல்வம் மூலம் பிறர்க்கு உதவி செய்து வாழ்வதைப் போன்றதாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**2. "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.** மே - 2022 மார்ச் - 2023

**முன்னுரை:**

நம் மனம், மொழி, மெய் போன்ற புலன்களின் அடக்கத்தைப் பற்றியும், அடக்கத்தால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும் பின்வருமாறு காணலாம்.

**அடக்கமுடைமை:**

நேர்வழி மாறாது அடக்கமாய் இருப்பவனின் உயர்வு மழையின் மாண்பைக் காட்டிலும் பெரியது.

"நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது".

**நாவடக்கம்:**

எதைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்க வேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சொற்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.

"யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

**தீயினால் புண், நாவினால் வடு:**

தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு உண்டானாலும் உள்ளே ஆறிவிடும். நாவினால் சுட்ட புண்ணால் உடலின் புறத்தில் வடு உண்டாகவிட்டாலும் உள்ளே ஆறாது.

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு"

**முடிவுரை:**

இவ்வாறு, நேர்மை வழி மாறாது நடத்தல் பணிவு மிக்கவராக ஒழுகுதல் நாவினைக் காத்தல் நாவினால் பிறரை துன்புறுத்தாமை என்னும் இத்தகைய அடக்கமுடைமையே ஒருவனை வாழ்வினில் உயர்த்தும் என்பது முப்பாலில் வழக்காகும்.

## கூடுதல் வினாக்கள்

### கோடிட்ட இடத்தை நிரப்புக

1. உலகப் பொதுமறை என்று போற்றப்படுவது ________ **விடை: திருக்குறள்**
2. "தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
   நாவினால் சுட்ட வடு" இக்குறட்பாவில் பயின்று வரும் அணி ________ **விடை: வேற்றுமை அணி**
3. "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
   பெருந்தகை யான்கண் படின்" இக்குறட்பாவில் பயின்று வரும் அணி ________
   **விடை : உவமையணி**
4. "சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
   சுடச்சுட நோற்கிற் பவர்க்கு" - இக்குறட்பாவில் பயின்று வரும் அணி ________
   **விடை: உவமை அணி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



5. "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" - இக்குறட்பாவில் பயின்று வரும் அணி ________ **விடை: சொல் பின்வருநிலையணி**

6. "பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்" - இக்குறட்பாவில் பயின்று வரும் அணி ________ **விடை: பிறிதுமொழிதல் அணி**

7. பொருட்பாலில் இடம்பெறும் இயல்கள் ________ **விடை: அரசியல், அமைச்சு இயல், ஒழிபியல்**

8. திருக்குறள் ________ நூல்களில் ஒன்று. **விடை: பதினெண் கீழ்க்கணக்கு**

9. திருக்குறள் ________ என்னும் பா வகையால் ஆனவை. **விடை: குறள் வெண்பா**

10. ஏழு சீர்களில் வாழ்வியல் நெறிகளைப் பேசும் நூல் ________ விடை: திருக்குறள்

11. திருக்குறளின் சிறப்பினை விளக்கப் புலவர் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு நூல் ________
**விடை: திருவள்ளுவமாலை**

12. "நாயனார்" என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர் ________ **விடை: திருவள்ளுவர்**

13. உலக நடைமுறைகளோடு ஒத்துப் போகிறவனே ________ விடை: உயிர் வாழ்பவன்

14. பெருந்தகையாளனிடம் உள்ள செல்வத்திற்கு வள்ளுவர் கூறும் உவமை ________
**விடை: மருந்து மரம்**

15. பொருத்திக் காட்டுக:

அ) அறத்துப்பால் - 1) 70 அதிகாரங்கள்
ஆ) பொருட்பால் - 2) 25 அதிகாரங்கள்
இ) இன்பத்துப்பால் - 3) 38 அதிகாரங்கள் **விடை: அ) 3 ஆ)1 இ) 2**

16. பொருத்திக் காட்டுக:

அ)அறத்துப்பால் - 1) 3 இயல்கள்
ஆ)பொருட்பால் - 2) 2 இயல்கள்
இ)இன்பத்துப்பால் - 3) 4 இயல்கள் **விடை: அ) 3 ஆ) 1 இ) 2**

17. ஒருவர் எதைக் காக்கா விட்டாலும் காக்க வேண்டியது ________ **விடை: நாவை**

18. தவமிருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ________ வளரும். **விடை: ஞானம்**

19. திருக்குறளில் உள்ள இயல்கள் ________ **விடை: 9**

## குறுவினாக்கள்

**1. உயிர் வாழ்வார், செத்தார்- எவர் எவர்?**

உலக நடைமுறையோடு பொருந்தி ஒத்து வாழ்பவரே உயிர் வாழ்பவராவார். அவ்வாறு வாழாதவர் செத்தவராவார்.

**2. வாழ்வார், வாழாதவர் எவர் எவர் என வள்ளுவர் கூறுகிறார்?**

பழி இல்லாமல் வாழ்பவரே வாழ்பவராவார் புகழ் இல்லாமல் வாழ்பவர், வாழாதவராவார் என, வள்ளுவர் கூறுகிறார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**3. விரைந்து கெடுபவன் யார்?**

மற்றவருடன் ஒத்துப் போகாதவனும், தன் வலிமையை அறியாதவனும், தன்னைப் பெரிதாக நினைப்பவனும் விரைவாகக் கெடுவான்.

**4. எதைக் காக்க வேண்டும்? ஏன்?**

ஒருவர் எதைக் காக்கா விட்டாலும் நாவைக் காக்க வேண்டும். அவ்வாறு காக்கா விட்டால், சொல் குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.

**5. உலகத்தில் நிலைத்து நிற்பது எது?**

இணையற்ற உயர்ந்த புகழைப் போல் உலகத்தில் ஒப்பற்ற ஒன்றாக நிலைத்து நிற்பது வேறு ஒன்றும் இல்லை.

**6. ஞானம் எப்போது வளரும்?**

புடமிடச் சுடுகையில் ஒளிவிடும் பொன்போலத் தவமிருப்பவரைத் துன்பம் வருத்த வருத்த ஞானம் வளரும்.

**7. ஞாலம் கருதினும் கைகூடும் எப்போது?**

உரிய காலத்தில், பொருத்தமான இடத்தில், ஒரு செயலைச் செய்தால் உலகத்தையே பெறக் கருதினாலும் கிடைத்துவிடும்.

**8. தவம் செய்வார்க்குரிய தகுதிகள் யாவை?**

- தவம் செய்பவர் தம் ஐம்புலன்களை அடக்க வேண்டும்.
- பிற உயிர்களுக்குத் துன்பம் நிகழாதவாறு நடந்து கொள்ள வேண்டும்.
- தமக்கு ஏற்படும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். இவையே தவம் செய்வார்க்குரிய தகுதிகளாகும்.

**9. திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**

- முப்பால்
- தமிழ்மறை
- பொய்யாமொழி
- வாயுறை வாழ்த்து
- உத்தர வேதம்
- உலகப் பொதுமறை
- தெய்வநூல்

**10. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**

- நாயனார்
- தேவர்
- முதற்பாவலர்
- செந்நாப்போதார்
- பெருநாவலர்
- பொய்யில் புலவர்
- மாதானுபங்கி
- நான்முகனார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## சிறுவினாக்கள்

**1. உவமை அணியைச் சான்று தந்து விளக்குக.** செப் - 2020 | அ.மா.தே. 23 | ஜூன் - 2019

**அணி இலக்கணம்:**

உவமைக்கும் உவமேயத்திற்கும் இடையில் உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி எனப்படும்.

**சான்று:**

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்"

**பொருள்:**

பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரத்தைப் போன்றதாகும்.

**பொருத்தம்:**

**உவமை:** மருந்தாகித்தப்பா மரம்

**உவமேயம்:** பெருந்தகையாளனின் செல்வம்

**உவம உருபு:** அற்று

பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தருவது போன்றதாகும். இவ்வாறு உவமை ஒரு தொடராகவும், உவமேயம் மற்றொரு தொடராகவும் வந்து, உவம உருபு வெளிப்படையாக வந்துள்ளதால் இக்குறட்பா உவமை அணியாயிற்று.

---

**2. சொல் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக.** செப் - 2020 | அ.மா.தே. 23 | ஜூன் - 2019 | மார்ச் - 2023

**அணி இலக்கணம்:**

செய்யுளில் ஒரு சொல் பலமுறை வந்து வெவ்வேறு பொருளைத் தருவது சொல் பின்வருநிலையணி எனப்படும்.

**சான்று:**

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

**பொருள்:**

பற்றுகளை அகற்றுவதற்காகவே பற்றில்லாதவனைப் பற்றி நிற்க வேண்டும்.

**பொருத்தம்:**

இப்பாடலில் "பற்று" என்ற சொல் பலமுறை வந்து பின்பற்றுதல், ஆசை இல்லாதவன், நட்பு, ஆசை என்று வேறு வேறு பொருட்களைத் தந்துள்ளதால், இக்குறட்பாவில் சொல் பின்வருநிலையணி பயின்று வந்துள்ளது.

---

**3. பிறிதுமொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக. (அல்லது) ஒட்டணியைச் சான்றுடன் விளக்குக.** மார்ச் - 2019

**அணி இலக்கணம்:**

செய்யுளில் உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது பிறிதுமொழிதல் அணி அல்லது ஒட்டணி எனப்படும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**சான்று:**

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்"

**பொருள்:**

மென்மையான மயிலிறகுதான் என்றாலும், அளவுக்கு மிகுதியாக வண்டியில் ஏற்றினால், வண்டியின் அச்சு முறிந்து விடும்.

**பொருத்தம்:**

மிக மென்மையான மயிலிறகாயினும் அளவுக்கு மீறி வண்டியில் ஏற்றினால் அச்சு முறிந்து விடும். அதுபோல, வலிமையற்ற பலர் ஒன்றுகூடினால் வலிமை பொருந்திய ஒருவனை வீழ்த்தி விடலாம் என்று, உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைத்துள்ளதால் இப்பாடல் பிறிதுமொழிதல் அணியாயிற்று.

---

**4. திருக்குறள் - குறிப்பு வரைக.**

- ❖ உலகப்பொதுமறை என்று போற்றப்படும் நூல் திருக்குறள்.
- ❖ பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- ❖ 133 அதிகாரங்களையும், 1330 குறட்பாக்களையும் உடையது.
- ❖ அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால்களை உடையது.
- ❖ ஒன்பது இயல்களை உடையது.
- ❖ இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர் என அறியப்படுகிறது .
- ❖ வாயுரை வாழ்த்து, பொய்யாமொழி, முப்பால், உத்தரவேதம் முதலிய சிறப்புப் பெயர்களை உடையது இந்நூலாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## எங்கள் வெளியீடுகள்

| | |
|---|---|
| பெங்குயின் தமிழ் அமுது | Std : VI - XII |
| பெங்குயின் வினா-வங்கி | Std : X, XI, XII |
| English Guide & Work Book | Std : VI - XII |
| English Practice Book & Question Bank | Std : X, XI, XII |
| அறிவியல், சமூக அறிவியல் | Std : IX, X |

## ஆர்டர்கள் தொடர்புக்கு

8925612359 - 8643007972
7010414574 - 8248737898

# பெங்குயின் பப்ளிகேஷன்

62 - C ஆண்டாள்புரம், மாயாண்டிப்பட்டி தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர் 626 125, விருதுநகர் மாவட்டம்

89256 12359 86430 07972
7010414574 - 8248737898

penguinpub.2014@gmail.com
www.penguinbooks.in

விலை: ரு - 346

www.Padasalai.Net www.CBSEtips.in

# பெங்குயின்

புதிய வழியில் சிறந்த வழிகாட்டி

புதிய பதிப்பு

# தமிழ் அமுது

# வினா வங்கி

இலக்கு 100/100

11

பெங்குயின் பப்ளிகேஷன்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in

# பெங்குயின்

# தமிழ் அமுது

# 11

# வினா வங்கி

“ புதிய பாடத்திட்டத்தின் படி தயாரிக்கப்பட்டுள்ளது ”

பெங்குயின் பப்ளிகேஷன்ஸ்
ஸ்ரீவில்லிபுத்தூர்

விலை
ரூ.59/-

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in

# TO ORDERS

## SCHOOLS and TEACHERS

FOR ORDERS CONTACT 8925612359 8643007972 7010414574 8248737898

## STUDENTS

Books can be obtained through VPP

# PAYMENT METHOD

## DIRECT DEPOSIT

| | | |
|---|---|---|
| A/C Name | : | PENGUIN PUBLICATIONS |
| Our A/c No. | : | 328150050800129 |
| Bank Name | : | TAMIL NADU MERCANTILE BANK |
| IFSC | : | TMBL0000328 |
| Bank Brach | : | SRIVILLIPUTTUR. |

| | | |
|---|---|---|
| A/c Name | : | PENGUIN PUBLICATIONS |
| Our A/c No. | : | 39212649923 |
| Bank Name | : | STATE BANK OF INDIA |
| IFSC | : | SBIN0000921 |
| Bank Brach | : | SRIVILLIPUTTUR. |

**After Deposit, please call this no. 8925612359**

## MOBILE PAYMENTS

G Pay

8925612359

PENGUIN PUBLICATIONS

By Any Payment APP

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'PENGUIN PUBLICATIONS'** payable at **Srivilliputtur**

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in


| இயல் | அலகுத்தேர்வு | | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | **என்னுயிர் என்பேன்** | அலகுத் தேர்வு இயல் 1 | 1 |
| 2. | **மாமழை போற்றுதும்** | அலகுத் தேர்வு இயல் 2 | 2 |
| 3. | **பீடு பெற நில்** | அலகுத் தேர்வு இயல் 3 | 3 |
| 4. | **கேடில் விழுச்செல்வம்** | அலகுத் தேர்வு இயல் 5 | 4 |
| 5. | **நாளெல்லாம் வினைசெய்** | அலகுத் தேர்வு இயல் 6 | 6 |
| 6. | **பல்கலை நிறுவு** | அலகுத் தேர்வு இயல் 7 | 7 |
| 7. | **வையத் தலைமை கொள்** | அலகுத் தேர்வு இயல் 8 | 8 |
| 8. | **யாரையும் மதித்து வாழ்** | அலகுத் தேர்வு இயல் 10 | 10 |
| **வ. எண்** | **அரசுப் பொதுத் தேர்வு வினாக்கள்** | | |
| 1. | அரசு வினாத்தாள் - மார்ச் 2019 | | 9 |
| 2. | அரசு வினாத்தாள் - ஜூன் 2019 | | 11 |
| 3. | அரசு வினாத்தாள் - மார்ச் 2020 | | 13 |
| 4. | அரசு வினாத்தாள் - செப்டம்பர் 2020 | | 16 |
| 5. | அரசு வினாத்தாள் - மே 2022 | | 18 |
| 6. | அரசு வினாத்தாள் - ஆகஸ்ட் 2022 | | 20 |
| 7. | அரசு வினாத்தாள் - மார்ச் 2023 | | 23 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## இயல் - 1

## அலகுத் தேர்வு

மதிப்பெண்கள்: 50

**I. பலவுள் தெரிக** 1x10=10

1. பாயிரம் இல்லது ________ அன்றே.
   அ) காவியம் ஆ) பனுவல்
   இ) பாடல் ஈ) கவிதை
2. சு. வில்வரத்தினம் இயற்கை எய்திய இடம்.
   அ) யாழ்பாணம் ஆ) புங்குடு தீவு
   இ) சென்னை ஈ) கொழும்பு
3. நன்னூல் முதல் பதிப்பு யாது.
   அ) 1834 ஆ) 1634 இ) 1734 ஈ) 1934
4. புல்லின் இதழ்கள் என்ற நூலின் ஆசிரியர்.
   அ) மல்லார்மே ஆ) பாப்லோ நெரூடா
   இ) வால்ட் விட்மன் ஈ) பவணநதி முனிவர்
5. பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்" என்ற மொழிபெயர்ப்பு நூலுக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றவர்.
   அ) மல்லார்மே ஆ) பாப்லோ நெரூடா
   இ) வில்வரத்தினம் ஈ) இந்திரன்
6. பொருத்துக
   1. பேச்சுமொழியும் கவிதை மொழியும் - அ. முத்துலிங்கம்
   2. யுகத்தின் பாடல் - பவணந்திமுனிவர்
   3. நன்னூல் பாயிரம் - வில்வரத்தினம்
   4. ஆறாம் திணை - இந்திரன்
   அ) 4321 ஆ) 3421 இ) 4312 ஈ) 1234
7. மொழி இறுதி எழுத்துகள் யாவை?
   அ) 23 ஆ) 22 இ) 24 ஈ) 12
8. மாநகர் இலக்கணக்குறிப்பு தருக.
   அ) உரிச்சொல் தொடர் ஆ) வினைத்தொகை
   இ) செய்யுளிசையளபெடை ஈ) ஒற்றளபெடை
9. கனடாவில் மக்கள் வாழ்கிறார்கள்
   அ) இரண்டுலட்சம் ஆ) மூன்றுலட்சம்
   இ) ஆறுலட்சம் ஈ) ஏழுலட்சம்
10. மகாவித்துவான் பிறந்த ஊர்
    அ) யாழ்பாணம் ஆ) புங்குடுதீவு
    இ) கனடா ஈ) அதவத்தூர்

**II. குறுவினா (எவையேனும் மூன்றுக்கு விடை தருக)** 3x2= 6

11. பாயிரம் எதற்கு உதவுகிறது? பாயிரம் அறியும் கருத்துக்கள் யாவை?
12. இனம், மொழி குறித்த இரசூல்கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக?
13. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?
14. மலையாளக் கவிஞர் ஆற்றூர் ரவிவர்மாவின் கூற்று யாது?

**III. சிறுவினா (எவையேனும் இரண்டுக்கு விடை தருக)** 2x3= 6

15. சு. வில்வரத்தினம் பாடிய பல்லாண்டு வாழ்த்து தமிழ்த்தாய்க்கு எங்ஙனம் பொருந்துகிறது?
16. மொழி முதல் இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டு தருக.
17. பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?

**III. நெடுவினா (எவையேனும் ஒன்றுக்கு விடை தருக)** 1x6= 6

18. நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

    (அல்லது)

    தமிழர் வாழ்வோடும் புலம் பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கம் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது.

**IV. இலக்கணம்**

19. வைத்தார் - பகுபத உறுப்பிலக்கணம் தருக. (2)
20. அணிந்துரை புணர்ச்சி விதிகள் தருக. (3)

**V. மொழித்திறன் பயிற்சிகள்**

21. கலைச்சொல் அறிவோம்
    1. Aesthetic 2. Journalist 3. Art Critic (3)

**VI. தமிழாக்கம் தருக** 2x2=4

1. The pen is mightier than the sword.
2. A picture is worth a thousand words.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT : 8925612359 www.CBSEtips.in



# இயல் - 2

## அலகுத் தேர்வு

**மதிப்பெண்கள்: 50**

**I. பலவுள் தெரிக** 1x10=10

1. "தகப்பன் கொடி" என்ற நூலின் ஆசிரியர் யார்
   அ) அழகிய பெரியவன் ஆ) பேயனார்
   இ) பெருந்தேவனார் ஈ) திருவள்ளுவர்
2. இயற்கை முறையில் வேளாண்மை செய்தவர் யார்
   அ) நம்மாழ்வார் ஆ) ஆண்டாள்
   இ) பூதத்தாழ்வார் ஈ) பேயாழ்வார்
3. திருமலை முருகன் கூறும் நெல் வகைகள் யாது.
   அ) 18 ஆ) 19 இ) 21 ஈ) 20
4. "உழவு உலகிற்கு அச்சாணி" என்று கூறுபவர் யார்
   அ) திருவள்ளுவர் ஆ) பேயனார்
   இ) அழகிய பெரியவன் ஈ) பவணந்தி முனிவர்
5. ஐங்குறுநூறு பாடலின் ஆசிரியர் யார்
   அ) அழகிய பெரியவன் ஆ) பெரியவன் கவிராயர்
   இ) வில்வரத்தினம் ஈ) பேயனார்
6. பொருத்துக
   1. திருமலைச் சேவகன் - சிவபெருமான்
   2. தென்னாடுடையவன் - முருகன்
   3. குறிஞ்சி திணை - பேயனார்
   4. முல்லை திணை - கபிலர்
   அ) 2143 ஆ) 2413 இ) 1342 ஈ) 1234
7. உடனிலை மெய்ம் மயக்கத்திற்கு உதாரணம்
   அ) அங்கம் ஆ) அச்சம்
   இ) வந்தம் ஈ) பண்டம்
8. செங்கயல் - இலக்கணக்குறிப்பு தருக.
   அ) உரிச்சொல் தொடர் ஆ) அடுக்குத்தொடர்
   இ) செய்யுளிசையளபெடை ஈ) பண்புத்தொகை
9. யானை டாக்டர் என்ற குறும் புதினத்தின் ஆசிரியர் யார்
   அ) ஜெயமோகன் ஆ) சு. செல்லப்பா
   இ) வில்வரத்தினம் ஈ) பேயனார்
10. தமிழிசை இயக்கத்தின் தந்தை யார்
    அ) சலீம் அலி ஆ) ஆபிரகாம் பண்டிதர்
    இ) பெரியவன் கவிராயர் ஈ) சு. செல்லப்பா

**II. குறுவினா (எவையேனும் மூன்றுக்கு விடை தருக)** 3x2= 6

11. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக?
12. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
13. அலர்ந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக?
14. அழகிய பெரியவனின் சிறுகதைத் தொகுப்புகள் எவை?

**III. சிறுவினா (எவையேனும் இரண்டுக்கு விடை தருக)** 2x3= 6

15. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக?
16. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?
17. மெய்ம்மயக்கச் சொற்களை வகைப்படுத்துக.
    வாய்க்கால் வாழ்க வாழ்ந்த பாக்கம் சேர்தல் நார்ச்சத்து
    எச்சம் மார்கழி ஆழ்தல் மொத்தம் கப்பல் தாழ்ச்சி

**III. நெடுவினா (எவையேனும் ஒன்றுக்கு விடை தருக)** 1x6= 6

18. 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.

(அல்லது)

**எண்ணங்களை எழுத்தாக்குக:**



**V. இலக்கணம்**

19. அலர்ந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக. (2)
20. செங்கயல் - புணர்ச்சி விதிகள் தருக. (3)

**VI. மொழித்திறன் பயிற்சிகள் (பிறமொழிச் சொற்களைத் தமிழ்படுத்துக)**

21. 1. சங்கீதம் 2. வித்தியா 3. மகாஜனம்

**VII. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.** 2x2=4

1. கனை __ கணை __
2. வலி __ வழி __



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



# இயல் - 3

## அலகுத் தேர்வு

மதிப்பெண்கள்: 50

**I. பலவுள் தெரிக** 1x10=10

1. கூற்று - கோடு என்பது தமிழ்ச் சொல் ஆகும். விளக்கம் - கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண் கோட்டை என்னும் பொருள்களும் உண்டு
   அ) கூற்றும் சரி விளக்கமும் சரி
   ஆ) கூற்றும் சரி விளக்கம் தவறு
   இ) கூற்றும் தவறு விளக்கமும் தவறு
   ஈ) இரண்டும் சரி
2. காவடிச் சிந்துக்கு தந்தை என்று அழைக்கப்படுபவர் - யார்
   அ) நம்மாழ்வார் ஆ) திருவள்ளுவர்
   இ) அண்ணாமலையார் ஈ) வெள்ளிவீதியார்
3. தமிழ்நாட்டில் மட்டும் "மலை" என்ற சொல் - இடப்பெயர்களில் முன்னொட்டாகவும், இடப்பெயர்களில் பின்னொட்டாகவும் இடம் பெறுகின்றது.
   அ) 17, 84 ஆ) 17, 94 இ) 18, 84 ஈ) 18, 94
4. "சேயோன் மேய மைவரை உலகம்" என்று உரைப்பது
   அ) திருக்குறள் ஆ) தொல்காப்பியம்
   இ) குறுந்தொகை ஈ) கலித்தொகை
5. குறுந்தொகை பாடலின் ஆசிரியர் யார்
   அ) அண்ணாமலையார் ஆ) பெரியவன் கவிராயர்
   இ) இளம்பெருவழுதி ஈ) வெள்ளிவீதியார்
6. பொருத்துக
   1. வெள்ளிவீதியார் - புறநானூறு
   2. அண்ணாமலையார் - வாடிவாசல்
   3. சி.சு. செல்லப்பா - குறுந்தொகை
   4. இளம்பெருவழுதி - காவடிச் சிந்து
   அ) 3412 ஆ) 3421 இ) 4321 ஈ) 1234
7. புறநானூற்றில் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்ந்தவர் யார்
   அ) ஜி.யு. போப் ஆ) இளம்பெருவழுதி
   இ) வீரமாமுனிவர் ஈ) சி.சு. செல்லப்பா
8. பகுபத உறுப்புகள் - வகைப்படும்
   அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது
9. நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் யார்
   அ) ஜெயமோகன் ஆ) சு. செல்லப்பா
   இ) வில்வரத்தினம் ஈ) திருவள்ளுவர்
10. சி.வை. தாமோதரனார் பிறந்த ஊர்
    அ) யாழ்ப்பாணம் ஆ) சென்னை
    இ) புங்குடுதீவு ஈ) ஆதவதுூர்

**II. குறுவினா (எவையேனும் மூன்றுக்கு விடை தருக)** 3x2= 6

11. காவடிச் சிந்து என்பது யாது?
12. தமிழர்கள் புகழ், பழியை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
13. கோட்டை என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
14. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

**III. சிறுவினா (எவையேனும் இரண்டுக்கு விடை தருக)** 2x3= 6

15. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க?
16. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந்தகை யான்கண் படின் - இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.
17. காலம் காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்கு?

**III. நெடுவினா (எவையேனும் ஒன்றுக்கு விடை தருக)** 1x6= 6

18. காவடிச்சிந்து பாடலின் பொருள் விளக்கம் தருக.
    (அல்லது)
    வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**IV. மனப்பாடப் பாடல் எழுதுக.** 4+2=6

19. அம்ம வாழி தோழி எனத் தொடங்கும் குறுந்தொகை பாடல் எழுதுக.
20. பட்டு என முடியும் திருக்குறள் எழுதுக.

**V. மொழித்திறன் பயிற்சிகள்**

21. கலைச்சொல் அறிவோம்
    1. Prefix 2. Suffix 3. Cultural Elements (3)

**VI. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுது** (3)

22. கல்விக் கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.
23. தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்
24. சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்ட செய்தனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



## அரசு வினாத்தாள் - மே 2022

**மதிப்பெண்கள்: 90**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக 14x1=14**

1. பொருத்தமான இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்:
   i) முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
   ii) பவணந்தி முனிவர் - நன்னூல்
   iii) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை
   iv) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதைமொழியும்
   அ) (ii), (iv) ஆ) (i), (ii)
   இ) (i), (iii) ஈ) (i), (iv)
2. 'இனிதென' - இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகள்:
   அ) உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே, தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.
   ஆ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.
   இ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், முற்றும் அற்று ஒரே வழி.
   ஈ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.
3. துன்பப்படுபவர்:
   அ) பொருளைக் காக்காதவர்
   ஆ) தீக்காயம்பட்டவர்
   இ) நாவைக் காக்காதவர்
   ஈ) தீயினால் சுட்டவர்
4. ஒப்புரவு என்பதன் பொருள்:
   அ) ஊருக்கு உதவுவது ஆ) அடக்கமுடையது
   இ) செல்வமுடையது ஈ) பண்புடையது
5. சீறாப்புராணத்தின் ஆசிரியர்:
   அ) உமறுப்புலவர் ஆ) சீதக்காதி
   இ) கம்பர் ஈ) அம்மூவனார்
6. பொருத்துக.
   அ) விரியன் - i) தண்டை
   ஆ) திருகுமுருகு - ii) காலாழி
   இ) நாங்கூழ்ப்புழு - iii) சிலம்பு
   ஈ) குண்டலப்பூச்சி - iv) பாடகம்
   அ) 1 - iv , 2- iii, 3 - ii, 4 - i
   ஆ) 1 - iii, 2- iv, 3 - ii, 4 - i
   இ) 1 - iv , 2- i, 3 - iii, 4 - ii
   ஈ) 1 - iii, 2- i, 3 - iv, 4 - ii
7. ஆஸ்கர் விருது யாருக்கு வழங்கப்பட்டது?
   அ) ஏ.ஆர். இரகுமான் ஆ) பாரதிராஜா
   இ) சித்ரா ஈ) இளையராஜா
8. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல் மேல் உயிர் வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்:
   அ) நல்லாடை ஆ) மூதூர்
   இ) பைந்தளிர் ஈ) வெற்றிடம்
9. தவறான இணையைத் தேர்வு செய்க:
   அ) தமிழ் + உணர்வு - மெய் + உயிர்
   ஆ) மொழி + ஆளுமை - உயிர் + உயிர்
   இ) மண் + வளம் - மெய் + மெய்
   ஈ) கடல் + அலை - உயிர் + மெய்
10. யானை டாக்டர் என்னும் குறும் புதினத்தின் ஆசிரியர்:
    அ) ஜெயமோகன் ஆ) ஜானகிராமன்
    இ) சின்னப்பா ஈ) ஜெயராமன்
11. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று:
    அ) சிறுதேர் ஆ) சாழல்
    இ) சிறுபறை ஈ) சிற்றில்
12. மாநகர் என்பதன் இலக்கணக்குறிப்பு:
    அ) எண்ணும்மை ஆ) முற்றும்மை
    இ) உரிச்சொற்றொடர் ஈ) தொழிற்பெயர்
13. Book Review என்பதன் கலைச்சொல்:
    அ) புத்தக மதிப்புரை ஆ) ஏடு
    இ) பாடநூல் மதிப்புரை ஈ) புத்தகம்
14. பேச்சு என்பது மொழியில் .................
    அ) ஓடுவது ஆ) பறப்பது
    இ) மூழ்குவது ஈ) நீந்துவது

### பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3x2=6**

15. மருந்து எது? மருந்து மரமாக இருப்பவர் யார்?
16. 'ஒழுக்கமும் பொறையும் உனைப் போல் யார்க்குள்' - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?
17. 'ஊனமில் ஊக்கமும் ஒளிக் காய்த்தநல்
    தீன் எனுஞ் செல்வமே பகுத்த சேணகர்'
    - இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது? பழுத்தது எது?
18. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின
    - தொடரின் பொருள் யாது?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2x2=4**

19. ‘நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்’ என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.
20. ‘கோட்டை’ என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
21. ‘வரை’ என்னும் சொல் உணர்த்தும் பொருள்கள் யாவை?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14**

22. உயிர்முதல், மெய்ம்முதல் - எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்.
23. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.
    அ) செங்கயல் ஆ) இயைவதாயினும்
24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    i) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.
    ii) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.
25. பின்வரும் மங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
    தங்கை
27. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக.
    அ) Emotion ஆ) Mass Drill

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா:
உறுப்பிலக்கணம் தருக.
உண்டான்

28. விடைக்கேற்ற வினாவை எழுதுக.
    சி.சு. செல்லப்பா சிறுகதை, புதினம், விமர்சனம், கவிதை, மொழிபெயர்ப்பு முதலாக இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் பங்களிப்புச் செய்திருக்கிறார்.
29. மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளைத் தருக.
    அ) Dt ஆ) V’/
30. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    குமரனை பற்றித் தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

### பகுதி - III

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2x4=8**

31. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்கள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.
32. புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையைப் பொதுமறை வழிநின்று கூறுக.
33. “உயர்தமிழை உயிர் என்று போற்று மின்கள்” - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
34. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2x4=8**

35. ஜீவாவின் பேச்சு நடை குறித்து சுந்தரராமசாமி கூறுவன யாவை?
36. “மலை - மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது” என்பதை எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்.
37. “நேரடி மொழி” என்பதை நும் பாட வழி நின்று எழுதுக.
38. திராவிடர்களின் மலைக் குடியிருப்புகள் பற்றி எழுதுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3x4=12**

39. உருவக அணி (அல்லது) உவமையணியை விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.

    பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புலி
      பேணி வளர்த்திடும் ஈசன்:
    மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
      மாதர் அறிவைக் கெடுத்தார்
    கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
      காட்சி கெடுத்திட லாமோ?
    பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
      பேதமை யற்றிடும் காணீர்.

    - பாரதியார்

41. எழுத்து வடிவக் குறியீடுகளை வகைப்படுத்துக.
42. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
    (கம்பு, மை, வளை, மதி, இதழ், ஆழி)
    (அ) எலியும் நுழையும், எழிலரசி கையும் நுழையும்.
    (ஆ) அடிக்கவும் செய்யலாம்: கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம்.
    (இ) கண்ணிலும் எழுதலாம்: வெண்தாளிலும் எழுதலாம்.
    (ஈ) அறிவின் பெயரும் அதுதான். அம்புலியின் பெயரும் அதுவே தான்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**43. தமிழாக்கம் தருக.**

1. Looking at beauty in the world is the first step of purifying the mind.
2. Winners don't do different things, they do things differently.
3. A picture is worth a thousand words.
4. Education is the most powerful weapon, which you can use to change the world.

**43. காது கேளாதவர்களுக்கான மாற்றுவினா:**

"தமிழ்" என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர். "அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல்மொழி கவிதை என்பனவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. "தமிழ்கெழு கூடல்" என்றவிடத்திலும் "கலைப்புலமை" என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ்தழீஇய சாயலவர்" என்னும் இடத்து 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன. தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன "தமிழ் இவை பத்துமே". "மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்" என்பன எடுத்துக்காட்டுகளாகும்.முப்பது பாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ் மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

வினாக்கள்:

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனத்தில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.
4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?

### பகுதி - IV

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக 3x6=18**

44. அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்கவும்.

**(அல்லது)**

ஆ) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்வீர்கள் என்பதை விவரிக்கவும்.

**(அல்லது)**

ஆ) "இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன" - இக்கூற்றினை மெய்ப்பிக்கவும்.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றை தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

### பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6**

47. அ) 'சிற்றூரும்' - எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடல்.

ஆ) 'யான்' - என முடியும் குறளை எழுதுக.

## அரசு வினாத்தாள் - ஆகஸ்ட் 2022

**மதிப்பெண்கள்: 90**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக 14x1=14**

1. தமிழின் முதல் பா வடிவ நாடக நூல் ................
அ) இரகசிய வழி
ஆ) மனோன்மணீயம்
இ) தொகை விளக்கம்
ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

2. இறகுகளின் தொகுதி ............... எனப்படும்.
அ) பறவை ஆ) தோகை
இ) சிறகு ஈ) நிலம்

3. 'குயில்' என்னும் இலக்கிய இதழை நடத்தியவர் ..............
அ) சுரதா ஆ) வாணிதாசன்
இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

4. 'என் வாழ்வு என் கைகளில்' என்று நம்பியவர் ..................
அ) காந்தியடிகள் ஆ) ஜீவானந்தம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



இ) பிரபஞ்சன் ஈ) அண்ணாமலையார்

5. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து .............. நினை.
அ) முகக்குறிப்பை அறிந்தவரை
ஆ) எண்ணியதை எண்ணியவரை
இ) மறதியால் கெட்டவர்களை
ஈ) சொல்லேர் உழவரை

6. ஆசியாவிலேயே முதன்முதலில் ‘சிம்பொனி’ என்னும் மேற்கத்திய செவ்வியல் வடிவ இசைக் கோவையை உருவாக்கியவர் ..............
அ) எம்.எஸ். விஸ்வநாதன் ஆ) சங்கர் கணேஷ்
இ) ஏ.ஆர். இரகுமான் ஈ) இளையராஜா

7. Prefix என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்க் கலைச்சொல்லை எழுதுக.
அ) இனக்குழு ஆ) பின்னொட்டு
இ) முன்னொட்டு ஈ) புவிச்சூழல்

8. வேடம் போட்டவன் வேடதாரி; பட்டம் வாங்கினவன்?
அ) உளவாளி ஆ) பட்டதாரி
இ) வருமானம் ஈ) கொடையாள்

9. 1971 - ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற இலத்தீன் அமெரிக்காவின் மிகச் சிறந்த கவிஞர்:
அ) வால்ட் விட்மன் ஆ) ஆற்றூர் ரவிவர்மா
இ) ஸ்டெஃபான் மல்லார்மே ஈ) பாப்லோ நெருடா

10. ‘பெருங்கொடை’ என்ற சொல்லின் புணர்ச்சி விதி:
அ) ஆதிநீடல்
ஆ) ஈறுபோதல், இனமிகல்
இ) அடி அகரம் ஐ ஆதல்
ஈ) முன் நின்ற மெய் திரிதல்

11. பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக அமைந்த நூல்:
அ) திருவாசகம் ஆ) தேவாரம்
இ) திருவிசைப்பா ஈ) திருவருட்பா

12. குற்றாலக் குறவஞ்சி என்னும் நூலின் ஆசிரியர்:
அ) சுந்தரர் ஆ) தொல்காப்பியர்
இ) திரிகூடராசப்பக் கவிராயர் ஈ) சுந்தரம் பிள்ளை

13. உலகச் சிட்டுக் குருவிகள் நாள்:
அ) மார்ச் 8 ஆ) ஜூன் 6
இ) ஏப்ரல் 5 ஈ) மார்ச் 20

14. 2011 - ஆம் ஆண்டு கணினிப் பாடப்பிரிவு இளநிலைப் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற திருநங்கை:
அ) ஜோயிதா மோண்டல் மாகி
ஆ) செவ்வி நர்த்தகி நடராஜ்
இ) தாரிகா பானு
ஈ) பிரித்திகா யாஷினி

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3x2=6**

15. கண்காணி - குறிப்பு வரைக.
16. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
17. மதீனா நகரம் செம்மை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
18. திருச்சாழல் - குறிப்பு தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2x2=4**

19. இனம், மொழி குறித்து இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
20. மலை, குன்னு இவற்றின் பொருள் வேறுபாடு யாது?
21. "நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்" என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14**

22. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) கற்பொடி ஆ) உலகனைத்தும்
23. பொதுவியல் திணை விளக்குக.
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக. (ஏதேனும் ஒன்று)
அ) ஈன்ற ஆ) மலிந்த
25. விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.
அ) சேரன் - வில், சோழன் - ______, ______ - மீன்.
26. மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளை எழுதுக.
அ)  ஆ) 
27. திருக்குறள், உயிரெழுத்து - இச்சொற்களில் எவ்வகை ஈற்றெழுத்துகள் அமைந்துள்ளன?
28. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் எழுதுக.
உளை, உலை, உழை
29. புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
(கம்பு, மதி, இதழ், ஆழி, மை).
அ) கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம்.
ஆ) பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே.
30. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



அ) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்து வாழ்ந்து நாடு வந்தனர்.

## பகுதி - III
### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2x4=8**

31. "சலசு வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?
33. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?
34. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

### பகுதி - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2x4=8**

35. தமிழ்மொழியில் 'வரை' எனும் சொல் தரும் பொருள்கள் பற்றிக் கூறுக.
36. ஜீவாவின் பேச்சுநடை குறித்து சுந்தரராமசாமி கூறுவது யாது?
37. கவிஞர் மல்லார்மே பேச்சு மொழியைக் கவிதையில் பயன்படுத்தும் முறை பற்றி விளக்கம் தருக.
38. ஜீவா, சமூக நலனுக்காகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட முதல் நிகழ்வை எழுதுக.

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3x4=12**

39. பொருண்மொழிக் காஞ்சித் துறையைச் சான்றுடன் விளக்குக.
40. சொற்பொருள் பின்வருநிலையணியை சான்று தந்து விளக்குக. (அல்லது) பிறிது மொழிதலணியைச் சான்று தந்து விளக்குக.
41. மெய்ப்புத் திருத்துநர் பணிவேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்குக் கீழ்க்காணும் விவரங்களுடன் தன்விவரக்குறிப்பு ஒன்று எழுதுக. (பெயர், வயது, பாலினம், பிறந்த நாள், பெற்றோர், முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, அறிந்த மொழிகள், எடை, உயரம், குருதிவகை, கல்வித் தகுதி)
42. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றியமைக்க.
    அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.
    ஆ) காலத்துக்கேத்த மாரிப் புதுசுபுதுசா மொழி வடிவத்த மாத்தனும்.
    இ) தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்
    ஈ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.
43. தமிழாக்கம் தருக.
    அ) Nobody can hurt me without my permission.
    ஆ) An eye for an eye only ends up making the whole world blind.
    இ) You must be the change you wish to see in the world.
    ஈ) The weak can never forgive. Forgiveness is the attribute of the strong.
43. காது கேளாதவர்களுக்கான மாற்று வினா.
    பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

    தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன் என்று போற்றப்படும் சி.வை. தாமோதரனார் இலங்கை யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்து, தம் இருபதாவது வயதிலேயே 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலை உரையுடன் பதிப்பித்து வெளியிட்டு, அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்தார். 1868 - ஆம் ஆண்டு, தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையர் உரையையும் பின்னர் கலித்தொகை, இறையனார் அகப்பொருள், வீரசோழியம் உள்ளிட்ட பல நூல்களையும் செம்மையாகப் பதிப்பித்துப் புகழ் கொண்டார். அத்துடன் நில்லாது, கட்டளைக் கலித்துறை, நட்சத்திர மாலை, சூளாமணி வசனம் ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

    பெர்சிவல் பாதிரியார் அவரைத் தாம் நடத்திய 'தினவர்த்தமானி' என்னும் இதழுக்கு ஆசிரியராக்கினார். அரசாங்கத்தாரால், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப்பட்டார். 1884 - ஆம் ஆண்டில் புதுக்கோட்டை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

    1) 'தமிழ்ப் பதிப்புலகின் தலைமகன்' என்று போற்றப்படுபவர் யார்?
    2) தினவர்த்தமானி என்னும் இதழை நடத்தியவர் யார்?
    3) கல்லூரி, உயர்நீதிமன்றம், வரலாறு ஆகியவற்றிற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.
    4) அறிஞர்களின் கவனத்தைக் கவர அவர் ஆற்றிய பணி யாது?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக 3x6=18**

44. அ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



**(அல்லது)**

ஆ) 'பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவி' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்கவும்.

45. அ) சுந்தர ராமசாமியின் 'காற்றில் கலந்த பேராசை' என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

**(அல்லது)**

ஆ) 'இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன' என்ற கூற்றினை மெய்ப்பிக்கவும்.

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

**பகுதி - V**

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6**

44. அ) 'சிறகிலிருந்து' .......... எனத் தொடங்கும் காவியம் பாடலை எழுதுக.

ஆ) 'செயின்' என முடியும் குறட்பாவை எழுதுக.

## அரசு வினாத்தாள் - மார்ச் 2023

**மதிப்பெண்கள்: 90**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக 14x1=14**

1. பாயிரம் இல்லது ________ அன்றே.
   அ) பாடல் ஆ) காவியம்
   இ) கவிதை ஈ) பனுவல்
2. "காவடிச் சிந்துக்குத் தந்தை" என்று அழைக்கப்படுபவர்:
   அ) முருகன் ஆ) பாரதிதாசன்
   இ) பாரதியார் ஈ) அண்ணாமலையார்
3. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ________
   அ) ஊடுபயிர் ஆ) இயற்கை உரங்கள்
   இ) மண்புழு ஈ) இவை மூன்றும்
4. பகுபத உறுப்புகளுள் இடம் பெறும் அடிப்படை உறுப்புகள்:
   அ) பகுதி, சந்தி, விகாரம்
   ஆ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்
   இ) பகுதி, விகுதி
   ஈ) பகுதி, இடைநிலை, சாரியை
5. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை:
   அ) 27 ஆ) 9 இ) 13 ஈ) 3
6. ஆசிரியப்பாவிற்குரிய தளை ________ ஆகும்.
   அ) கலித்தளை ஆ)நிரையொன்றாசிரியத் தளை
   இ) வஞ்சித்தளை ஈ) இயற்சீர் வெண்டளை
7. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று:
   அ) சிறுதேர் ஆ) சாழல்
   இ) சிறுபறை ஈ) சிற்றில்
8. 'அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்' - யார், யாரிடம் கூறியது?
   அ) அமைச்சர், மன்னரிடம்
   ஆ) அமைச்சர், கவிஞரிடம்
   இ) மன்னர், அமுதவல்லியிடம்
   ஈ) மன்னர், அமைச்சரிடம்
9. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.
   அ) உதவியாளர் ஆ) காவலாளி
   இ) ஆசிரியர் ஈ) மேலாளர்
10. தமிழின் முதல் பா வடிவ நாடக நூல்:
    அ) நூல் தொகை விளக்கம்
    ஆ) இரகசிய வழி
    இ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு
    ஈ) மனோன்மணீயம்
11. விரைந்து கெடுபவன் யார்?
    அ) பிறருடன் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்
    ஆ) பிறரிடம் ஒத்துப் போனவன், தன் வலிமை அறிந்தவன், தன்னை உயர்வாக நினைப்பவன்
    இ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன்,தன்னை உயர்வாக நினைப்பவன்
    ஈ) பிறருடன் ஒத்துப் போகாதவன், தன் வலிமை அறியாதவன், தன்னை உயர்வாக நினைக்காதவன்
12. கலிங்க நாட்டார் சிங்கிக்கு அளித்த பரிசு:
    அ) பாடகம் ஆ) சிலம்பு
    இ) மெட்டி ஈ) தண்டை
13. 'பால் நிலாப்பாதை' என்ற நூலை எழுதியவர்:
    அ) ஏ.ஆர். ரகுமான் ஆ) இளையராஜா
    இ) கங்கை அமரன் ஈ) பாரதிராஜா
14. பொருத்தி விடை தேர்க:
    1) வெள்ளி வீதியார் (i) புறநானூறு
    2) போதனார் (ii) சி.சு. செல்லப்பா



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



3) வாடிவாசல் (iii) குறுந்தொகை
4) இளம்பெருவழுதி (iv) நற்றிணை

அ) (1)-(iii), (2)-(iv), (3)-(ii), (4)-(i)
ஆ) (1)-(i), (2)-(ii), (3)-(iii), (4)-(iv)
இ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)
ஈ) (1)-(ii), (2)-(iv), (3)-(i), (4)-(iii)

**பகுதி - II**

**பிரிவு - 1**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3x2=6**

15. இனம், மொழி குறித்த இரசூல்கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?
17. இங்கே ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள்
எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?
18. ‘செந்தூக்கு’ - விளக்கம் தருக.

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2x2=4**

19. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறு குறிப்பு வரைக.
20. நாட்டுப்புறங்களிலும், பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?
21. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14**

22. உயிரீறு, மெய்யீறு பற்றி எடுத்துக்காட்டுடன் எழுதவும்.
23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) அலர்ந்து ஆ) நெருங்கின
24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) இழுக்கின்றி ஆ) திருப்புகழ்
25. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.
அ) பழம் உண்டு பால் குடித்தான்
ஆ) காகம் கத்த மயில் கூவியது
26. மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
உலை, உளை, உழை
27. தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக.
அ) தாமரை தடாகத்தில் மீன்கள் துள்ளி பாய்ந்தது.
ஆ) ஆண்களை போலவே பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்.
28. கலைச் சொல்லாக்கம் - பொருள் தருக.
29. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.
ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்
30. சொல்லைப் பிரித்தும், சேர்த்தும் தொடரமைக்க.
கால்நடை அல்லது பிண்ணாக்கு

**பகுதி - III**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2x4=8**

31. சு. வில்வரத்தினம் "பாடத்தான் வேண்டும்" என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
33. விரும்பியதை அடைவது எப்படி? குறள்வழி விளக்குக.
34. ‘சேர நாடு செல்வ வளம் மிக்கது’ என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

**பகுதி - 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2x4=8**

35. வேதிக் கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
36. ‘சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும்’ - குறிப்பு வரைக.
37. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு வெளிப்படுத்தும் சமுதாயச் செய்திகள் யாவை?
38. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3x4=12**

39. சொல் பின்வரு நிலையணியை விளக்குக.
அல்லது
தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.
- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக் கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.
செந் நெல்லும் கரும்பும் விளைந்தனவே - நல்ல
தேன்பொழி மலர்களும் விரிந்தனவே
இன்னலும் பசியும் போயொழிக - தேசம்
எழிலுடன் கூடியே நலமுறுக
பிரிவுகள் பேசியே பூசலிட்ட - பழம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
FOR ORDERS CONTACT : 8925612359



பேதமை தனைத்தள்ளி அனைவருமே
ஒருதனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம் - நம்முள்
ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம்.

- பெ. தூரன்

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.

அ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

அல்லது

ஆ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

42. 'வா' என்ற வேர்ச் சொல்லை வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரில் அமைத்து எழுதுக.

43. தமிழாக்கம் தருக.

1. Culture does not make People. People Make culture.
2. You must be the change you wish to see in the world.
3. Education is the most Powerful weapon which you can use to change the world.
4. Looking at beauty in the world is the first step of purifying the mind.

43. செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.

தமிழிசை இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் ஆபிரகாம் பண்டிதர் தென்காசிக்கு அருகே உள்ள சாம்பவர் வடகரை என்னும் சிற்றூரில் பிறந்தவர். இளமையிலேயே புகைப்படக்கலை, அச்சுக்கலை, சோதிடம், மருத்துவம், இசை ஆகிய துறைகளில் பெருவிருப்பம் கொண்டு, நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதன் நுட்பங்களைப் பயின்றார். திண்டுக்கல்லில் ஆசிரியராகப் பணியாற்றும் போதே சித்த மருத்துவத்தில் சீரிய அறிவு பெற்று மக்களால் அன்புடன் 'பண்டுவர்' (மருத்துவர்) என்று அழைக்கப்பட்டார். சில ஆண்டுகள் பணியாற்றியபின் அதை விடுத்து முழுமையாகச் சித்த மருத்துவத்தில் கவனம் செலுத்தினார்; தஞ்சையில் குடியேறினார். மக்கள் அவரைப் 'பண்டிதர்' என அழைக்கத் தொடங்கினர். பண்டைத் தமிழ் நூல்களையெல்லாம் ஆழ்ந்து கற்று 'சங்கீத வித்தியா மகாஜன சங்கம்' என்னும் அமைப்பை உருவாக்கித் தமது சொந்தச் செலவிலேயே தமிழிசை மாநாடுகள் நடத்தினார். அனைத்திந்திய அளவில் நடந்த இசை மாநாடுகளுக்கும் சென்று உரையாற்றினார். அவருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் 'கருணாமிர்த சாகரம்', எழுபத்தோராண்டுகள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்தவர் ஆபிரகாம் பண்டிதர்.

**வினாக்கள்:**

1) தமிழிசை இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?
2) பண்டிதர் விரும்பிப் பயின்ற துறைகள் யாவை?
3) ஆபிரகாம் பண்டிதர் உருவாக்கிய அமைப்பு எது?
4) பண்டிதருடைய இசைத்தமிழ்த் தொண்டின் சிகரம் எது?

**பகுதி - IV**

**அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக 3x6=18**

44. அ) "மதீனா நகரம் ஒரு வளமான நகரம்" என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

**(அல்லது)**

ஆ) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்"

- இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.

45. அ) "சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே" என்னும் தலைப்பில் மேடைப் பேச்சிற்கான உரையை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) சுந்தரராமசாமியின் "காற்றில் கலந்த பேரோசை" என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.

46. அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீவிர் அறிவன யாவை?

**(அல்லது)**

ஆ) 'பிம்பம்' கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்கவும்.

**பகுதி - V**

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6**

47. அ) அம்ம வாழி.....எனத் தொடங்கும் குறுந்தொகை பாடல்

ஆ) செயல் - என முடியும் குறள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## எங்கள் வெளியீடுகள்

| | |
|---|---|
| பெங்குயின் தமிழ் அமுது | Std : VI - XII |
| பெங்குயின் வினா-வங்கி | Std : X, XI, XII |
| English Guide & Work Book | Std : VI - XII |
| English Practice Book & Question Bank | Std : X, XI, XII |
| அறிவியல், சமூக அறிவியல் | Std : IX, X |

ஆர்டர்கள் தொடர்புக்கு

8925612359 - 8643007972
7010414574 - 8248737898

பெங்குயின் பப்ளிகேஷன்

62 - C ஆண்டாள்புரம், மாயாண்டிப்பட்டி தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர் 626 125, விருதுநகர் மாவட்டம்

89256 12359 86430 07972
7010414574 - 8248737898

penguinpub.2014@gmail.com
www.penguinbooks.in

விலை: 59